# சந்திரநாத்

1146

சரத் சந்திர சட்டர்ஜி

தமிழாக்கியவர் :

ஆர். ஷண்முகசுந்தரம்

UNIVERSITY EXTENSION LIBRARY
11 AUG 1960
MADURAI

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை—4.

முதற் பதிப்பு : அக்டோபர்—1957.
முழு உரிமையும் இன்ப நிலையத்தாருக்கு.

விலை ரூபாய் இரண்டு

13002

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை—14.

# சரத் சந்திரரின் நூல்கள்

★

## இன்ப நிலைய வெளியீடுகள்

★

புதுமணப் பெண்

சந்திரநாத்

ரமா

ஞானதா

வைகுந்தன் உயில்

ஜமீந்தாரணி

அசலா

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

## முதல் அத்தியாயம்

சந்திரநாத்தின் தகப்பனுருடைய சிரார்த்த தினத்திற்கு முந்திய நாள்தான், ஏதோ அல்ப விஷயமாக அவன் சிறிய தகப்பனுர் மணிசங்கர் முகோபாத்யாயாவுக்கு அவனிடம் மனஸ்தாபம் உண்டாயிற்று. அதன் பலன் என்னவென்ருல், மறுநாள் மணிசங்கர் சந்திரநாத்தின் வீட்டுக்கு வந்திருந்து தம் தமையனுரின் சிரார்த்த காரியங்களை எல்லாம் ஒழுங்காகச் செய்தாரென்ருலும், அவர் அங்கே ஓர் அன்னப் பருக்கைகூட வாயில் போடவில்லை; தமது வீட்டு ஜனங்களையும் சாப்பிட விடவில்லை. பிராமண போஜனம் முடிந்த பிறகு சந்திரநாத் இரு கரங்களையும் குவித்துக்கொண்டு, "சித்தப்பா, நீங்கள் எனது தந்தைக்குச் சமம்; நான் உங்களுடைய புத்திரன். நான் ஏதாவது தப்பிதம் செய்திருந்தாலும், இந்தத் தடவை என்னை மன்னியுங்கள்" என்ருன்.

தந்தைக்குச் சமமான மணிசங்கர், "அப்பா, நீங்களெல்லாம் கல்கத்தா பட்டணத்திலிருந்து பி.ஏ., எம்.ஏ., பாஸ் செய்து வித்வானுகியிருக்கிறீர்கள், ஆனுல் நாங்களோ சுத்தக் கட்டுப் பெட்டிகள். உங்களுக்கும்

நமக்கும் ஒத்து வராது. ‘ வேரைப் பிடுங்கி விட்டுக் கிளை களுக்குத் தண்ணீர் விடுவதுபோல ’ என்று தெரியாமலா பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள் ” என்று கூறி விட்டார்.

இந்த சாஸ்திர சம்மதமான வாக்கியத்திற்கும், தற்கால வித்வான்களுக்கும், பழைய காலத்துக் கட்டுப் பெட்டி களுக்கும் நெருங்கிய சம்பந்தம் எதுவும் கிடையாதுதான். இருந்தாலும் அதிலிருந்து மணிசங்கரின் மனக் கருத்தை அறிந்துகொண்டு சந்திரநாத் தனக்குள், “ இனி நான் எனது சித்தப்பாவிடம் எவ்விதமான சம்பந்தமும் வைத்துக் கொள்வதில்லை ” என்று சபதம் செய்து கொண் டான். இவனுடைய தந்தை உயிரோடிருந்த காலத்தில் கூட அண்ணன் தம்பிகளுக்குள் அப்படி ஒன்றும் விசேஷ மான அன்பு இருக்கவில்லை. சாப்பாட்டு உறவு மட்டும் விடாமல் இருந்து வந்தது. இப்பொழுது அதுவும் நின்றுபோய்விட்டது. சந்திரநாத்தின் தகப்பனார் ஏராள மான செலவும் வைத்துவிட்டுப் போயிருந்தார். ஆனால், பந்து ஜனங்கள் அதிகம் பேரில்லை. சந்திரநாத்திற்கு ஒரே ஒரு மாமன் இருந்தார்; அவருக்குக் குழந்தை குட்டி ஒன்றும் கிடையாது. அவரும் மாமியும் மட்டுந்தான் வீட்டில் இருந்தார்கள்.

வீடு முழுதும் ஜன சந்தடியற்றுக் கிடந்தது. சந்திர நாத் தனது குமாஸ்தாவைக் கூப்பிட்டு, “ நான் சில நாளைக்கு அயலூர் செல்கிறேன். நீங்கள் குடும்பத்துக் காரியங்களை எப்போதும் போல் பார்த்துக்கொண்டு இருங்கள். நான் திரும்பி வருவதற்குக் கொஞ்ச காலம் ஆகலாம் ” என்றான்.

சந்திரநாத்தின் மாமா விரஜகிஷோர் இதைத் தடுத்து, “ இப்பொழுது நீ வெளியில் போகவேண்டிய அவசிய

மென்ன? உன் மனது கெட்டிருக்கிறது; ஆகையால் வீட்டிலேயே இருப்பதுதான் நல்லது" என்றார்.

ஆனால் சத்திரநாத் மாமாவின் வார்த்தையைக் கவனிக்கவில்லை. அவன் குடும்பத்தின் எல்லாப் பொறுப்புகளையும் தனது குமாஸ்தாவிடம் ஒப்புவித்து, வீட்டை விரஜகிஷோர் வசம் விட்டுவிட்டு, மிகவும் சாதாரண மனிதனைப்போல் அயலூருக்குக் கிளம்பிவிட்டான்; தன்னுடன் ஒரு வேலைக்காரனைக்கூட அழைத்துச் செல்லவில்லை.

விரஜகிஷோரை அவரது மனைவி ஹரிகாலி தனிமையில் அழைத்துச் சென்று, "நீங்கள் ஒரு காரியம் செய்யாமல் போய்விட்டீர்களே!" என்றாள்.

விரஜகிஷோர், "என்ன?" என்றார்.

"அயலூருக்குப் போனாரே—உம் மருமான்—அப்பொழுது நீர் ஏன் அவரிடம் ஒன்றும் எழுதி வாங்கிக் கொள்ளவில்லை? மனிதனுக்கு எப்பொழுது என்ன நேரிடும் என்று யார் கண்டார்கள்? அயலூரில் திடீரென ஏதாவது நல்லது கெட்டது ஏற்பட்டுவிட்டால், நீர் எங்கே போய்த் திண்டாடுவீர்?" என்றாள்.

விரஜகிஷோர் கரத்தினால் காதைப் பொத்தி, நாக்கைக் கடித்துக்கொண்டு, "ராம ராமா, இம்மாதிரி வார்த்தையை வாயினால் சொல்லவே சொல்லாதே!" என்றார்.

ஹரிகாலி கோபமடைந்தாள். "நீர் மூடம்; ஆகையால்தான் இந்த வார்த்தையை வாயினால் சொல்ல வேண்டியிருக்கிறது. நீர் புத்திசாலியாயிருந்தால் நான் எதற்குச் சொல்லவேண்டும்?" என்றாள்.

ஆனால், இரண்டு மூன்று நாளில் விரஜகிஷோருக்கு மனைவியின் கிருபையினால் அவள் சொன்னது உண்மை

தான் என்று தெரிய வந்தது. அப்பொழுது அவர் பச்சாத்தாபப்பட்டார்.

ஒரு வருஷம் வரையிலும் சந்திரநாத் அநேக இடங்கள் தனியாகவே சுற்றினன். கயாவுக்குச் சென்று தனது காலஞ் சென்ற தந்தைக்குச் சிரார்த்தம் செய்தான். அதற்குப் பிறகுகூட அவனுக்கு வீடு திரும்புவதற்கு விருப்பமில்லை. " காசிக்குச் சென்று சில நாள் இருக்கலாம் ; பிறகு எப்படியோ பார்த்துக் கொள்ளலாம் " என்று அவன் யோசித்தான். காசியில் முகோபாத்யாயா வம்சத்தைச் சேர்ந்த பண்டா ஹரிதயால் கோஷால் இருந்தார். சந்திரநாத் ஒரு நாள் மத்தியானம் கையில் 'கேன்வாஸ்' பை ஒன்றை எடுத்துக்கொண்டு அவருடைய வீட்டை அடைந்தான். சந்திரநாத்திற்குக் காசி ஒன்றும் புதிய இடமல்ல. இதற்கு முன் பல தடவை அவன் தனது தந்தையுடன் இங்கே வந்திருக்கிருன். ஹரிதயாலுக்குக்கூட அவனை நன்ருய்த் தெரியும். அவன் திடீரென இவ்விதம் வந்து சேரவும், ஹரிதயால் கொஞ்சம் ஆச்சரியமடைந்தார். சந்திரநாத்திற்காக மேல்மாடியில் ஓர் அறையை ஒழித்துக் கொடுத்தார்.

அந்த அறையின் உள் பக்கத்தில் ஒரு ஜன்னல் இருந்தது. அதிலிருந்து பார்த்தால் சமையல் அறையின் ஒரு பகுதி தெரியும். சந்திரநாத் அடிக்கடி ஆவலுடன் அந்தப் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த ஆவல் சமையல் சாமான்களைப் பார்க்க வேண்டுமென்றல்ல ; ஆனல் சமையல் செய்பவரைப் பார்க்க வேண்டுமென்பது தான்.

சமையல் வேலை செய்து கொண்டிருந்த விதவை அழகாயிருந்தாள் ; ஆனல் அவளுடைய முகம் சோக

நெருப்பில் வெந்திருப்பதுபோலிருந்தது. யௌவனம் இருக்கிறதா அல்லது போய்விட்டதா என்று சொல்வதற்கு அடையாளம் ஒன்றும் தென்படவில்லை. அவள் மௌனமாகத் தனது வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள். கூடவே ஒரு பத்து வயதுச் சிறுமி சமையல் காரியங்களுக்கு ஒத்தாசை செய்துகொண்டிருந்தாள். சந்திரநாத் இந்தக் காட்சியைத்தான் அப்படித் தனியாக ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

முதலில் கொஞ்ச நாள் வரையிலும் அந்த விதவை ஸ்திரீ சந்திரநாத்தின் எதிரில் வரவில்லை. சாதம் பரிமாறிவிட்டு ஒரு புறம் ஒதுங்கிக் கொள்வாள். ஆனால், பிறகு மெள்ள மெள்ள எதிரில் வரத் தொடங்கினாள். சந்திரநாத் வயதில் அவளை விடச் சின்னவன் என்பது ஒரு காரணம். அதோடு அதிக நாள் ஒரே இடத்தில் வசித்தபடியால் கொஞ்சம் உள்ளன்பும் ஏற்பட்டது. இதனால் நாளடைவில் அவள் சந்திரநாத்துக்குச் சாதம் போடுவதற்காக அருகில் வந்து உட்காரவும் ஆதரவுடன் உணவு பரிமாறவும் தொடங்கினாள்.

சந்திரநாத்திற்குத் தனது தாயாரின் ஞாபகம் கிடையாது. குழந்தைப் பருவத்தில் தாயை இழந்த சந்திரநாத் தந்தையிடமே செல்வமாக வளர்ந்தான். தந்தை, தாய் ஸ்தானத்தை எவ்வளவோ பூர்த்தி செய்து வைத்திருந்தாராலும், 'கோமளமான' இந்த வாத்ஸல்யத்தை அவரிடம் கண்டிருக்க முடியாதல்லவா?

தந்தையின் மரணத்தால் சந்திரநாத்தின் இருதயத்தில் சூன்யமடைந்திருந்த இடம் இப்பொழுது நிறைந்ததோடல்லாமல், ஒரு புதிய மாத்ரு சிநேகத்தின் ரசமும் அவனைப் பரவசப்படுத்தியது.

ஒரு நாள் சந்திரநாத் ஹரிதயாலிடம், "உங்களுக்குப் பந்து வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லையென்று நினைத்திருந்தேன்; இவர்கள் யார்?" என்று கேட்டான்.

" இவள் பிராமணத்தி " என்ருர் ஹரிதயால்.

" உங்களுக்குப் பந்துவா ?"

" இல்லை."

" பின், இவர்கள் எப்படி இங்கே வந்து சேர்ந்தார்கள் ?"

" அது ஒரு பெரிய கதை. மூன்று வருஷத்திற்கு முன் புருஷனையும் பெண்ணையும் கூட்டிக்கொண்டு, கங்கா ஸ்நானம் செய்ய வந்தாள். காசியில் கணவன் இறந்து விட்டான். யாரிடமாவது போய் இருக்கலாமென்ருலோ ஊரில் உற்ருர் உறவினர் ஒருவரும் கிடையாது. அப்புறம் நீ தான் பார்க்கிருயே."

" நீங்கள் எங்கிருந்து கூட்டி வந்தீர்கள் ?"

" மணிகர்ணிகா கட்டத்தில் பிச்சை வாங்கிக் கொண்டிருந்தாள். அப்போது பார்த்து அழைத்து வந்தேன்."

சந்திரநாத் சிறிது நேரம் யோசித்துவிட்டு, " இவளுக்கு எந்த ஊர் என்று உங்களுக்குத் தெரியுமா ?" என்று கேட்டான்.

" சரியாகத் தெரியாது. நவத்வீபத்துக்கு அருகில் ஏதோ ஒரு கிராமம். இவ்வளவுதான் தெரியும்."

# இரண்டாம் அத்தியாயம்

இதற்கு இரண்டு நாளைக்குப் பிறகு சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது சந்திரநாத் பிராமண ஸ்திரீயின் முகத்தைப் பார்த்துக்கொண்டு, " நீங்கள் யார் ?" என்று கேட்டான்.

பிராமண ஸ்திரீயின் முகம் வெளுத்தது. " இந்தக் கேள்வி எதற்காகக் கேட்கப்பட்டது " என்று அவள் அறிந்து கொண்டாள். ஆனால், காதில் விழாததுபோல அவசரமாக எழுந்து நின்று, "பால் கொண்டு வரட்டுமா?" என்றாள்.

பால் அப்படி அவசரமாகக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. சிறிது யோசிப்பதற்காகவே அவள் சமையல் அறைக்கு வந்தாள். அங்கே சரயூ பாலை ஒரு பாத்திரத்திலிருந்து இன்னொரு பாத்திரத்தில் ஊற்றி ஆற்றிக்கொண்டிருந்தாள். தாயார் ஒரு முறை மகளின் முகத்தைப் பார்த்தாள். பிறகு பால் பாத்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, ஒரு நீண்ட மூச்சு விட்டு மனதிற்குள்ளாகவே, " ஹே, தீனபந்து ! ஹே, அந்தர்யாமி ! நீ என்னை மன்னிக்க வேண்டும் " என்று சொல்லிக் கொண்டாள். இதற்கப்புறம் அவள் பால் பாத்திரத்தைக் கொண்டு வந்து சந்திரநாத்தின் எதிரில் வைத்துவிட்டு, அருகில் உட்கார்ந்து கொண்டாள். சந்திரநாத் மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டான்.

ஒவ்வொன்றாக எல்லா விஷயங்களையும் கேட்டுத் தெரிந்துகொண்ட பிறகு, கடைசியாக, " உங்கள் வீட்டிற்கு நீங்கள் ஏன் போகவில்லை ? அங்கே யாருமே இல்லையா ?" என்று கேட்டான்.

" ஒரு பிடி சோறு போடுகிறவர்கள் அங்கே யாரும் இல்லை."

சிறிது நேரம் வரையிலும் சந்திரநாத் தலை குனிந்தவாறே யோசித்துக்கொண்டிருந்தான். மறுபடி, "உங்கள் பெண்ணுக்குக் கல்யாணம் எப்படிச் செய்வீர்கள் ?" என்று கேட்டான்.

பிராமண ஸ்திரீ மெதுவாக, " விச்வேச்வரன் தான் அறிவார் !" என்றாள்.

சந்திரநாத் அதற்குள் சாப்பிட்டு முடித்துவிட்டான். அவன் தலை நிமிர்ந்து, " நான் இன்னும் உங்கள் மகளை நன்றாகப் பார்க்கவில்லை ; ஆனால் ரொம்பவும் சாந்தமும் நல்ல குணமுமுடையவள் என்று ஹரிதயால் சொல்கிறார். பார்ப்பதற்கு லட்சணமாயிருக்கிறாளல்லவா ?" என்றான்.

பிராமண ஸ்திரீ சிரித்துக்கொண்டு, " நான் பெற்றவள். என் குழந்தையைப் பற்றி நான் சொன்னால் நன்றாயிருக்குமா ? ஆனாலும் சரயூ 'அவலட்சணம்' என்று யாருமே சொல்ல மாட்டார்கள் " என்றாள். மனதிற்குள்ளாக, " காசிக்கு எத்தனையோ பேர் வருகிறார்கள், போகிறார்கள், நானும் பார்த்திருக்கிறேன். ஆனால், சரயூவைப்போல் அழகான பெண்ணைப் பார்த்ததில்லை " என்று சொல்லிக்கொண்டாள்.

இதற்கு மூன்று நான்கு நாளைக்குப் பிறகு ஒரு நாள் காலை சந்திரநாத், சரயூவை நன்றாகப் பார்த்தான். " இவ்வளவு அழகு உலகத்திலேயே அபூர்வம் " என்று அவனுக்குப்பட்டது. சரயூ சமையல் அறையில் உட்கார்ந்து காய்கறி நறுக்கிக்கொண்டிருந்தாள். அப்போது அங்கு யாருமில்லை. தாயார் கங்கா ஸ்நானம் செய்யச் சென்றிருந்தாள். ஹரிதயால் எப்போதும் போல யாத்திரீகர்

களைத் தேடுவதற்கு வெளியில் போயிருந்தார். சந்திரநாத் அவள் அருகே சென்று நின்றுகொண்டு, " சரயூ !" என்ருன்.

சரயூ திடுக்கிட்டாள். நாணிக் கோணிக்கொண்டு, " என்ன ?" என்ருள்.

" உனக்குச் சமையல் செய்யத் தெரியுமா ?"

சரயூ தலை குனிந்தபடியே, " தெரியும் " என்ருள்.

" என்ன என்ன செய்யத் தெரியும் ?"

சரயூ ஒன்றும் சொல்லவில்லை. ஏதாவது சொன்ருல் பேச்சு வளர்ந்துகொண்டே போகுமென்று பயந்தாள்.

சந்திரநாத் அவளுடைய மனேபாவத்தைத் தெரிந்து கொண்டான். ஆகையால் பேச்சை மாற்றினன். "நீயும் உனது தாயாரும் இரண்டு பேரும்தான் இங்கு வேலை செய்கிறீர்களா ?" என்று கேட்டான்:

சரயூ, " ஆமாம் " என்ருள்.

" உனக்கு மாதம் எவ்வளவு கிடைக்கிறது ?"

" அம்மாவுக்குத்தான் சம்பளம். எனக்கு ஒன்று மில்லை. சாப்பாடு மாத்திரம்தான்."

" நீ சாப்பாட்டிற்காகத்தான் வேலை செய்கிருயா ?"

சரயூ பேசாமலிருந்தாள்.

சந்திரநாத், " இங்கே பார். நான் உனக்குச் சாப்பாடு போட்டால், நீ எனக்குக்கூட வேலை செய்வாயா ?" என்ருன்.

சரயூ மெதுவாக, " அம்மாவிடம் கேட்கிறேன் " என்ருள்.

" ஆம். அவசியம் கேட்கவேண்டும்."

அன்று சந்திரநாத், ஹரிதயால் கோஷாலிடம் இரண்டொரு வார்த்தை கேட்டுவிட்டுத் தன் குமாஸ்தாவுக்கு இவ்விதம் கடிதம் எழுதினான்.

"நான் இப்பொழுது காசியில் இருக்கிறேன். இங்கேயே ஒரு மாதத்திற்குள் எனது விவாகத்தை நடத்துவதென்று நிச்சயம் செய்திருக்கிறேன். மாமாவிடம் இந்த விஷயத்தைச் சொல்லவும். கொஞ்சம் பணமும், சில நகைகளும், இன்னும் வேண்டிய முக்கியமான சாமான்களும் எடுத்துக்கொண்டு நீ சீக்கிரமாக இங்கே வந்து சேரவும்."

அந்த மாத முடிவில் சரயூவுக்கும் சந்திரநாத்துக்கும் விவாகம் நடந்தேறியது.

கொஞ்ச காலத்துக்குப் பிறகு, புருஷன் வீட்டிற்குப் போக வேண்டிய சமயத்தில் சரயூ அழுதுகொண்டு, "அம்மாவின் கதி என்ன?" என்றாள்.

"ஏன் நம்மோடு வரட்டுமே?"

இந்த விஷயம் பிராமண ஸ்திரீயின் காதுக்கு எட்டியது. அவள் தனது மகளைத் தனியாக அழைத்துப் போய், "சரயூ, நீ புக்ககம் போன பிறகு, எப்போதாவது என்னையும் நினைத்துக் கொள். ஆனால், வாயினால் என் பெயரை உச்சரிக்காதே! நான் உயிரோடிருக்கும் வரையில் காசியை விட்டு எங்கும் போகமாட்டேன். மறுபடி எப்பொழுதாவது நீ இங்கு வர நேர்ந்தால், சந்தித்துக் கொள்ளலாம்" என்றாள்.

சரயூ அழத் தொடங்கினாள்.

தாயார் முந்தானையால் புதல்வியின் முகத்தைத் துடைத்து, அவள் அழுவதைத் தடுத்து, உருக்கத்துடன்,

“ மகளே, எல்லா விஷயங்களும் தெரிந்திருந்தும், யாராவது இவ்விதம் அழுவார்களா ?” என்றாள்.

மகள் தாயாரின் மடியில் முகத்தைப் புதைத்து அழுது கொண்டே, “ அம்மா ” என்றாள்.

தாயார், “ உன் அம்மாவை நீ மறந்துவிட வேண்டும், கண்ணே ! அதுதான் அம்மாவுக்கு நீ செய்யும் பெரிய உபகாரம் ” என்றாள்.

சந்திரநாத் எவ்வளவோ வேண்டிக்கொண்டும் பிராமண ஸ்திரீ, “ நான் காசியை விட்டு வேறு எங்கும் வர முடியாது ” என்று சொல்லிவிட்டாள். சந்திரநாத், “ உங்களுக்கு வேறு எங்கும் போவதற்கு இஷ்டமில்லா விட்டால், காசியிலேயே இருங்கள். ஆனால், கூடுமான வரையிலும் சுதந்திரமாக இருக்கலாமே !” என்றான்.

ஆனால், அவள் இந்த வார்த்தையையும் ஏற்றுக் கொள்ளாமல், “ ஹரிதயால்ஜி என்னைச் சொந்தப் பெண்ணுக்குச் சமமாகப் பாவித்து வருகிறார். பெரிய கஷ்ட காலத்தில் எனக்கு அவர் அடைக்கலம் கொடுத்தார். நானும் அவரை என் தந்தைக்குச் சமமாகவே எண்ணி பக்தி வைத்திருக்கிறேன். அவரை நான் எவ்விதமும் பிரிய முடியாது ’ என்றாள்.

இந்த அபாக்யவதியிடமும் கொஞ்சம் சுயமரியாதை இருக்கிறதென்று சந்திரநாத் அறிந்துகொண்டான். இவள் யாருடைய தயவிற்கும் அடிமையாகமாட்டாள் என்று நிச்சயித்து, சரயூவை மட்டும் அழைத்துக்கொண்டு தன் சொந்த ஊருக்குத் திரும்பினான்.

சந்திரநாத்தின் பெரிய மாளிகையைக் கண்டு சரயூ பிரமித்துப் போனாள்.

எத்தனை பண்டம் பாடிகள்! எத்தனை ஆடை ஆபரணங்கள்! அவளுடைய ஆச்சரியத்திற்கு அளவில்லை. "இவர் என் பேரில் எவ்வளவு கருணை வைத்திருக்கிறார்!" என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டாள்.

சந்திரநாத் தன் இளம் மனைவியிடம், "வீடு வாசல் எல்லாம் பார்த்தாயல்லவா? பிடித்திருக்கிறதா?" என்று அன்போடு கேட்டான். சரயூ மிகுந்த வெட்கத்துடன் முத்தானையால் முகத்தை மூடிக்கொண்டு, தலை குனிந்தாள். சந்திரநாத் மனைவியின் உள்ளக் கருத்தை அறிய விரும்ப வில்லை; அவளது குரலைக் கேட்க விரும்பினான். அவன் இரு கரங்களாலும் சரயூவின் முகத்தை நேராக நிமிர்த்தி, "சொல்லு, பிடித்திருக்கிறதா?" என்றான்.

நாணத்தால் சரயூவின் முகம் சிவந்தது. பல தடவை கேட்டதன் பேரில், எவ்விதமோ சமாளித்துக்கொண்டு, "எல்லாம் உங்களுடையதுதானே?" என்று வினவினாள்.

சந்திரநாத் சிரித்துக்கொண்டு, அவள் வார்த்தை களையே திருப்பி, "ஆம், எல்லாம் உன்னுடையதுதான்!" என்றான்.

## மூன்றும் அத்தியாயம்

இதற்குப் பிறகு கொஞ்ச காலம் எப்படியோ கழிந்தது. இப்பொழுது சரயூ பெரியவளாகிவிட்டாள். அவள் தன் புருஷனுக்கு வேண்டிய பணிவிடை, சிசுருஷைகளைச் செய்யக் கற்றுக்கொண்டுவிட்டாள். "நான் வாய்விட்டுச் சொல்வதற்கு முன்னமேயே என் மனதிலிருப்பதைச் சரயூ அறிந்துகொண்டு விடுகிறாளே!" என்று சந்திரநாத் வியந்தான். அவள் ஒரு சாதாரண வேலைக்காரி என்றே வைத்துக்கொண்டாலும், அவளைப்

போன்ற இன்னொரு வேலைக்காரி உலகம் முழுதும் தேடிப் பார்த்தாலும் கிடைக்கமாட்டாள் என்று அவன் உணர்ந் தான். ஆனால், வேலைக்காரியாக வைத்துக் கொள்வதற்கு யாரும் கல்யாணம் செய்துகொள்வதில்லை ; மனைவியிட மிருந்து வேறு சில விஷயங்களும் எதிர்பார்க்கிறார்கள். பார்க்கப்போனால் ஒரு மனைவி முழுக்க முழுக்க வேலைக்காரி போலவே நடந்துகொள்வது சரியல்ல என்று தோன்று கிறது. சரயூ தன்னுடைய காரியங்களையெல்லாம் அநாயாச மாகவும், இனிமையுடனும் செய்துகொண்டிருந்தாள். ஆனால் தம்பதிகளுக்குள் எது மிகவும் பரிபூர்ணமானதும், ஆழ்ந்ததுமான சுகமோ, அதை அவர்கள் அடையவில்லை. இதனால் சந்திரநாத் அவளை எவ்வளவோ அன்புடன் நடத்தியும், அவர்களுக்கிடையே ஒரு வகையான பிளவு இருந்துகொண்டு வந்தது.

ஒருநாள் திடீரென்று சந்திரநாத் அவளைப் பார்த்து, “ஏன் இப்படிப் பயந்து பயந்து சாகிறாய்? நான் உன்னைச் சரியாக நடத்தவில்லையா, என்ன ?” என்று கேட்டான்.

“இந்தக் கேள்விக்குப் பதில் உங்களுக்குத் தெரி யாதா ?” என்று சரயூ தன் மனதுக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள். இதற்குப் பிறகு பின்வருமாறு நினைத்தாள் : “நீங்கள் தெய்வம், மகான் ; ஆனால் நான் ?—நான் வெறுக்கத்தக்கவள். நீங்கள் அடைக்கல புருஷன் ; நான் உங்களை அண்டினவள். நீங்கள் ஒரு பெரிய கொடை யாளி ; நான் ஒரு பிச்சைக்காரி.”

சரயூவினுடைய ஹிருதயத்தில் நன்றி விசுவாச உணர்ச்சி பரிபூர்ணமாக நிறைந்திருந்தது. இதனால் அவள் சந்திரநாத்தின் மீது கொண்டிருந்த காதல் தலைகாட்ட முடியவில்லை. அந்தக் காதல் பூமிக்குள் ஓடும் நீரோடையைப் போல அவளுடைய ஹிருதயத்தின்

மிகவும் ஆழமான பாகத்தில், மெள்ள மெள்ள ஓடிக் கொண்டிருந்தது. தன்னிஷ்டப்படி அதனல் நடக்க முடியவில்லை. அது இம்மாதிரி வெளியில் தெரியாமல் ஓடிக்கொண்டிருந்தது. அதனல் சந்திரநாத்துக்கு அது இருக்கும் விவரமே தெரியவில்லை. எப்படி ஓர் அபாக்கிய சாலி தன் வாழ்க்கையில் பகவானைத் தேடியலைந்தும் கிடைக்கப் பெருமல் இருக்கிருனே, அதேமாதிரி சந்திர நாத்துக்கும் சரயூவின் ஹிருதயத்தின் உள்ளே இருந்த காதலைக் காண முடியவில்லை. ஆனல், தீபத்தின் வெளிச் சத்தில், பத்மம் போன்ற அவளுடைய விசாலமான கண்களில் இருந்து கண்ணீர் வழிந்ததைக் கண்டதும், மனேசஞ்சலமடைந்து, அவளைச் சடாரென்று தன் பக்கம் பற்றி இழுத்தான். சரயூவின் முகம் அவனது மார்பைத் தழுவியது. “சட், சட்! எதற்காக அழுகிருய் ?” என்று சொல்லித் தன் இரு கைகளாலும் அவளுடைய முகத்தைத் தூக்கிப் பிடித்தான். கண்ணீர் மல்கும் விழிகளுடன் சரயூ ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

சந்திரநாத், “கொஞ்சம் என்னைப் பாரேன்” என்ருன். சரயூ பயத்துடன் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு சந்திரநாத் பெருமூச்சு விட்டு, “சரயூ, நீ மிகவும் பயப்படுகிருய். அதனல்தான் நீ என்னைப் பார்க்க மறுக்கிருய். ஆனல், நீ என்னைப் பார்த்தால் ரொம்ப நன்ருயிருக்கும். நல்லது, ஒன்று செய். நான் தூங்கிக்கொண்டிருக்கும்போது, நன்ருகப் பார்த்துக் கொள். அப்பொழுது உனக்குப் பயம் உண்டாகாது. நீதான் எனது மார்பின் மேலேயே சிரம் வைத்திருக் கிருயே. உள்ளே என் ஹிருதயம் அடித்துக்கொள்வது உன் காதில் விழவில்லையா ? சரயூ, நீ இது வரையிலும்

என்னை அறிந்து கொள்ளவில்லை. அது எனக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கிறது" என்றான்.

சரயூவால் பேச முடியவில்லை. அவள் கணவன் பாதங்களை மனதினால் தியானித்து, "நான் தங்கள் அடிகளில் சரணடைந்த அடிமை. வேலைக்காரியை எப்போதும் வேலைக்காரி அந்தஸ்திலேயே வைத்திருக்க வேண்டும்" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்

## நான்காம் அத்தியாயம்

சந்திரநாத்தின் மாமி ஹரிகாலிக்கு இப்பொழுது துளிக்கூடச் சுகம் இல்லை; ஈச்வரன் அவளை இம்மாதிரி கஷ்டத்தில் ஆழ்த்திவிட்டான். சிலருக்கு இந்த உலகம் முட்களால் நிறைந்த வனாந்தரம்போலத் தெரிகிறது. அவர்களுக்கு இவ்வனாந்திரத்தில் தங்களுக்காக ஒரு வழி தேட வேண்டியிருக்கிறது. சிலருக்கு மார்க்கம் கிடைக்கிறது; வேறு சிலருக்கு மார்க்கம் கிடைப்பதில்லை. ஹரிகாலியும் வெகு நாளாக இந்த உலகமெனும் வனாந்தரத்தில் தனக்காக ஒரு சூக்ஷ்மமான மார்க்கத்தைத் தேடிக்கொண்டிருந்தாள். சந்திரநாத்தின் தந்தையின் மரணத்தினால் அவளுக்கு ஒரு நல்ல வழியும் கிடைத்திருந்தது; இருந்தும் இந்தத் திடீர் விவாகம், நாட்டுப் பெண் சரயூ, சந்திரநாத்தின் அளவுகடந்த புது மோகம், இவைகளெல்லாம் அந்த நேரான மார்க்கத்தில் கல்லைப் போட்டு வழியை அடைத்துவிட்டன. ஹரிகாலியின் சகோதரி மகள் ஒருத்தி இருக்கிறாள். அவளுக்கு இப்பொழுது பத்து வயது ஆகிறது. இப்பொழுது இந்த விஷயங்களையெல்லாம் மறந்துவிட வேண்டியதுதான். இந்தக் காரணங்களால்தான் ஹரிகாலியின் மனச் சந்துஷ்டி மறைந்துவிட்டது என்று சொன்னோம்.

ஹரிகாலிதான் இன்னும் வீட்டு எஜமானி. அவளுடைய கணவன்தான் வீட்டு எஜமானர் என்பதில் சந்தேகமில்லை. எல்லா விஷயங்களும் முன்போலவேதான் நடபெறுகின்றன. இன்னும் சரயூ அவளுடைய முகத்தைத் தான் எதிர்பார்க்கிருள். அவள் எந்தவிதமான அதிருப்தி யையோ அல்லது கர்வத்தையோ வெளிப்படுத்துவ தில்லை. பார்வைக்கு, அவள் ரொம்ப சாதாரண ஜந்து போல் தெரியும். இந்தக் குடும்பத்தில் அவளுக்குக் கொஞ்சம் அதிகாரமும் ஆக்ஞையும் இருந்தபோதிலும், அதுமற்றவர்களின் கிருபையால் கிடைப்பதுபோலிருந்தது. ஹரிகாலியின் கணவர் அவளைப் பார்த்ததும் சந்தோஷ மடைந்துவிடுவார். 'நம்முடைய நாட்டுப் பெண் இருக் கிருளே—' என்று பேச ஆரம்பித்தாலே போதும், ஹரிகாலியின் கண்கள் கோபத்தால் சிவந்துவிடும். "போதும் போதும், இருக்கட்டும், சும்மா இரும். தெரி யாத விஷயத்தில் தலையிடாதேயும். உம்முடைய கையில் ஒப்புவித்ததற்குப் பதிலாக என் பெற்ளுேர் என் கையையும் காலையும் கட்டி ஆற்றில் வீசி எறிந்திருந்தால் நன்ரு யிருக்கும் !" என்று பாட ஆரம்பித்துவிடுவாள்.

அவ்வளவுதான் ; விரஜகிஷோர் வாடிய முகத்துடன் அங்கிருந்து எழுந்து போய்விடுவார்.

ஹரிகாலிக்குக் கிட்டத்தட்ட முப்பது வயது ஆகி விட்டது. ஆனல், சரயூவுக்கு இன்னும் பதினறு வயது கூடப் பூர்த்தியாகவில்லை. ஆனல், அவள் வந்ததிலிருந்து இருவருக்கும் மனதிற்குள்ளாகவே யுத்தம் நடந்துகொண் டிருந்தது. எவ்வளவோ முயன்றும் ஹரிகாலி வெற்றி யடையவில்லை. ஒரு சின்ன 'வாண்டு'க்கு இத்தனை சக்தியா என்று ஹரிகாலி ஆச்சரியமடைந்தாள். இந்த உள் யுத்தத்தில் சரயூதான் வெற்றி அடைந்தவள் ;

ஆனால், அவள் அந்த வெற்றியை நிலைநாட்டவில்லை. அவள் தனது வெற்றியைக் கருதாமல் ஜயிக்கப்பட்ட பாகத்தை ஹரிகாலிக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டாள். ஹரிகாலி என்னவோ தோற்றவள்தான் என்ற விஷயம் வெளியார்களுக்கு ஒன்றும் தெரியாது.

சரயூ ஊமையுமல்ல, பைத்தியமுமல்ல என்று ஹரிகாலிக்குத் தெரியும். எவ்வளவோ கசப்பான வார்த்தைகளுக்குக்கூட அவள் தலை குனிந்துகொண்டு, மௌனமாக, ஹரிகாலி ஒரேயடியாக ஸ்தம்பித்துப் போகிற மாதிரி பதிலளிக்க முடியும். அவள் அந்தப் பெண்ணிடம் சமாதானமும் செய்துகொள்ள முடியவில்லை; அவளைத் தன்னுடைய மனுஷியாகவும் பாவித்துக்கொள்ள முடியவில்லை. சரயூ சண்டைக்காரியாகவோ அல்லது வாயாடியாகவோ, சுயநலக்காரியாகவோ, அல்லது தயவற்றவளாகவோ, பொறுமைக்காரியாகவோ அல்லது கர்வியாகவோ இருந்தால், ஹரிகாலி தனக்காக ஒரு வழி சுலபமாகத் தேடிக்கொண்டிருக்கலாம். ஆனால், ஹரிகாலிக்கு மற்றவர்களிடம் போய்க் 'கருணைப் பிச்சை' கேட்க வேண்டிய சந்தர்ப்பமே ஏற்படவில்லை; சரயூவே, "இந்த வீட்டிற்கு நான்தான் எஜமானி, ஹரிகாலிக்கு ஒன்றுமில்லை" என்று நன்கு அறிந்திருந்தாள். ஆகையால் அவள் தனக்கு ஒன்றுமில்லாதவள் போல, மேலுக்கு ஹரிகாலியையே எல்லாவற்றிற்கும் விட்டுவிட்டாள். இதனால் ஹரிகாலிக்குச் சரயூவின் மேல் இருந்த பொறாமை இன்னும் அதிகரித்தது.

சரயூ ஒரே ஓர் இடத்தை மட்டும் முழுசாகத் தனக்கென வைத்துக்கொண்டாள். அந்த இடத்திற்குள் ஹரிகாலி எவ்விதமும் பிரவேசிக்க முடியவில்லை. தனது கணவனைச் சுற்றியும் அவள் இம்மாதிரி ஒரு சூக்ஷ்மமான

கோடு வரைந்தாள். அதைத் தாண்டாமல் சந்திரநாத்தின் தேகத்தைத் தொட முடியாது. அந்தக் கோட்டுக்கு வெளியே ஹரிகாலி என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்; ஆனால், அதற்கு உள்ளே நுழைவதற்கு அவளுக்கு 'அதிகாரம்' கிடையாது. "இந்தச் சின்னஞ் சிறு பெண் ஏதோ மாய மந்திரம் போட்டு என்னை ஒன்றும் இல்லாமல் ஆக்கிவிட்டாள்" என்று புத்திசாலி யான ஹரிகாலி எண்ணிக்கொண்டாள்.

இவ்விதம் ஆறு வருஷங்கள் கழிந்தன. சரயூ பதினொன்றுவது வயதில், தனது புருஷன் வீட்டிற்கு வந்தாள். இப்பொழுது அவளுக்குப் பதினேழு பிராயமாகி விட்டது.

## ஐந்தாம் அத்தியாயம்

வயதிற்குத் தகுந்தபடி எப்படி ஆண்களுக்கு அறிவு இருக்கிறதோ, அப்படிப் பெண்களுக்கு இருப்பதில்லை. ஆண்களுக்குப் பல பிராயங்கள் இருக்கின்றன—பத்து, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது என்று. முப்பது வயதுடைய ஒருவர் இருபது வயதுடைய வேறு ஒரு வாலிபனை 'போஷகர்' என்ற முறையில் கவனிக்கக் கூடும். ஆனால், பெண்களிடத்தில் இது கிடையாது. விவாகம் ஆகும் வரையிலும் பெண்கள் தங்கள் அக்காள், மன்னி, தாய், அத்தை, இல்லாவிட்டால் பாட்டியின் அருகிலே இருந்து எல்லாம் கற்றுக்கொள்கிறார்கள். பெண் ஜன்மத்தில், எதெல்லாம் கற்க வேண்டுமோ அதெல்லா வற்றையும் கற்றுக் கொள்கிறார்கள். பிறகு இதற்கு மேல் அவர்கள் ஒரேயடியாக எல்லாவற்றிற்கும் உயர்ந்த படியில் போய் உட்கார்ந்து கொள்கிறார்கள். அப்பொழுது பதினாறு

வயதிலிருந்து ஐம்பத்தாறு வயது வரையிலும் எல்லாப் பெண்களும் சம வயதானவர்களைப் போலாய்விடுகிறார்கள் ! இட வித்தியாசத்தில் ஆங்காங்கு இந்த நியதியிலிருந்து கொஞ்சம் வித்தியாசம் காணப்படுவது வாஸ்தவம்தான். ஆனாலும் பெரும்பாலாக இதில் எவ்வித மாறுதலும் உண்டாவதில்லை. அது எப்படியிருந்தாலும் சந்திர நாத்தின் கிராமத்து உறவினளான பாட்டி ஹரிபாலா விடம் இம்மாதிரி குணம்தான் காணப்பட்டது.

ஒருநாள் மத்தியான நேரம் சரயூ தனது வீட்டின் மேல்புறத்து ஜன்னலைத் திறந்து ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஹரிபாலா ஒரு தட்டில் கொஞ்சம் மிட்டாய்களும் இன்னொரு கையில் முல்லை மலரால் கட்டிய ஒரு பெரிய மாலையும் எடுத்துக்கொண்டு திடீரென அவள் அருகில் வந்து நின்றுகொண்டாள். அவள் அந்த மாலையை சரயூவின் கழுத்தில் போட்டு, " இன்றிலிருந்து நீ எனது தோழியாய்விட்டாய். ஒரு தடவை என்னைத் ' தோழி ' என்று கூப்பிடு " என்றாள்.

சரயூ சங்கடத்தில் ஆழ்ந்தாள். ஆனாலும் புன்முறுவ லுடன், " நல்லது " என்றாள்.

" சும்மா 'நல்லது' என்று சொல்வதால் பிரயோசனம் இல்லை. நீ என்னைத் ' தோழி ' என்று அழைக்க வேண்டும் " என்றாள் ஹரிபாலா.

இதைக் கௌரவம் என்றோ பிரீதியென்றோ எப்படி வைத்துக்கொண்டாலும் சரி, சரயூவின் வாழ்க்கையில் இதற்கு முந்தி இதுவரையிலும் எப்பொழுதுமே இம்மாதிரி ஒரு சம்பவம் ஏற்பட்டதில்லை. ஆகையால் அவளால் இந்த அகஸ்மாத்தான ஆன்மநேசத்தைத் தன்னுடன் இணைத்துக் கொள்ள முடியவில்லை. வயதில் தனது பாட்டிக்குச் சமமான ஸ்திரீயை ஆலிங்கனம் செய்து

கொண்டு ' தோழி ' என்று சொல்ல அவளுக்கு வெட்கமாயிருந்தது. ஆனால், ஹரிபாலா விடுவதாயில்லை. இதில் எந்தவிதமான புதுமையோ அல்லது இயற்கைக்குப் பொருத்தமற்றதோ இருக்கக்கூடும் என்பது ஹரிபாலாவின் அறிவுக்கு எட்டவில்லை. ஆகையால் சரயூ தன்னைப் பிரியமாய் அழைப்பதற்குத் தயங்குவதைக் கண்டு ஹரிபாலா கொஞ்சம் வருத்தம் அடைந்து, " சரி, நீ எனது மாலையைத் திருப்பிக் கொடு ; நான் வேறு யாரிடமாவது போகிறேன் " என்றாள்.

சரயூ கலக்கமடைந்திருந்தாள் ; ஆனால் சுவாதீனமற்றிருக்கவில்லை. அவள் புன்சிரிப்புடன், கோமளமான குரலில், " என்ன, தோழியைத் தேடப் போவாயா ?" என்று கேட்டாள்.

ஹரிபாலா சாந்தமாக, " அடியம்மா, நீ நன்றாகப் பேசுகிறாயே ! நாட்டுப் பெண்ணுக்குப் பேசத் தெரியாது என்று ஜனங்கள் சொல்கிறார்களே ?" என்றாள்.

சரயூ சிரிக்கத் தொடங்கினாள்.

ஹரிபாலா, " நல்லது, கேள். இந்தக் கிராமத்தில் உனக்கு ஒரு தோழிகூடக் கிடையாது. சிலர் பெரிய மனிதர் வீடு என்று எண்ணியும், வேறு சிலர் உன்னுடைய மாமியின் குரல் விசேஷத்தாலும் உன்னிடம் வருவதில்லை. இது எனக்குத் தெரியும். ஆனால், இனி நான் வந்து போய்க்கொண்டிருப்பேன். உன்னிடத்தில் எனக்கு ஒரு சம்பந்தமோ உறவோ இன்றிக் காரியம் ஆகாது. ஆகையால் இன்று உன்னைத் ' தோழி 'யாக்கியிருக்கிறேன். நான் உண்மையில் கிழவியாய்விட்டேன். ஆனால், ஹரிநாம மாலையை ஜபித்துக்கொண்டே நான் நாள் பூராவும் கழிக்கப் போவதில்லை. இனி நான் உன்னிடம் தினம் வந்துகொண்டிருப்பேன் " என்றாள்.

சரயூ, “ஆம், தினம் வந்துகொண்டிருங்கள்” என்ருள்.

ஹரிபாலா வாஞ்சையாக, “‘வந்துகொண்டிருங்கள்’ என்ன? ‘தோழி, நீ தினம் வந்துகொண்டிரு’ என்று சொல்லு; என்னை ‘நீ’ என்று சொல்வாயோ, மாட்டாயோ?” என்ருள்.

சரயூ சிரித்துவிட்டாள். “மன்னித்துக் கொள்ளணும் பாட்டி! கழுத்தில் கத்தி வைத்தாலும் இது என்ருல் ஆகாது” என்ருள்.

ஹரிபாலாவும் சிரித்துக்கொண்டு, “சரி, ‘நீ’ என்று சொல்லாவிட்டாலும் பரவாயில்லை! ஆனுல், ‘நீர்’ என்று சொல்ல வேண்டும். சரி, ‘தோழி, நீர் தினம் வந்துகொண்டிரும்’ எனச் சொல்லு” என்ருள்.

“சரயூ தலைகுனிந்து நாணத்துடன் சிரித்துக் கொண்டு, “தோழி, நீர் தினம் வந்துகொண்டிரும்” என்ருள்.

இப்பொழுது ஹரிபாலாவுக்கு ஒரு பெரிய கவலை ஒழிந்ததுபோலிருந்தது. அவள், “ஆம், நான் தினம் வந்துகொண்டிருப்பேன்” என்ருள்.

அடுத்த நாள் முதல் ஹரிபாலா தினந்தோறும், சரயூ விடம் வரத் தொடங்கினுள். அவளுக்குத் தலைக்கு மேல் வேலை இருந்தாலும், அதையெல்லாம் விட்டுவிட்டு ஒரு தடவை எப்படியும் வந்து ஆஜராகிக்கொண்டிருந்தாள். ஸ்தாபிதம் செய்யப்பட்ட ‘தோழி’ சம்பந்தம் மெள்ள மெள்ள பலமடையத் தொடங்கியது. ஹரிபாலா சம வயதுடையவளல்ல, ஆலிங்கனம் செய்துகொண்டு இருப்பது பார்ப்பதற்குக் கொஞ்சமும் நன்ருயிருக்காது

என்னும் விஷயத்தை நாளாக ஆக சரயூவும் மறந்து விட்டாள்.

சரயூவுக்கும் ஹரிபாலாவுக்கும் இடையே இருந்த ஆழ்ந்த நட்பு ஹரிகாலிக்குப் பிடித்ததா, இல்லையா என்று சொல்ல முடியாது. ஆனால் சந்திரநாத்திற்கு இது மிகவும் பிடித்திருந்தது. இது விஷயமாக அவனுக்கும் அவன் மனைவிக்கும் பேச்சு வார்த்தைகள்கூட நடந்தன. பாட்டியின் இந்த எதிர்பாராததும் அசாதரணமானதுமான உறவால், அவனுக்கு அதிக ஆனந்தம் உண்டாகியது. இதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. சந்திரநாத் தனது மனைவியை மிகவும் நேசித்தான். தன் முழு இருதயத்துடன் இல்லாவிட்டாலும் அதில் காதலுக்குக் குறைவில்லை. "எல்லாருக்கும் ஒரே மாதிரியாக மனைவி வாய்ப்பதில்லை. ஒருவனுக்குப் பத்தினி பணிப்பெண்ணாக இருக்கிறாள்; மற்றவனுக்குத் தோழி; இன்னொருவனுக்கு 'செல்வி'யாக இருக்கிறாள். என் அதிர்ஷ்டம் புண்யவதியாகவும், புனிதமான சாந்தம் நிறைந்தவளுமான ஓர் அன்பு நிறைந்த பணிப் பெண் கிடைத்திருக்கிறாள். ஆகவே துக்க மடைவதில் என்ன லாபம்?" என்று அவன் மனதிற்குள் நினைத்தான்.

இதைவிட வேறொரு விஷயமும் இடைவிடாது அவன் மனதில் வந்துகொண்டிருந்தது. அதுதான் சரயூவின் கழிந்த துக்ககரமான வாழ்க்கைக் கதை. அவளுடைய குழந்தைப் பருவம் பெரிய துக்கத்தில் கழிந்தது. யார் கண்டார்கள், இந்தத் துர்ப்பாக்கியவதியின் வாழ்க்கை பூராவுமே துக்கத்திலேயே கழிந்திருக்கக்கூடும்! அல்லது இவள் வேறு யாராவது துரதிருஷ்டசாலியின் கைவசமாகி கண்ணில் நீரைப் பெருக்கிக்கொண்டே இருந்திருக்கலாம்! அல்லது வேலைக்காரியாகவே தனது வாழ்க்கையை கழித்து அந்த வயதில் அநேக விதமான தீமைகளையும் கஷ்டங்

களையும் அடைந்திருக்கலாம்! அப்பொழுது இத்தனை அழகும் யௌவனமும் பாழாகியல்லவா போயிருக்கும்!

சந்திரநாத்தின் மனத்தில் இவ்வெண்ணம் எழும் போதெல்லாம் அவன் மிகுந்த கருணையுடன் சரயூவின் நாணமடைந்த முகத்தை நிமிர்த்தி, "நல்லது, சரயூ நான் உன்னைப் பார்த்திருக்காவிட்டால், உன்னை விவாகம் செய்து கொண்டிருக்காவிட்டால், இத்தனை நாளும் நீ யாரிடத்தில் வசித்திருப்பாய்? அதைச் சொல்லு" என்று கேட்பான். சரயூ ஒன்றும் பதிலளிப்பதில்லை. பயத்துடன் பேச்சற்று, கணவன் மார்பைத் தழுவிக் கொள்வாள். சந்திரநாத் அன்புடன் அவள் தலையைத் தடவிக் கொடுத்து அவளுக்குத் துணிவு உண்டாக்குவது போல மனதிற் குள்ளாகவே, "இல்லை, உனக்குப் பயம் எதற்கு?" என்று சொல்லுவான்.

சரயூ நெருங்கி இன்னும் நன்றாக அணைத்துக் கொள்வாள். உண்மையிலேயே இந்த விதமான பேச்சுக் களால் அவள் அதிகப் பயமடைந்தாள். சந்திரநாத் இதைச் சாதாரணமாகக் கருதி அவளை இழுத்து மார்போடு அணைத்துக்கொண்டு, "சரயூ! நீ ஏன் ஓர் ஏழை வீட்டில் பிறந்தாய் என்பது புலப்படமாட்டேனென்கிறது. ஆனால், நீயே எனது ஜன்ம ஜன்மாந்திரங்களின் பதிவிரதா மனைவி. இதில் துளிக்கூடச் சந்தேகமில்லை. நீ உலகத்தின் எந்தப் பாகத்தில் இருந்தாலும், நான் இழுக்கப்பட்டு உன் அருகில் வரவேண்டித்தான் இருக்கும். சரயூ, உன்னுடைய ஆகர்ஷணத்தினால்தான் நான் காசி வந்தேன்" என்பான்.

இந்தச் சமயத்தில் அவன் உள்ளத்தில் பெருகிக் கொண்டிருந்த அன்பிற்கு ஈடாகச் சரயூவின் சகல அன்பும், காதலும், சேவையும், பக்தியும் ஒன்றாகச் சேர்ந்தாலும் இணையாகாது. ஆனால் இவ்வளவு இருந்தும்கூட,

யாராவது கஷ்டப்படுகிறவர்களிடம் இரக்கமோ, பச்சாத் தாபமோ கொள்வதால் எத்தகைய கர்வமும் திருப்தியும் உண்டாகிறதோ, அப்படிப்பட்ட ஓர் உணர்ச்சி சந்திர நாத்தின் மனத்தில் அவன் சரயூவைக் கல்யாணம் செய்து கொண்ட சமயத்தில் அவனை அறியாமல் புகுந்திருந்தது. அதை இப்பொழுது என்ன முயற்சி செய்தும் அவனால் அகற்ற முடியவில்லை.

இதயத்தின் ஒரு மூலையில் அந்தப் பாவம் படிந் திருந்தது. ஆகையால் அந்த எண்ணம் தலை தூக்கி எழ விரும்பியதும் சந்திரநாத் சரயூவை இழுத்துத் தனது மார்பிலே இறுகத் தழுவிக் கொண்டு, "சரயூ, யாரை நீ இத்தனை நாளாகச் சாதாரணமாகப் பார்த்து வருகிறாயோ, அவனை அறிந்து கொள்வதற்கு உனக்கு ஏன் இன்னும் கால தாமதமாகிறது என்பது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறது. நீ என்னுடையவள் என்று நான் காசியில் பார்த்ததுமே தெரிந்து கொண்டேனே! எத்தனையோ யுகங்களாக, எத்தனையோ கல்பங்களாக, எத்தனையோ ஜன்மங்களாக, நீ என்னுடையவள்! ஏனோ நாமிருவரும் பிரிந்தோம். ஆனால் இப்பொழுது சேர்ந்து ஒன்றுவதற்காக வந்திருக்கிறோம்" என்பான்.

சரயூ அவனது மடியிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு இனிமையான குரலில், "நான் உங்களை அறிய முடியவில்லை என்று யார் சொன்னது?" என்பாள். உற்சாக மேலிட்டால் சந்திரநாத் சரயூவின் நாணமடைந்த முகத்தைச் சாய்த்துத் தனது முகத்தருகில் கொண்டுவந்து, "அறிய முடியுமா? பின் ஏன் இத்தனை பயத்துடன் இருக்கிறாய்? நான் உன்னிடம் கடுகடுப்பாக நடந்து கொள்வதில்லையே! சரயூ, நான் உன்னைச் சர்வத்திலும் மேலானவளாக நேசிக்கிறேன்" என்று அன்புடன் கூறுவான்.

சரயூ மறுபடியும் கணவன் மடியில் தனது சிரத்தைப் புதைத்துக் கொள்வாள். சந்திரநாத் பின்னும் அவளிடம், "சொல்லு, ஏன் பயமடைகிருய்?" என்பான். சரயூவின் வாயிலிருந்து வார்த்தை கிளம்பாது. கணவனைஸ்பர்சித்துக் கொண்டு அவள் இந்தப் பொய் வார்த்தையை வாயினுல் சொல்லுவாளா? பயமடையவில்லை என்று அவள் எப்படிச் சொல்லுவாள்? உண்மையிலேயே அவள் அதிகப் பயமடைந்திருந்தாள்; அந்தப் பயம் எவ்வளவு வாஸ்தவ மானது. எவ்வளவு பெரிதானது என்பது அவளைத் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது.

ஹரிபாலா வந்ததால் சந்திரநாத் ஆனந்தம் அடைந்தான் என்று நாம் சொன்ளும். "சரயூவுக்கு ஒரு தோழி கிடைத்துவிட்டாள். தன் மனதிலுள்ளதைச் சொல்லிக்கொள்வதற்கு அவளுக்கு ஓர் ஆள் கிடைத்து விட்டது!" இதுதான் அவன் கொண்ட ஆனந்தத்திற்குக் காரணம்!

ஒரு நாள் சரயூ மத்தியானம் முழுவதும் ஹரிபாலாவை எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தாள். மேகம் பரவியிருந்தது; மழையும் துளித்துக்கொண்டிருந்தது. ஹரிபாலா ஏனே வரவில்லை. "மழை பெய்து கொண் டிருக்கிறது. அதனுல் வரவில்லையாக்கும்" என்று சரயூ நினைத்தாள். சந்தியா காலமாகிவிட்டது. நாள் பூராவும் அவள் தனியாகவே உட்கார்ந்து கழித்தாள். ஹரிகாலி கூட வீட்டில் இல்லை. சரயூ அப்பொழுது கொஞ்சம் தைரியமாக மெள்ளத் தனது கணவன் புஸ்தக அறைக்குள் நுழைந்தாள். ஏதாவது முக்கிய காரணமில்லாவிட்டால் ஒருவரும், சரயூகூட அந்த அறைக்குள் போகமாட்டார்கள். சந்திரநாத் புஸ்தகத்தை மூடித் தலை நிமிர்ந்து, "இன்று உனது தோழி வரவில்லை போலிருக்கிறதே!" என்ருன்.

“ இல்லை.”

“ அதுதான் உனக்கு என் ஞாபகம் வந்தது போலும் !”

சரயூ சிரித்தாள். ஞாபகம் எப்பொழுதும்தானிருக் கிறது ; ஆனால் வருவதற்குத்தான் துணிவு உண்டாவ தில்லை என்பதுதான் அர்த்தம்.

“ மழை பெய்வதால் வரக்கூடவில்லை போலிருக் கிறது ” என்றாள் சரயூ.

“ இல்லை, அப்படியிருக்காது. இன்று யாரோ சித்தப்பாவின் சின்னப் பெண் நிர்மலாவைப் பார்க்க வந்திருக்கிறார்களாம். சீக்கிரம் அவளுக்குக் கல்யாணமாக இருக்கிறது. இன்று அவளை அலங்காரம் செய்வதில் பாட்டி மூழ்கியிருப்பாள்.”

“ ஆம், அப்படித்தான் இருக்கும் ” என்றாள் சரயூ.

கொஞ்ச நேரம் பேசாமலிருந்துவிட்டு சந்திரநாத், “ என்ன சொல்லட்டும் ? நாம் முற்றிலும் அந்நியர்கள் போலாய் விட்டோமே என்று துக்கமாயிருக்கிறது. மாமி எங்கே ?” என்று கேட்டான்.

“ இன்று மாமியும் அங்கேதான் போயிருப்பார் போலிருக்கிறது.”

சந்திரநாத் என்னவோ யோசிக்க ஆரம்பித்தான்.

சரயூ அருகில் சென்று ஓர் ஓரமாக உட்கார்ந்து கொண்டாள். “ சொல்ல மாட்டீர்களா ? என்ன யோசித் துக் கொண்டிருக்கிறீர்கள் ?” என்று கேட்டாள். சந்திர நாத் சிரிப்பிற்கு முயற்சித்து, சரயூவின் கரத்தை இழுத்துத் தனது கையில் வைத்துக் கொண்டான். பிறகு மெள்ள

மெள்ளச் சொல்ல ஆரம்பித்தான். "இல்லை சரயூ அப்படி ஒரு விஷயமுமில்லை. நிர்மலாவுக்குக் கல்யாணம் நடக்கவிருக்கிறது. சித்தப்பா எனக்குச் சமாசாரம் கூடச் சொல்லாமல் மாமியை அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள். அப்படியென்றால் நாம் இரண்டு பேரும் தான் அந்நியர்களாயிருக்கிறோம்! நான் இதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன்."

சந்திரநாத்தின் குரலிலே சிறிது வியாகூலம் தென் பட்டது. சரயூ அதை அறிந்துகொண்டு, "எனக்கு உங்களுடைய காலடியில் இடம் கொடுத்து நீங்களும் அந்நியர்களாகிவிட்டீர்கள். இல்லாதிருந்தால், உங்க ளுக்குள் மனஸ்தாபமே உண்டாகியிருக்காது" என்றாள்.

சந்திரநாத் சிரித்துக்கொண்டு, "இல்லை! உன்னை நீக்கிவிட்டுச் சித்தப்பாவிடம் சேர்ந்து கொள்வதால் விசேஷமான சுகம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. நாம் சௌக்கியமாகவே இருக்கிறோம்! நான் விவாகம் செய்து கொண்டபோது சித்தப்பாவின் உதவியை நாடியிருந்தால் நான் உன்னை அடைய முடியுமென்ற ஆசை கூட இருக்காது. ஒன்றில்லாவிட்டாலும் ஒரு தடை வந்து குறுக்கிட்டிருக்கும். குலத்தைப் பற்றிய சண்டையோ, அல்லது வம்சத்தைப் பற்றிய தொந்தரவோ வந்திருக்கும். எப்படியோ இந்தக் கல்யாணத்திற்குத் தடை அவசியம் நேர்ந்திருக்கும்" என்று பதிலளித்தான்.

சரயூ உள்ளுக்குள்ளாகவே நடுங்கினாள். அப்பொழுது மாலை இருள் வீட்டில் பரவிக் கொண்டிருந்தது. இதனால் சந்திரநாத் அவளுடைய முகத்தைப் பார்க்க முடியவில்லை. ஆனால் அவனுடைய பிடிப்பிலிருந்த அவளுடைய கரம் நடுங்கி, சரயூவின் மனதிலிருந்த எல்லா விஷயங்களையும் சந்திரநாத்திற்கு வெளிப்படுத்திவிட்டது.

அவன் சிரிப்புடன், " நான் சித்தப்பாவின் உதவியை நாடாதது நல்லதா அல்லது கெட்டதா என்று இப்பொழுது நீ யோசித்தாயா ?" என்று கேட்டான்.

கொஞ்ச நேரம் பேசாமலிருந்த பிறகு சரயூ, " எனக்கென்ன தெரியும் ? ஆனால் உங்களுக்கென்னவோ என்னைப் போன்ற நூற்றுக் கணக்கான வேலைக்காரிகளுக்கு ஒன்றும் குறைச்சல் இருக்காது !" என்றாள்.

சந்திரநாத் அவளுடைய கோமளமான கரங்களை மெதுவாக அழுத்திக் கொண்டு, " அது தெரியாது. எனக்கு ஒரேயொரு வேலைக்காரிதானிருக்கிறாள் ; அவளைப் பற்றித்தான் நான் நினைக்க முடியும். நீ வேண்டுமானால் நூறு, ஆயிரம் பேர்களைப் பற்றி நினைத்துக் கொள் " என்று கூறினான்.

அடுத்த நாள் ஹரிபாலா வந்தாள். அவளுடைய முகத் தோற்றம் ஒரு மாதிரியாயிருந்தது. அவள் வழக்கப் பிரகாரம் சரயூவைப் பலவந்தமாக அணைத்துக் கொண்டு, ' தோழி தோழி ' என்று சொல்லிக் கேலி செய்யவுமில்லை. விளையாடுவதற்காகச் சீட்டுக் கொண்டு வரவும் இல்லை. அடிக்கடி பரிகாசம் செய்து மகிழ்ச்சி உண்டாக்கப் பிரயத்தனம் செய்யவும் இல்லை. அவள் வாடிய முகத்துடன் பேசாமல் உட்கார்ந்து கொண்டாள்.

" தோழி, நேற்று நீ வரவில்லையே ?" என்றாள் சரயூ.

" ஆமாம் தோழி, நேற்று ரொம்ப வேலையிருந்தது. அந்த வீட்டில் நிர்மலாவுக்குக் கல்யாணமல்லவா ?"

" ஆம் கேள்விப்பட்டேன் ! எல்லாம் முடிவாகி விட்டதா ?"

ஹரிபாலா கேள்விக்குப் பதிலளிக்காமல் சரயூவின் முகத்தையே பார்த்துக்கொண்டு, " தோழி, ஒரு விஷயம் கேட்கட்டுமா ? உண்மையைச் சொல்லுவாயா ?" என்ருள்.

" என்ன விஷயம் ?"

" உண்மையைச் சொல்வதாளுல் கேட்கிறேன், இல்லாவிட்டால் கேட்பதில் பிரயோசனமில்லை !"

சரயூ சிறிது நேரம் சிந்தித்தாள். " ஏன், உண்மையை ஏன் சொல்ல மாட்டேன் ?" என்று கேட்டாள்.

" சொல்லு தோழி, நீ என்னை நம்புகிருயல்லவா ?"

" ஆம், நம்பாமலென்ன ?"

" அப்படியாளுல் சொல்லு, சந்திரநாத் உன்னிடம் அன்பாயிருக்கிருளு ?"

சரயூ நாணமடைந்து, " என் மேல் அதிக கிருபை வைத்திருக்கிருர் " என்ருள்.

" இல்லை, கிருபை விஷயமாகக் கேட்கவில்லை. உன்னை நன்ருக மனப்பூர்வமாகக் காதலிக்கிருளு, இல்லையா ?"

சரயூ சிரித்தாள். " அந்தக் காதல் மனப் பூர்வமா யிருக்கிறதும் இல்லாததும் எனக்கு என்ன தெரியும் ?"

" உண்மையாகவே தெரியாதா ?"

" தெரியாது."

வாஸ்தவத்திலேயே சரயூவுக்கு அது தெரியாது. ஹரிபாலா பெரிய யோசனையில் மூழ்கிவிட்டாள். அவள் தலையை அசைத்துக் கொண்டு, " புருஷன் தன் மேல் பிரியமாயிருப்பதும் இல்லாததும் பெண்சாதிக்குத் தெரியாது !......போதும், இதுவே எனக்கு ரொம்ப பயமா யிருக்கிறது " என்ருள்.

அந்தச் சமயத்தில் ஹரிபாலாவின் முகத்தில் காணப் பட்ட குறியில் ஓர் அந்தரங்கமான பயம் மறைந்திருந்தது. அதைக் கண்டு சரயூ கூடப் பயமடைந்தாள்.

"நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள் ?"

"அதை இன்னொரு நாளைக்குக் கேட்டுக் கொள்" என்றாள் ஹரிபாலா.

சிறிது நேரங்கழித்துச் சரயூவின் முகவாய்க் கட்டை யில் கையை வைத்துக்கொண்டு ஹரிபாலா மிருதுவான குரலில், "ஏன் தோழி, இத்தனை அழகு, இத்தனை குணம், இத்தனை புத்தி இருந்தும் கூட நீ எல்லா வற்றையும் இத்தனை நாளாக வியர்த்தமாக்கிக் கொண்டு வந்திருக்கிறாயே ?" என்று கேட்டாள்.

சரயூ சிரித்தாள்.

## ஆறும் அத்தியாயம்

பார்ப்பதற்கு நல்லவன்போல் காணப்பட்ட ஒரு மனிதன் ஹரிதயால் கோஷாலின் வீட்டிற்கு இரண்டு மூன்று நாட்களாக வரத் தொடங்கினான். அவன் ஒரு பழைய கிழிந்த சட்டை அணிந்திருந்தான். பிராமண ஸ்திரீ சுலோசனாவிடம் ரகசியமாக ஏதோ பேசிவிட்டுப் போய்க்கொண்டிருந்தான். ஹரிதயாலுக்கு இந்த விஷயம் தெரியாதென்று சுலோசனா எண்ணிக்கொண்டிருந்தாள். ஆனால் அவருக்கு இவ்விஷயம் தெரியும்.

ஒரு நாள் மத்தியானம் ஹரிதயாலும் அவருடைய சித்தப்பாவும் வீட்டில் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந் தார்கள். அப்போது கூடத்தில் ஏதோ சத்தம் கேட்டது. யாரோ கோமளமான குரலில் கலக்கத்துடன் மன்னிப்புக்

கேட்பது போலவும், ஆனால் மற்றவரோ கடுமையான குரலில் திரஸ்காரம் செய்து பயமுறுத்துவது போலவு மிருந்தது. ஒருவர் பெண் என்றும் மற்றவர் ஆண் என்றும் பட்டது. "சித்தப்பா! வீட்டில் இதென்ன சண்டை?" என்று ஹரிதயால் கேட்டார்.

கைலாஸ், "இதோ பாரு, உன் ராஜாவைக் கட்டப் போகிறேன்" என்றார்.

கொஞ்ச நேரம் சப்தம் ஒன்றையும் காணோம். ஆனால் சில நிமிஷங்களில் மறுபடியும் சத்தம் கேட்கத் தொடங்கியது. இதைக் கேட்டு ஹரிதயால் எழுந்துநின்று, "கொஞ்சம் பொறும். நான் என்னவென்று பார்த்து விட்டு வருகிறேன்" என்றார். கைலாஸ் அவருடைய வேஷ்டி முனையைப் பிடித்துக்கொண்டு, "இதோ பார் அப்பா, உன் ஆட்டம் தோற்றுக்கொண்டு வருகிறது!" என்றார். ஹரிதயால் மீண்டும் உட்கார்ந்துகொண்டார். ஆனால், உள்ளே நடந்து கொண்டிருந்த கலவரம் கொஞ்சங்கூட அடங்கவில்லை. ஹரிதயால் சலிப்படைந்து மறுபடியும் எழுந்து நின்றார். கூடத்துக்குள் நுழைந்தார்.

சுலோசனா தன் இரு கரங்களாலும் அந்த மனிதன் காலைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அந்த மனிதனோ ரொம்பப் பலமாக, "என் பேச்சைக் கேள். இல்லாவிட்டால் நான் என்ன சொல்லுகிறேனோ, அப்படிச் செய்தே தீருவேன்" என்று கூறிக்கொண்டிருந்தான்.

சுலோசனா அழுதுகொண்டே, "என்னை மன்னித்து விடு! நீதான் என்னை முன்னமேயே ஒரு தடவை படுகுழியில் வீழ்த்தி விட்டாயே; இப்பொழுது மிஞ்சியுள்ள என் வாழ்க்கையைப் பாழாக்காதே" என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

" உன்னுடைய மகளுக்கு இவ்வளவு பெரிய மனிதர் வீட்டில் கல்யாணமாகியிருக்கிறதே! உன்னால் இரண்டாயிரம் ரூபாய் கொடுக்க முடியாதா? நான் பணத்தை வாங்கிக்கொண்டுதான் போவேன்."

" நீ குடிகாரன். தூர்த்தன். இரண்டாயிரம் ரூபாய் உனக்கு எத்தனை நாளைக்கு வரும்? நீ மீண்டும் வருவாய், மறுபடியும் பணம் கேட்பாய்! என்ன ஆனாலும் சரி, நான் உனக்குப் பணம் கொடுக்க முடியாது."

" நான் குடிப்பதை விட்டுவிடுகிறேன். வியாபாரம் செய்யப் போகிறேன். அப்புறம் ஒருபொழுதும் உன்னிடம் பணம் கேட்க வரமாட்டேன்!"

சுலோசனா இதற்கு ஒரு பதிலும் அளிக்கவில்லை. அவள் தலைகுனிந்து, கைகளைக் கூப்பிக்கொண்டு, மிகவும் பரிதாபமாக, " என் மீது இரக்கம் வை. பணத்திற்காக நான் சரயூவிடம் வாய் திறக்கமாட்டேன் " என்றாள்.

இவர்கள் இருவரும் ஹரிதயால் அங்கு வந்து அருகில் நின்றுகொண்டிருந்ததைக் கவனிக்கவில்லை. ஆகையால் இந்த விவாதம் பலமாகவே நடந்துகொண்டிருந்தது. ஆகவே, திடீரென ஹரிதயாலைப் பார்த்ததும் இருவரும் திடுக்கிட்டார்கள். ஹரிதயால் அந்த அறிமுகமற்ற மனிதனிடம், " யாருடைய உத்தரவின் பேரில் இந்த வீட்டிற்குள் நுழைந்தாய்?" என்று கேட்டார்.

முதலில் அந்த மனிதன் சிறிது நேரம் அப்படியே ஒடுங்கிப்போய் நின்றான். சட்டப்படி தான் செய்தது தவறுதான் என்று அவனுக்குப் பட்டதும் அங்கிருந்து நழுவுவதற்குத் தயாரானான். ஆனால், ஹரிதயால் அவனுடைய கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, " யாருடைய உத்தரவின்மேல் வந்தாய், சொல்லு!" என்று பலமாகக் கூச்சலிட்டார்.

ஓடுவதற்கு ஒரு வழியுமில்லையெனத் தெரிந்ததும் அவன் கொஞ்சம் துணிவுடன், " சுலோசனுவிடம் வந்திருக்கிறேன் " என்ருன்.

அவனுடைய வாயிலிருந்து சாராய நாற்றம் அடித்துக் கொண்டிருந்தது.

ஹரிதயால் வெறுப்பினுல், உதட்டைக் கடித்துக் கொண்டு, உரத்த குரலில், " யாருடைய உத்தரவில் ?" என்ருர்.

" உத்தரவு எதற்கு ?" என்ருன் அவன்.

இப்பொழுது அந்த மனிதன் முகபாவத்தில் ஒரு மாறுதல் காணப்பட்டது. " எனக்கும் கொஞ்சம் பலமிருக்கிறது—இந்த வீட்டில் எனக்கும் கொஞ்சம் அதிகாரம் இருக்கிறது " என்ற நினைவு திடீரென்று அவனுக்கு உண்டானதுபோல் தோன்றிற்று.

ஹரிதயால் மிகுந்த கோபமடைந்தார். அவர் மறுபடியும் கூச்சலிட்டு, " குடிகாரப் போக்கிரி ! நான் உன்னை இப்போதே ஜெயிலுக்கு அனுப்ப முடியும் தெரியுமா ?" என்ருர்.

அவனும் கோபமாக, " ஆஹா, ஏன் தெரியாது ?" என்ருன்.

ஹரிதயால் அவனை அடிப்பதற்குத் தயாராஞர். " தெரியுமா ? ஆனுல் நட இப்போதே ! உன்னைப் போலீஸில் ஒப்படைக்கிறேன் " என்ருர்.

இதற்குப் பதிலாக அந்த மனிதன் கொஞ்சம் சிரித்தான். போலீசுக்குப் போவதற்கு அவனுக்கு ஒரு தடையுமில்லையென்று அவன் சொல்வதைப் போலிருந்தது.

" இப்பொழுதே கூட்டிக் கொண்டு போகப் போகிறீர்களா ?"

ஹரிதயால் அவனை ஒரு மோது மோதி, " ஆம், இப்போதேதான் " என்றார்.

அந்த மனிதன் அடியைச் சமாளித்துக்கொண்டு கம்பீரத்துடன், " பண்டாஜி ! ஒரேயடியாக வீரத்தை யெல்லாம் காட்டாதே ! போலீசுக்குக் கொண்டுபோ, வேண்டுமானால் ஜெயிலில் அடை. ஆனால் எதையும் கொஞ்சம் பொறுத்துச் செய். நான் உன்னைக் காசியில் இருக்கவொட்டாமல் அடிக்க முடியும் என்பது உனக்குத் தெரியுமா ?" என்று கேட்டான்.

ஹரிதயால் பைத்தியக்காரன் போலச் சத்தமிட்டு, " இப்பவே நட ! நான் காசியில் நாற்பது வருஷமாக இருக்கிறேன். இன்றைக்கு இவன் வந்திருக்கிறான் என்னைக் காசியிலிருந்து விரட்ட !" என்று பரிகசித்தார்.

" நம்மைப் பயமுறுத்தவா பார்க்கிறான் ?" என்று ஹரிதயால் நினைத்தார். வேறு யாராவதாயிருந்தால் இந்த வார்த்தைகளால் பயந்து போயிருப்பார்கள். ஆனால் ஹரிதயால் வெகு நாளாகக் காசியிலேயே வசிப்பவர். ஆகவே அவர் அவன் பேச்சைக் கேட்டுப் பயப்படவில்லை. அவர் மிகக் கோபத்துடன், " நம்மிடமே தன் போக்கிரித் தனத்தைக் காட்ட வந்திருக்கிறான், ஐயா " என்றார்.

" பண்டாஜி! இது போக்கிரித்தனமல்ல. நீ என்னைப் போலீசுக்குக் கூட்டிக்கொண்டு போ. நான் அங்கே எல்லாவற்றையும் சொல்லிக் கொள்கிறேன்."

" என்னத்தைச் சொல்லப் போகிறாய் ?"

" என்னவோ எனக்குத் தெரிந்ததை ! அதனால் நீ காசியை விட்டுப் போகவும் முடியாது. அதோடு இந்த ஊர் முழுக்க நீ சாதி கெட்ட நீசன் என்று தெரிந்து கொள்வார்கள் !"

" நான் சாதி கெட்டவனா ?"

" பண்டாஜி! கோபமடையாதே. நீ மட்டும் சாதி கெட்டவனல்ல; இதுவரையிலும் எத்தனை பெரிய மனிதர்கள் நம்பிக்கை வைத்து உன்னிடம் வந்திருக்கிறார்களோ, எத்தனை பேர் இந்த மூன்று வருஷமாக உன்னிடம் சாப்பிட்டிருக்கிறார்களோ, அவர்கள் எல்லோருடைய சாதியும் போச்சு. அவர்கள் எல்லோரிடமும் நான் சென்று சொல்லப் போகிறேன்."

இப்பொழுது ஹரிதயாலுக்குக் கொஞ்சம் பயம் உண்டாகியது. பயத்தின் உண்மைக் காரணத்தை அறிவதற்கு முன்பே அவருடைய பலமான குரல் மந்தமடைந்தது.

"நான் ஜனங்களின் சாதியைக் கெடுத்துவிட்டேனா?"

" சந்தேகமென்ன? இதை நான் ரூபிக்க முடியும்."

ஹரிதயால் கீழ் ஸ்தாயியில், " அடே! விஷயம் என்னப்பா? கொஞ்சம் வெளிப்படையாகச் சொல்லேன்" என்று கேட்டார்.

அவன் புன்சிரிப்புடன், " தனியாகவே கேட்கிறீரா? அல்லது நாலு பேர்களைக் கூட்டிக் கொள்கிறீரா? அக்கம் பக்கத்திலுள்ள பத்துப் பேருக்கு எதிரில் கேட்டால் நன்றாயிருக்குமே" என்றான்.

ஹரிதயால் அவனது கரத்தைப் பிடித்துக்கொண்டார். " அப்பா! கோபமடையாதே. நான் உன்னிடத்தில் தவறுதலாக நடந்துகொண்டு விட்டேன். அதை ஒன்றும் மனதில் வைக்காதே வா, உள்ளே போவோம்!"

இருவரும் உள்ளே ஓர் அறையில் போய் உட்கார்ந்தார்கள்.

ஹரிதயால், " சரி, விஷயம் என்ன?" என்று கேட்டார்.

" நீர் யார் கையால் சாப்பிடுகிறீரோ, அந்தச் சுலோசனா இருக்கிறாளே, அவள் உமக்கு எங்கிருந்து கிடைத்தாள் ?"

" இங்கேதான். மிகவும் தரித்திரத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். நான் அடைக்கலம் கொடுத்தேன்."

" நீ பணக்காரிக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறாய் என்று நான் சொல்ல வரவில்லை. நான் கேட்பது என்ன வென்றால் இவள் என்ன சாதி என்பதை விசாரித்தீரா ?"

ஹரிதயாலின் முகம் ஒரேயடியாக வெளுத்துவிட்டது. " அவள் ஒரு பிராமணப் பெண், விதவை. நல்ல நடத்தை யுடையவள். பின் அவள் கையில் சாப்பிடுவதில் என்ன குற்றம் ?" என்றார் அவர்.

" இவள் பிராமணப் பெண், விதவை. ஒப்புக் கொள்கிறேன். ஆனால், சாதியைவிட்டு வெளி வந்தவளைக் கூட நல்ல நடத்தையுடையவள் என்று சொல்கிறார்களா? அவள் கையால் சாப்பிடுகிறார்களா ?"

ஹரிதயால் நாக்கைக் கடித்துக்கொண்டு, " சிவ, சிவ! அவள் கையால் எப்படிச் சாப்பிடக்கூடும் ?" என்று கூறினார்.

" அதுதான் விஷயம். பதினைந்து பதினாறு வருஷத் திற்கு முந்தி சுலோசனா கையில் மூன்று வருஷக் குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பி வந்துவிட்டாள். நீர் அவளுக்கு அடைக்கலம் கொடுத்து உம் சாதியையும் மற்ற அநேகர் சாதியையும் கெடுத்து விட்டீர்."

" இதற்கு ருஜு ?"

" ஏன் ருஜு இல்லை! அதைப் பற்றிக் கவலைப்படா தேயும். யாருடன் இவள் வீட்டை விட்டு ஓடி வந்தாளோ,

அந்த எல்லேயற்ற காதல் களஞ்சியமான ராகால் பட்டாச்சார்யா இன்னும் உயிரோடுதான் இருக்கிருன்."

ஹரிதயால் கொஞ்ச நேரம் அந்த மனிதன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். ஒரு வேளே இவனுடைய பெயரே ராகாலாயிருக்குமோ என்று யோசித்தார். "நீ என்ன பிராமணஞ ?" என்று கேட்டார்.

அந்த மனிதன் தனது அழுக்கடைந்த போர்வைக்குள்ளிருந்து, அதைவிட அழுக்கடைந்து அறுந்து தொங்கிக் கொண்டிருந்த பூணூலே வெளியே எடுத்து, சிரித்துக் கொண்டே, "இல்லே, நான் இடையன்" என்ருன்.

ஹரிதயால் இன்னும் கொஞ்சம் நகர்ந்து உட்கார்ந்து கொண்டார். "பார்ப்பதற்கு நீ சக்கிலியன் போலிருக்கிருய். சரி, நமஸ்காரம் !" என்ருர்.

அந்த மனிதனுக்குக் கோபம் வரவில்லே. அவன், "நமஸ்காரம். உம்முடைய உத்தேசம் தப்பல்ல. என்னேச் 'சக்கிலி'யென்றும் சொல்லலாம்; அன்னிய மதஸ்தன் என்றும் சொல்லலாம். நான் சாதிப் பிரிவினேகளே ஒத்துக் கொள்வதில்லே. பரமஹம்சராக்கும் !" என்ருன்.

"நீ பெரிய வாயாடியாயிருக்கிருயே !"

"இதை நீர் சொல்லவேண்டிய அவசியமேயில்லே. ஏனெனில், இதற்கு முன்பே பல கனவான்கள் மனது வைத்து, இந்த விஷயத்தைச் சொல்லி அருளியிருக்கிருர்கள். நான் எப்படி இருந்தவன் எப்படி மாறிவிட்டேன் என்பது எனக்கே தெரியும். ஆனுல், நான் தான் ராகால்தாஸ்—இது நிச்சயம் !"

ஹரிதயால் முகம் அளவு கடந்த கோபத்தால் சிவந்தது. அவர் மிகக் கஷ்டத்துடன் தமது மனேபாவத்தை

மறைத்துக்கொண்டு, "சரி, இப்போது என்ன செய்ய விரும்புகிருய்? இதைச் சொல்லு! சுலோசனுவை அழைத்துப் போகப் போகிருயா?" என்று கேட்டார்.

"இல்லை ஐயா! இதனுல் உமக்குச் சோறு தண்ணீருக்குக் கஷ்டம் உண்டாகும். நான் அவ்வளவு கெட்டவனல்ல."

ரொம்ப கசப்புடன் ஹரிதயால் இந்தப் பரிகாசத்தைக் கேட்டுக்கொண்டார். இதற்கப்புறம் அவர், "சரி, பின் உனக்கு என்ன வேண்டும்? இங்கே எதற்காக வந்தாய்? அதைச் சொல்லு!" என்று கேட்டார்.

"பணம் வேண்டும்! பெரிய பண நெருக்கடியா யிருக்கிறது. ரொம்ப கஷ்டத்திலிருக்கிறேன். ஆகையால் வந்திருக்கிறேன். இரண்டாயிரம் ரூபாய் கிடைத்து விட்டால் பேசாமல் போய் விடுவேன். இதுதான் சொல்ல வந்தேன்."

"சபாஷ்! இவ்வளவு ரூபாய் உனக்கு யார் கொடுப்பார்கள்?"

"கொடுக்கிறவர்கள் கொடுக்கிருர்கள். நீர் கொடுப்பீர். சுலோசனுவின் மாப்பிள்ளை கொடுப்பார். அவர்தான் பெரிய செல்வ வந்தராச்சே!"

ஹரிதயால் அவனுடைய சாமர்த்தியத்தைக் கண்டு மனதிற்குள்ளாகவே திடுக்கிட்டார். இந்த மனிதன் ஒரு பெரிய தூர்த்தன், தந்திரக்காரன் என்று தெரிந்து கொண்டார்.

"அண்ணு! நானே ஏழை. நான் இத்தனை ரூபாயை எப்போதும் கண்ணுல்கூடக் கண்டதில்லை. சுலோசனு மாப்பிள்ளை கொடுக்கக்கூடும்; இது சரிதான். ஆனல், அவன் கூடத் தரமாட்டான். நீ இன்னும் அவனை அறிய

வில்லை. இரண்டாயிரம் ரூபாய் ஒரு பக்கமிருக்கட்டும். பயமுறுத்தி நீ அவனிடம் இரண்டு பைசாக்கூட வாங்க முடியாது. நீ புத்திசாலி என்று நான் நினைக்கிறேன். ஆனால், அவன் உன்னைவிடப் புத்திசாலி. ஆகையால் நீ வேறு எங்கேயாவது வலையை வீசு. இங்கே காரியம் பலிக்காது" என்று கூறினார்.

முதலில் ராகால் கொஞ்ச நேரம் ஹரிதயாலின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு புன் சிரிப்புடன், "நல்லது. பார்த்துக் கொள்ளலாம். இதைப் பற்றி நான் யோசித்துக் கொள்கிறேன். ஆனால் கூட, ..............முயற்சித்தும் சித்திக்காவிட்டால்—"

ஹரிதயால் அவனைச் சட்டென்று இடை மறித்து, "பொறு அண்ணா, தேவ பாஷையை அசுத்தப் படுத்தாதே" என்றார்.

ராகால் மிகத் தாழ்மையாக, "உத்தரவு! ஆனால், இப்பொழுது நான் அதிக நேரம் தாமதிக்க முடியாது. நீங்கள் அவருடைய விலாசத்தைக் கொஞ்சம் தெரியப் படுத்துங்கள்" என்றான்.

"விலாசம் சுலோசனாவிடம் கேட்கவில்லையா, அண்ணா?"

"அவள் சொல்லமாட்டாள். நீங்கள் சொல்லுங்கள்."

"நானும் சொல்லாவிட்டால்?"

ராகால் சாந்தமாக, "இல்லை, நீங்கள் அவசியம் சொல்லுவீர்கள். நீங்கள் சொல்லாவிட்டால் நான் என்ன செய்வேன் என்பதை முதலிலேயே சொல்லியிருக்கிறேன்" என்றான்.

ஹரிதயாலின் முகம் வாடியது. "அண்ணா, உனக்கு நான் ஒன்றும் செய்யவில்லையே?" என்றார்.

" ஆம். நீங்கள் ஒன்றும் செய்யாததால்தான் நான் இப்பொழுது இதைச் சொல்கிறேன். நீங்கள் ஊர், பேர் சொன்னுல், மாப்பிள்ளையை ஒரு முறை பார்த்து வருவேன். மகளைப் பார்த்தும் வெகு நாளாய்விட்டது, அவளையும் பார்த்து வருவேன்."

ஹரிதயால் உண்மையிலேயே பயந்துவிட்டார். ஆனுலும் வார்த்தையில் கொஞ்சம் தைரியத்தைக் காண்பித்துக்கொண்டு, " நான் உனக்கு உதவி செய்ய மாட்டேன். உன்னுடைய இஷ்டம்போல் செய் தெரியாமல் ஒரு பாபம் நேர்ந்துவிட்டது. அதற்காகப் பிராயச்சித்தம் செய்து கொள்வேன். அப்புறம் எனக்கு எதற்காகப் பயம் ?" என்ருர்.

" ஒன்றுக்கும் பயமில்லாவிட்டால் இன்றைக்கே எல்லாப் பண்டாக்களுக்கும் இந்த விஷயம் பரவிவிடும். அதற்குப் பிறகு எப்படியோ விலாசம் தெரிந்துகொண்டு, சுலோசனுவின் மாப்பிள்ளையிடம் போய், அங்கும் இதைப் பகிரங்கப்படுத்துவேன். நல்லது, பண்டாஜி ! நமஸ்காரம். நான் போய் வருகிறேன்."

சொன்னபடியே அவன் எழுந்து போகத் தொடங்கினுன். உடனே ஹரிதயால், அவனுடைய கையைப் பிடித்து உட்கார வைத்து, மெதுவாக, " அண்ணு, நீ சுலபத்தில் விடக்கூடிய ஆசாமி அல்லவென்று நான் தெரிந்து கொண்டேன். சும்மா, கோபமடையாதே. சொல்வதைக் கேளு. இந்தப் பேச்செல்லாம் இப்படியே இருக்கட்டும். மேலே வளர்த்தாதே. இன்னும் ஐந்தாறு நாளைக்கப்புறம் மறுபடியும் இங்கே வா. அப்போது முடிகிறதைச் செய்கிறேன் " என்ருர்.

" ஆனுல், அன்றைக்கும் இப்படித் திருப்பியடித்தால் காரியம் ஆகாது. இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்."

ஹரிதயால் சுட்டு விடுபவர்போல் ராகாலைப் பார்த்துக் கொண்டு, "ஏன் அண்ணு, நீ வாஸ்தவத்திலே பிராமணக் குழந்தையா ?" என்ருர்.

"ஆமாம்."

"ஆச்சரியமாயிருக்கிறது! சரி, ஏழெட்டு நாளைக் கப்புறம் வா. ஆனல், இதற்கிடையில் யாரிடத்திலும் சொல்லக்கூடாது, தெரிந்ததா ?"

ராகால், "ஐயா, அப்படியே!" என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டான். இரண்டு மூன்று அடி முன் சென்று மறுபடியும் திரும்பி வந்து, "சரியான பேச்சுத் தான். ஆனல், எனக்கு இரண்டு ரூபாய் கொடுங்கள். அட ஆண்டவா! மணிபர்ஸ் எங்கேயோ விழுந்து விட்டதே!" என்ருன்.

இதைச் சொல்லிவிட்டு ராகால் பல்லெல்லாம் காட்டிச் சிரிக்கத் தொடங்கினன்.

ஹரிதயால் கோபத்தால் அவன் முகத்தைக்கூடப் பார்க்கவில்லை. அவர் பேசாமல் இரண்டு ரூபாய் எடுத்து வந்து அவன் கையில் கொடுத்தார்.

ராகால் பணத்தை வாங்கி இடுப்பில் சொருகிக் கொண்டு அங்கிருந்து கிளம்பினன்.

அவன் போய்விட்டான். ஆனலும், வெகு நேரம் வரை ஹரிதயால் ஸ்தம்பித்துப் போய் அங்கேயே உட்கார்ந்துகொண்டிருந்தார். அவருடைய தேகத்தில் ஒரே சமயத்தில் ஆயிரம் தேள்கள் கொட்டியது போன்ற எரிச்சல் உண்டாயிற்று.

## ஏழாம் அத்தியாயம்

சுலோசனை எங்கே? இந்த மூன்று நாட்களாக ஹரிதயால் உண்பது, உறங்குவது, பூஜை புனஸ்காரங்கள் செய்வது, யாத்ரிகர்களைத் தேடுவது முதலிய எல்லாவற்றையும் விட்டுவிட்டு, இந்தக் காசிப் பட்டணம் பூராவும் தேடித் திரிந்தும், அவர் கண்களுக்குச் சுலோசனை தென்படவில்லை.

கடைசியில் அவர் களைப்படைந்து வீடு திரும்பி வந்தார். தம்முடைய மண்டையிலடித்துக் கொண்டு, "ஹே, ஈச்வரா! இதென்ன கஷ்டகாலம்! ஓர் அனுதை யிடம் இரக்கங்காட்டப் போய் என் தலையிலே இப்படி வந்து விடிந்ததே!" என்று சொல்லிக் கொண்டார். தெருக் கோடியில் சித்தப்பா கைலாஸரின் வீடு இருந்தது. ஹரிதயால் அங்கே போய்ப் பார்த்தார். யாருமில்லை.

"சித்தப்பா, வீட்டில் இருக்கிறீர்களா?" என்று கூப்பிட்டுப் பார்த்தார்.

ஆனால், ஒரு பதிலும் கிடைக்காததால் ஹரிதயால் உள்ளே நுழைந்தார். அங்கே போனதும், கைலாஸ் விளக்கடியில் தமக்கு முன்னால் சதுரங்கத்தைப் பரப்பி வைத்துக் கொண்டிருந்ததைக் கண்டார்.

"சித்தப்பா, தனியாகவே விளையாட ஆரம்பித்து விட்டீரா?" என்று கேட்டார். கைலாஸ் அவரைப் பார்த்ததும், "வா அப்பா, இதைக் கொஞ்சம் நகர்த்திக் காப்பாற்று" என்றார்.

ஹரிதயால் விரக்தியடைந்து, மனதிற்குள் திட்டிக் கொண்டு, "நம்முடைய ஜாதியே அதோகதியாகும்

போலிருக்கிறது. நீங்கள் சதுரங்கக் காயைக் காப்பாற்றச் சொல்கிறீர்களே ?" என்றார்.

இவர் சொன்னது கைலாஸுக்கு அரை குறையாகக் கேட்டது.

" என்னப்பா சொன்னாய் ?" என்று கேட்டார்.

" அன்றைய சமாசாரத்தைக் கேட்டீரோ என்று சொன்னேன்."

" எந்தச் சமாசாரம் ?"

" அன்றைக்கொரு நாள் என்னுடைய வீட்டிலே சச்சரவு நடந்து கொண்டிருந்ததே ?"

" அப்படியா ? நான் அதை நன்றாகக் கேட்கவில்லை ஒரு வேளை மெதுவாக நடந்திருக்குமாக்கும். ஆனால் அன்று உன் 'பட்சி' அடங்கிப் போயிருந்தது."

" ஆம், 'பட்சி' அடங்கித்தான் போய்விட்டது. ஆனால், அன்றைய சங்கதி ஒன்றும் தெரியாதே ?"

கைலாஸ் சற்று நேரம் யோசித்துவிட்டு, " நான் ஒண்ணும் இதுவரை கேள்விப்படவில்லை. சபாஷ் ! காதும் காதும் வைத்தாப்போல் பேச்சு நடந்து கொண் டிருந்தபோது, நான் எப்படிக் கேட்க முடியும் ? ஆனால், ஞாபகம் இருக்கு அன்று ஆட்டம் எப்படிக் கூடியிருந்தது. உன்னுடைய மந்திரியை நீ தப்புவிக்க முடியவில்லை. ஆட்டமென்றால் அதுதான் ஆட்டம். சரி, கொஞ்சம் இதைக் காப்பாற்று. எப்படித் தப்புவிக்கிறாயோ, பார்க் கிறேனே" என்றார். ஹரிதயால் வெறுப்படைந்து, " மந்திரியைக் கொண்டு போய் அடுப்பிலே போடும் ; அன்றைய சங்கதியைக் கேள்விப்படவில்லையா என்று கேட்கிறேன் " என்றார்.

ஹரிதயாலின் வெறுப்புற்ற முகத்தைக் கைலாஸ் ஒரு முறை பார்த்துவிட்டு, கொஞ்சம் பிரமிப்புடன், " என்ன எழவப்பா ? எனக்கு ஒண்ணும் ஞாபகம் இல்லையே ?" என்ருர். ஹரிதயால் கொஞ்ச நேரம் மௌனமாயிருந்து விட்டு, கம்பீரமாக, " சரி, உலகத்திலே வேறு என்ன செய்கிறீரோ, செய்யவில்லையோ நீர் பரலோகத்தை நம்புகிறீரா, என்ன ?" என்று கேட்டார்.

" ஏன், நம்பாமலென்ன ?"

" அப்படியாளுல், அதற்காக ஏதாவது காரியம் செய்திருக்கிறீரா ? எப்போதாவது ஒரு நாளைக்காகிலும் கோவிலுக்குப் போயிருக்கிறீரா ?"

கைலாஸ் சற்று ஆச்சரியமடைந்து, " அடே, இதென்ன பேச்சு ? நான் ஒரு நாளும் கோவிலுக்குப் போனதில்லையா ? எத்தனையோ நாள் போயிருக் கிறேனே !"

ஹரிதயால் மிடுக்காகப் பேச ஆரம்பித்தார். " நீர் இருபது வருஷமாகக் காசியில் இருந்தாய்விட்டது. ஆனுல், இருபது நாள் கூட ஒரு தெய்வத்தைத் தொழு திருக்க மாட்டீர் எனத் தோன்றுகிறது. உமக்கும் பூஜைக்கும் வெகு தூரமாச்சே !"

கைலாஸ் அதற்குச் சரியாகவே, " இல்லை, அப்பனே, இருபது நாளைக்கு அதிகமாகவே ஸ்வாமி தரிசனத்திற்குப் போயிருப்பேன். ஆனுலும் அப்பா, உனக்குத்தான் தெரியுமே. எனக்கு நேரம் கிடைப்பதில்லை. அதனுல் பூஜை புனஸ்காரம் ஒன்றும் செய்ய முடிவதில்லை. நீதான் பார்க்கிருயே. விடிந்ததும் விடியாததுமாய் ஷம்பூ மிஸ்ர ரிடம் ஓர் ஆட்டம் ஆடவேண்டியிருக்கிறது. அவர் நன்ருக ஆடுகிருர். ஓர் ஆட்டம் முடிவதற்குள் மத்தியான மாகிவிடுகிறது. அவ்வளவுதான் ! அதற்குப் பிறகு

குளித்து, துணிகளைத் துவைத்து, சமையல் செய்கிறேன். போஜனம் முடிவதற்குள் மாலை ஆகிவிடுகிறது. அப்புறம் கங்கா பாண்டே என்ன சொன்னாலும் அவனுடைய ஆட்டமும் மெச்சத்தக்கதே ; அவன் அன்றைக்கு என்னை வரிசையாகக் கட்டிவிட்டான். ஒரு பக்கத்திலிருந்து குதிரையும், இன்னொரு பக்கத்திலிருந்து யானையும் கொண்டு வந்து அடைத்துக் கொண்டே வந்தான். நான் என்ன நினைத்தேனென்றால்......"

" சித்தப்பா, இதையெல்லாம் விட்டுத் தள்ளும். மத்தியான நேரத்தில் என்ன செய்கிறீர் ? சொல்லும்."

" மத்தியானத்தில் ! கங்கா பாண்டேயுடன்—அவன் தன் இரண்டு யானைகளையும் என்ன பண்ணினான் என்றால்......"

ஹரிதயால் ரொம்ப எரிச்சலடைந்து அவரைத் தடுத்தார். " போதுமே ! சும்மா இருங்கள். மத்தியானம் கங்கா பாண்டே, மாலையில் முகுந்த கோஷின் கச்சேரி, அப்புறம் உமக்கு நேரம் கிடைச்சு நாசமாப் போச்சு !"

கைலாஸ் பேசாமலிருந்து கொண்டார்.

ஹரிதயால் பின்னால் உபதேசம் செய்ய ஆரம்பித்தார். " சித்தப்பா, காலமெல்லாம் ஆகிவிட்டது. பரலோகத்துக்குத் தயாராக வேண்டும். அதற்காகக் கொஞ்சமாவது சிந்திக்க வேண்டும். அங்கே இந்தச் சதுரங்கக் காய்களைக் கொண்டு போக முடியாது. தெரியுமோ ?"

கைலாஸ் பலமாகச் சிரித்தார். " ஆமாம், ஸ்வாமி ! சதுரங்கக் காய்களையுங்கூட எடுத்துப் போக முடியாதென்றுதான் படுகிறது. ஆனால், நீ என்னைத் தயார் ஆகச் சொல்லுகிறாயே, நான் தயாரோடுதான் உட்கார்ந்திருக்கிறேன். என்றைக்கு ஓலை வருமோ அன்றே

இதெல்லாம் யாருக்காவது கொடுத்துவிட்டு, நேராகப் போய்விடுவேன். இதைப்பற்றி யோசிக்கவேண்டியதன் அவசியம் என்னடாப்பா ?"

" வேறொன்றுமே இல்லையா ?"

" கொஞ்சமும் இல்லையப்பா ; துளிக்கூட இல்லை. என்றைக்கு எனது கமல் போனானோ, என்று கமலசரண் என் முகத்தைப் பார்த்துக்கொண்டே கண்ணை மூடிக் கொண்டானோ, அன்றே சந்தேகம், பயம் முதலிய எல்லா உபத்திரவங்களும் அவன் பின்னாலேயே சென்று விட்டனவே ! அந்த இம்சையெல்லாம் எப்படிப் போயிற் றென்று எனக்குத் தெரியவில்லையே !"

பேசப் பேச விருத்தரின் கண்களில் முத்து முத்தாக நீர் துளித்தது.

ஹரிதயால், " சரி, இதையெல்லாம் விட்டுத் தள்ளும்; நான் சொல்லும் ஒரு வார்த்தையைக் கேட்பீரா ?" என்று கேட்டார்.

" உம், சொல்லு."

ஹரிதயால் அன்று நடந்த எல்லா விஷயங்களையும் ஒன்று விடாது சொன்னார். கடைசியாக, " இப்போது என்ன செய்வது ?" என்று வினவினார்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டு வந்தபோதே, சதா மலர்ந்திருக்கும் கைலாஸின் முகம் ஒளி இழந்தது.

அவர் தழ தழத்த குரலில், " ஹரி, இது பச்சைப் பொய். சுலோசனா, சதி சாவித்திரி போன்றவளாக்கும் " என்றார்.

" நானும் முதலில் அப்படித்தான் நினைத்தேன். ஆனால், பெண்களுக்கு இது சகஜம்."

" ராம், ராம், இப்படியெல்லாம் சொல்லாதேயப்பா. மனிதர்கள் எல்லாரும் பாப புண்ணியம் செய்கிறார்கள். இதில், ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு வித்தியாசமும் எனக்குக் காணப்படவில்லை. உன்னுடைய தாயார் விஷயம் உனக்கு ஞாபகத்தில் இருக்கிறதா ? அந்த விஷயத்தை நீ ஒரேயடியாக மறந்துவிட்டாயா ?"

ஹரிதயால் வெட்கமும் வெறுப்பும் அடைந்தார். கொஞ்சநேரம் தலை குனிந்துகொண்டிருந்தார். பிறகு கேட்டார் : " இருந்தாலும் ஜாதி போச்சே ! இதற்கு என்ன செய்வது ?"

கைலாஸ், " பிராயச்சித்தம் செய்து விடு. தெரியாமல் ஏதாவது பாபம் நேர்ந்துவிட்டால், அதற்குப் பிராயச்சித்தம் இல்லையா ?" என்றார்.

" உண்டு, ஆனால், இவ்விடத்தவர்கள் நம்மை ஜாதியை விட்டு நீக்கி வைத்து விடுவார்களே ?"

" வைத்து விடட்டுமே !"

ஹரிதயால் மிகுந்த கோபத்துடன் சொன்னார் : " என்ன, என்ன ! வைத்து விடட்டுமா ? சித்தப்பா, கொஞ்சம் தெரிந்து பேசும்."

" ஆமாமப்பா, தெரிந்துதான் பேசிக்கொண்டிருக்கிறேன். உனக்கும் வயசாகிவிட்டது. ஐம்பதைத் தாண்டியிருப்பாய். இவ்வளவு நாளாக ஜாதி இருந்தது ; இன்னும் பாக்கி, நாலைந்து வருஷத்திற்குத்தான் ஜாதி இல்லாமல் இருக்கட்டுமே ! என்ன, குடி முழுகிப் போய் விடுமா ?"

" இதில் ஆபத்து ஒன்றும் இல்லையா ? ஜாதி போனால் தர்மமும் போச்சே ? பின்பு பகவத் சன்னதியிலே என்ன பதில் அளிப்பது ?"

“ஓர் அனாதைக்கு அடைக்கலம் கொடுத்தேன் என்று சொல்லு.”

ஹரிதயால் மௌனமாக யோசிக்கத் தொடங்கினார். அவர் மனதில் இந்த வார்த்தைகள் இடம் பெறவில்லை.

கொஞ்ச நேரம் சென்றபின், “அப்படியானால் சுலோசனாவின் மாப்பிள்ளையுடைய விலாசத்தை அவனுக்குச் சொல்லட்டுமா ?” என்று கேட்டார்.

“வேண்டாம், சொல்லவே வேண்டாம். ஒரு போக்கிரிக் குடிகாரன், அதட்டி மிரட்டி உன்னிடம் பணம் பறிப்பதா ? பின்னும் ஒரு நல்ல மனிதரின் பிள்ளையிடமும் அந்தக் குண்டனை வசூலுக்கு அனுப்புவதா ? அந்த மோசக்காரனுக்கு நீ ஒன்றும் உதவி செய்யாதே.”

“செய்யாவிட்டால் என் பாடு திண்டாட்டமாய் விடுமே ? அப்புறம்; என்னிடம் ஒரு யக்ஞம் செய்பவன் கூட வரமாட்டானே ? சாப்பிடுவதெப்படி ?”

“பாதகமில்லை. இதற்காகப் பயப்படாதே ! சர்க்கார் தயவால் எனக்கு இருபது ரூபாய் மாதம் ‘பென்ஷன்’ கிடைக்கிறது. இதே போதும் ; இதிலேயே நாமிருவரும், சித்தப்பாவும் மகனும் தாட்டிக் கொள்ளலாம். நாம் ஆனந்தமாகச் சாப்பிடுவோம். சதுரங்கம் விளையாடுவோம். வீட்டை விட்டு எங்கும் வெளிக் கிளம்பவேமாட்டோம்” என்றார். அதிகமான கோபமடைந்திருந்தும், கைலாஸின் வாயிலிருந்து இப்படிச் சிறு பிள்ளைத்தனமான பேச்சைக் கேட்டதும் ஹரிதயால் சிரித்துவிட்டார்.

“சித்தப்பா, என் சுமை என் மேலேயே இருக்கட்டும். உங்களுக்கு வேண்டாம். மேலும், மற்றவருக்காகவா நான் என் ஜாதியை இழப்பேன் ?”

கைலாஸ், " ஆம். ரொம்ப சரியப்பா ; ஆனல், அவனுடைய ஊர் பேர் எல்லாம் சொல்லி அந்தத் தரித்திரப் பெண்ணை அவளுடைய கணவன், குடும்பம், மதிப்பு முதலிய எல்லாவற்றையும் இழக்கச் செய்வதைவிட, இந்தப் பழைய எலும்பை நாய் நரிகள் கவளமாவதிலிருந்து காப்பற்றுவதுதான் நல்லது ! பேஷான விஷயமப்பா ! காப்பாற்று. ஆனல், நீ என்னிடம் பேசவந்த விஷயம் சரியல்ல. ஆனலும், யோசனை கேட்க வந்திருப்பதால், இன்னுமொரு வார்த்தையைக் கேளு. இந்தக் காசி ஸ்தலம், மாதா அன்னபூரணியின் ராஜ்யம் ; இங்கே இருந்து கொண்டும் நீ இவ்விதம், அவளுடைய பத்தினிப் பெண்ணின் காலை வாரிவிட்டால், உனக்குப் புண்ணியம் கிடைக்காது, அப்பா " என்ருர்.

ஹரிதயால் கோபத்துடன், " சித்தப்பா, நீர் எனக்குச் சாபம் கொடுக்கிறீரா, என்ன ?" என்ருர்.

"இல்லை, நீ காசிப் பண்டா, நீ ஸ்வாமி விஸ்வநாதரின் வாகனம். எங்களுடைய சாபம் உன்னைப் பீடிக்காது. நீ இதனல் ஒன்றும் கலவரப்படாதே. ஆனல், நீ முனைந்திருக்கும் காரியம் சாமான்யமானதல்ல. சதி சாவித்திரியைக் கண்டு யமதர்ம ராஜன் கூடப் பயந்திருக்கிருன். போதும், நாம் ரொம்ப நாளாகச் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருக்கிருேம். இது தவிர, உன்னிடம் நான் ரொம்ப அன்பு வைத்திருக்கிறேன் " என்ருர்.

ஹரிதயால் ஒன்றும் சொல்லவில்லை. அவர் வியாகூலத்துடன் எழுந்து நின்றுகொண்டார்.

கைலாஸ், " என் பேச்சு பிடித்ததா ?" என்று கேட்டார்.

" பைத்தியத்தின் பேச்சைக் கேட்க, எனக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும்!"

4

இதைக் கேட்டு, கைலாஸ் மௌனமானுர்.

ஹரிதயால் அங்கிருந்து புறப்பட்டுவிட்டார்.

சதுரங்கக் காய்களை எடுத்துப் பையில் போட்டுவிட்டு, கைலாஸ் யோசிக்கத் தொடங்கினுர்.

"அவன் சொன்னது சரிதான். என்னுடைய யோசனை உண்மையாகவே உலகத்திற்கு உபயோகப் படாததா? ஆம், யாராவது இறந்துவிட்டால், ஆள் கிடைக்காதபோது, ஜனங்கள் தகனக் கிரியை செய்வதற்கு என்னைக் கூப்பிட வருகிருர்கள். எப்போதாவது யாரா கிலும் நோயடைந்தால், அப்போதுகூட சிசுருஷை செய் வதற்காக என்னை அழைக்க வருகிருர்கள். இதைத் தவிர, சிலர் சதுரங்கம் விளையாடுவதற்கு வருகிருர்கள். எனக்கு இத்தனை வயசாகியும் இன்று வரையில் ஒருவரும் என்னிடம் யோசனை கேட்க வந்ததில்லை!"

இப்படி வெகு நேரம் யோசித்தும் அவரால் ஓர் உறுதியும் கொள்ள முடியவில்லை. "சூர்யப் பிரகாசம் போல் ஜக ஜோதியாகவும், ஸ்படிகம்போல் துல்லியமாகவும் இருக்கும் சத்தியத்தை ஜனங்கள் ஏன் அறிய முடிவ தில்லை? இவ்வளவு சுலபமானதை ஏன் உலகத்தார் தெரிந்துகொள்ள முடிவதில்லை?" இந்த இரகசியத்தைக் கைலாஸ் அறிந்து கொள்ளக்கூடவில்லை.

* * *

அன்று இரவே ஹரிதயால், மிகுந்த ஆலோ சனையின் பிறகு, சந்திரநாத்தின் சித்தப்பா மணி சங்க ருக்கு, "சந்திரநாத் தனது விருப்பப்படி ஒரு வேசியின் மகளை விவாகம் செய்து வீட்டிற்குக் கூட்டிப் போயிருக் கிருன்" என்ற கருத்தடங்கிய ஒரு கடிதம் எழுதிவிட்டார்.

# எட்டாம் அத்தியாயம்

ஹரிதயால் எல்லா விஷயங்களையும் விவரமாக மணிசங்கருக்கு எழுதியிருந்தார். ஆகையால் இந்த சமாசாரம் பொய்யல்லவென்று அவர் நம்பினார். ஆனால், என்ன செய்வதென்று அவருக்கு ஒன்றும் புலப்படவில்லை. அவருக்கு இவ்வளவு பெரிய பாரத்தைத் தனியாகத் தூக்குவது கொஞ்சம் கிலேசமாக இருந்தது ; ஆகையால் அவர் கொஞ்சம் கொஞ்சமாக எல்லா விஷயங்களையும் தமது மனைவியிடம் தனிமையில் கூறிவிட்டு, " அவன் என்னிடம் கலந்திருந்தால், இம்மாதிரி உண்டாகி யிருக்குமா ? அல்லது நிலைமை இவ்வளவு மோசமாகும்படி நான் விட்டிருப்பேனா ! சரி, நடந்தது நடந்துவிட்டது ; இந்த விஷயத்தை யாரிடமும் வெளிப்படுத்த வேண்டாம் " என்றார்.

எந்த விஷயத்தையும் நன்கு யோசிப்பதற்குக் கொஞ்சம் நேரம் பிடிக்கிறது ; இரண்டு மூன்று நாள் பொறுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் பெண்களிடத்தில் இந்தப் பேச்சு நடக்க முடியாது ! ஹரிதயால் தமது கடிதத்தில் எழுதியிருந்த விஷயம் முதலில் இரண்டொருவருடைய காதுகளில் விழுந்தது. ஆனால் பிறகு அந்த விஷயத்தை அறிந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. மணிசங்கர் வீட்டுக்குப் பெண் பார்க்க வந்திருந்த அன்று இந்த விஷயம் ஹரிபாலாவின் காதுக்கும் எட்டியது. ஆகையால்தான் அவள் சரயூவைச் சந்திரநாத் எங்ஙனம் விரும்புகிறான் என்ற விவரத்தைச் சூசகமாக அறிய முயன்றாள்.

ஒரு வாரம் கழிந்தது. அதுவரை விஷயம் புகைந்து கொண்டுதானிருந்தது. கொழுந்துவிட்டு எரியவில்லை,

விஷயும் பெண்களிடம் மாத்திரம், அடைபட்ட அருவி போல், சுற்றி அலைந்து வருவதும் போவதுமாயிருந்தது. ஆண்களிடத்திலும் இந்தப் பேச்சு எழுந்தது; ஆனால் அது கொஞ்ச நேரத்திற்குத்தான். ஏனென்றால், அவர்களுக்குச் சந்திரநாத்தை ஜாதியிலிருந்து நீக்கி வைப்பதை விட இன்னும் அநேக வேலைகள் இருந்தன. அவர்களுக்குக் குடும்ப பாரத்தைத் தாங்க வேண்டியிருந்தது. அவர்களுக்குக் கால் நீட்டிக்கொண்டு வெகு நேரம் வரையிலும் உட்காருவதற்கு நேரம் இல்லை. ஆகையால் எந்த விஷயத்தையும் முடிவு கட்டுவதற்கு முன்பே அவர்கள் எல்லோரும் இங்குமங்கும் ஓடிவிடுகிறார்கள்! ஆனாலும் ஏதாவது அற்ப விஷயமாயிருந்து, சந்திரநாத்தும் ஏழையாயிருந்தால், ஒரு வேளை இந்த விஷயமும் துரிதமாக ஒரு முடிவு அடைந்திருக்கும்! ஆனால், இம்மாதிரி நிலைமையில் வெளிப்படையாகக் கட்சி சேர்த்து, தான் அதற்குத் தளபதியாகி, சந்திரநாத்திற்கு எதிராக நிற்பதற்கு யாருக்குமே துணிவு உண்டாகவில்லை. யாராவது அப்படிச் செய்யக்கூடுமானால் அது மணிசங்கர்தான். ஆனால் ஏனோ தெரியவில்லை, அவரும் இது சம்பந்தமாக வார்த்தையே எடுப்பதில்லை.

ஆகவே அக்கம் பக்கத்திலுள்ள வயது சென்ற விதவைகளும் சுமங்கலிகளும் இந்தப் பணியைச் சிரமேற்கொண்டனர். அவர்கள் நிரபராதிகளான விரஜகிஷோர், அவருடைய மனைவி ஹரிகாலி ஆகியவர்களின் தர்மமும் ஜாதியும் தப்பிக்க வேண்டுமென்ற புனிதமான விருப்பத்தால், ரொம்ப துக்கத்துடன், "சரயூவின் தாய் காசியில் ஒரு தாசி. இந்த விஷயம் சந்தேகமின்றி நிரூபணமாகி விட்டது. ஆகையால் அந்தப் பெண் தொட்டதைச் சாப்பிட்டால் உங்கள் இருவர் ஜாதியும் போச்சு; தர்மமும் கெட்டது" என்று தெரியப்படுத்தினார்கள்.

முதலில் ஹரிகாலி வியாகூலத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். மறுபடி அவள், "என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

ராம் மயியின் கிழத் தாயார் ஒரு நீண்ட மூச்சு வாங்கிக் கொண்டு, "ஆவது வேறு என்ன, பெரிய எஜமானி! நடக்க வேண்டியது நடந்தது! எல்லாம் குட்டிச்சுவராய் விட்டது!" என்ருள்.

இவ்வளவு சொல்லிவிட்டு அந்தக் கிழவி ஆதியி லிருந்து அந்தம் வரை எல்லாக் கதையையும் இன்னும் ஒரு முறை விவரித்தாள். அவள் சொல்வதில் கொஞ்சம் மறந்துவிட்டதையெல்லாம் பக்கத்திலிருந்த மற்ற இரண்டு மூன்று ஸ்திரீகள் தெரிவித்தார்கள்! இவ்விதம் கெட்டுக் குட்டிச்சுவரானதை ஹரிகாலி நன்கு அறிந்துகொண் டாள்! ஆனல், அது எவ்வளவு இவளைக் கெடுத்தது, எவ்வளவு வேறு ஒருவரைக் கெடுத்தது என்பதை நன்கு அளவிடுவதற்காக அவள் அங்கிருந்து மௌனமாக எழுந்து தனது அறைக்குள் சென்று கதவை மூடி உட்கார்ந்துகொண்டாள். எந்தப் பெண்கள் தாங்களா கவே நல்லது செய்வதற்காக வந்தார்களோ, அவர்களுக்குத் தாங்கள் செய்த இந்த வேலை நல்லதா கெட்டதா என்று நன்கு புலனுகவில்லை. ஆகையால் அவர்கள் எல்லோரும் வியாகூலமடைந்த முகத்துடன் ஒவ்வொருவராக நழுவத் தொடங்கினுர்கள். ஹரிகாலி தனியாக அறையில் சென்று உட்கார்ந்ததும், "எனது பாழும் விதியிலே இம்மாதிரி நல்ல நிலைமை கடைசி வரையிலும் நிலைக்குமா நிலைக் காதா?" என்று கவலைப்படலானுள்.

"இந்த விஷயம் முழுவதும் உண்மை இல்லாதிருந் தால் வேறு உபாயம்தான் என்ன? என் தங்கை மகள் இன்னும் கலியாணமாகாமலேயே இருக்கிருள், இது வரை

யிலும் அவள் வேறு ஒருவரின் கைக்கும் போகவில்லை ; இதுதான் அவளுக்குச் சரியான சமயம். என்னவானாலும் சரி, கடைசி வரையிலும் நான் இது விஷயமாக உயிரைக் கொடுத்து முயற்சிக்க வேண்டும்!" என்று தீர்மானித்தாள். இதில் துளிக்கூட அவளுக்குச் சந்தேகம் இருக்கவில்லை. இவைகளை எல்லாம் யோசித்து அவள் சந்திரநாத் படிக்கும் அறைக்குப் போனாள்.

ஹரிகாலியின் பயங்கரமான முகத் தோற்றத்தைக் கண்டு சந்திரநாத் சிறிது கவலையடைந்து, "என்ன நடந்தது, மாமி ?" என்று கேட்டான்.

ஹரிகாலி தனது மண்டையிலடித்துக் கொண்டு "மகனே, சந்திரநாத். நாங்கள் தரித்திரத்தால் கஷ்டப் படுபவர்கள் ; இதனாலேயே நீ எங்களுக்கு இவ்வளவு தண்டனை கொடுக்க விரும்பினாயா ?" என்றாள்.

சந்திரநாத் ஸ்தம்பித்துப் போனான். "எவ்வளவோ யோசித்தும் நான் என்ன செய்திருக்கிறேன் என்பதை அறிய முடியவில்லை" என்றான்.

"இப்பொழுது வேறு என்ன மிச்சம் இருக்கிறது ! ஒரு பிடி சோற்றுக்காக எங்கள் ஜாதியும் போச்சு, தர்மமும் போச்சு. மகனே, எங்களுக்குச் சாப்பிடுவதற்கிருந்தால், நீ இவ்விதம் எங்களைக் கெடுக்க முடியுமா ?" என்றாள் ஹரிகாலி.

சந்திரநாத் கொஞ்ச நேரம் பேசாமலிருந்ததற்கு அப்புறம் மிகச் சாந்தமாக, "என்ன நடந்தது ?" என்று கேட்டான்.

ஹரிகாலி முந்தானையால் நீலிக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். "இந்த நாசமாய்ப்போன

விதியிலே எழுதியிருந்தபடி நடந்தது. அடே! எனது ராஜாவே, உன்னை அந்த 'டாகினி' வசப்படுத்தி இந்த வேதனையை உண்டுபண்ணிவிட்டாளே!"

"மாமி, நான் உனது காலைப் பிடிக்கிறேன், விஷயத்தை வெளிப்படையாகச் சொல்லு."

"நான் என்ன சொல்லட்டும்? நீ உனது சித்தப்பாவிடமே போய்க் கேட்டுக்கொள்."

சந்திரநாத்துக்குக் கொஞ்சம் கோபம் வந்தது. "நான் சித்தப்பாவிடமே கேட்க வேண்டுமானால், அப்புறம் நீ ஏன் இம்மாதிரி செய்து கொண்டிருக்கிறாய்?"

"மகனே, நாங்கள்தான் கேடு கெட்டுப் போய் விட்டோமே; அதனால்தான் நான் இப்படிச் செய்கிறேன், வேறு என்ன?"

சந்திரநாத் தனது மாமன் மாமி பேரில் அதிகச் சிரத்தையும் பக்தியும் வைத்திருந்தான். ஆனாலும், இந்த விதமான நடத்தைகளினால் மனிதன் கோபமடைந்து விடுகிறான். ஆகையால் அவன்கூடக் கோபமடைந்தான். அவன் இன்னும் மிகக் கடுகடுப்பாக, "அப்படிக் கேடு கெட்டிருந்தால் வேறு யார் வீட்டிற்காவது போய்விடு. என் முன்னால் இம்மாதிரி செய்யாதே!" என்றான்.

சந்திரநாத்தின் தாயாரின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஹரிகாலி பலமாக அழ ஆரம்பித்தாள்.

"அடி அம்மா, நீ தான் எங்களை இங்கு அழைத்துக் கொண்டு வந்தாய். இன்று உனது மகனே எங்களை வீட்டிலிருந்து துரத்துகிறான்!"

சந்திரநாத் அதிக வியாகூலமடைந்து மாமியின் கைகளைப் பிடித்துக்கொண்டான். "மாமி எப்படி உங்களுக்கு நாசம் உண்டாயிற்று என்று வாய்திறந்து வெளிப்

...RSITY EXTENSION...

படையாகச் சொல்லாத வரையிலும், நான் எப்படி அறிவேன் ? சும்மா ' பாழாப் போச்சு, பாழாப் போச்சு ' என்று சொல்கிருய். ஆனல் இது வரையிலும் ஒரு தெளிவான வார்த்தை கூட உன் வாயிலிருந்து கிளம்பவில்லையே."

ஹரிகாலி மறுபடி ஒரு தரம் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, " ஏன் மகனே, உனக்கு ஒன்றுமே தெரியாதா ?" என்று கேட்டாள்.

" தெரியாது."

" உன்னுடைய சித்தப்பாவுக்குக் காசியிலிருந்து உனது பண்டா ஒரு கடிதம் எழுதியிருக்கிருர்."

" என்ன எழுதியிருக்கிறது ?"

ஹரிகாலி ஏறிட்டுப் பார்த்துவிட்டு, தலை குனிந்து கொண்டாள். " மகனே, காசியிலே உன்னைத் தனியாக ' மோகினி ' சிக்கவைத்துவிட்டாள். தாசியை உனக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட்டாள்."

சந்திரநாத் கண்ணைத் திறந்து, " என்ன சொன்ருய்? யாருக்கு விவாகம் செய்து வைத்தாள் ?" என்ருன்.

ஹரிகாலி தலையிலடித்துக் கொண்டு, " உனக்கு " என்ருள்.

" எனக்கா ?"

" ஆம், உனக்குத்தான்."

" விவாகம் ஆவதற்கு முன்பே சரயூ விபசாரம் செய்து கொண்டிருந்தாள் என்பதுதான் அதனுடைய அர்த்தமா ? நம் வீட்டிற்கு அவள் வரும்போது அவளுக்குப் பத்து வயதுதானே ஆகியிருந்தது ?"

" இது எனக்குச் சரியாகத் தெரியாது, சந்திரநாத். ஆனல் காசியில் அவளுடைய தாயாருக்கு ரொம்பக் கெட்ட பெயராம்."

" அவளுடைய தாயார் விபசாரம் செய்து கொண் டிருந்தாளென்று சொல்லு ; இவள் வேசியாயிருக்க வில்லையே ?"

ஹரிகாலி மனதிற்குள் சிறிது பயமடைந்து, "மகனே, எப்படியிருந்தால் என்ன ? எல்லாம் ஒன்றுதானே ?" என்ருள்.

சந்திரநாத், " மாமி, நீ யாரிடத்தில் என்ன சொல்லிக் கொண்டிருக்கிருய் ? உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன ?" என்று படபடவென்று கேட்டான்.

ஹரிகாலி மீண்டும் அழுதுகொண்டே, " மகனே, பேச்சுத்தான் பைத்தியமாக்குவதாயிருக்கிறது. எங்கள் இருவருக்கும் பிராயச்சித்தம் செய்து வை. பிறகு எங்கேயோ கால் போகிறபடி போய்க் கொள்கிருேம் ! இதைவிடப் பிச்சை வாங்கி உண்பது மேல் " என்ருள். சந்திரநாத்தும் கோபத்துடன், " ஆம், அதுதான் நல்லது " என்ருன்.

" ஆனுல் நாங்கள் போய்விடவா ?"

சந்திரநாத் முகத்தைத் திருப்பிக்கொண்டு, " ஆம், போ !" என்ருன்.

உடனே ஹரிகாலி தனது தலையில் பலமாக அடித்துக் கொண்டு, " ஐயோடி, பாழும் விதியே, கடைசியில் தலையில் இப்படியா எழுதியிருந்தது ?" என்று அழ ஆரம்பித்தாள்.

சந்திரநாத் முகத்தைத் திருப்பி, " இருந்தும் நீ தெளிவாக விஷயத்தைச் சொல்ல மாட்டாயா ?" என்று கேட்டான்.

" எல்லாம் சொல்லியிருக்கிறது."

" அந்தக் கடிதம் எங்கிருக்கிறது ?"

" உன் சித்தப்பாவிடம்."

மிதமிஞ்சிய வெட்கத்தாலும் வெறுப்பாலும் அவன் உடல் உச்சந் தலைபிலிருந்து உள்ளங் கால் வரையிலும் நடுங்கியது ; உடல் பூராவும் மரத்துப் போயிற்று. சந்திர நாத்தின் முகத்தைப் பார்த்து ஹரிகாலி மனதிற்குள்ளாகவே பயந்தாள். அவள் பேசாமல் அங்கிருந்து நகர்ந்தாள்.

## ஒன்பதாம் அத்தியாயம்

" என்னமோ கடிதமாமே, பார்க்கலாமா ?" என்றான் சந்திரநாத்.

மணிசங்கர் ஒன்றும் பேசாமல் ஒரு பெட்டியைத் திறந்தார். அதிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து அவனுடைய கையில் கொடுத்தார். சந்திரநாத் முதலிலிருந்து கடைசி வரையிலும் இரு முறை கடிதத்தைப் படித்தான். வாடிய முகத்துடன், " இதற்கு ருஜு ?" என்று கேட்டான்.

" ராகால்தாஸ். அவனே இங்கு வரப் போகிறான்."

" அவனுடைய பேச்சுக்கு என்ன அத்தாட்சி ?"

" அது சொல்ல முடியாது. உன் புத்திக்கு எப்படிப் படுகிறதோ, அப்படிச் செய்."

" அவன் எதற்காக வருகிறான் ? இந்த விஷயத்தை நிரூபணம் செய்வதால் அவனுக்கு என்ன லாபம் உண்டாகும் ?"

" லாப விஷயந்தான் இதில் எழுதியிருக்கிறதே ! அவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் தர வேண்டுமாம்."

சந்திரநாத் மணிசங்கரின் முகத்தை அசையாமல் பார்த்துக்கொண்டே, " இந்த விஷயம் வெளிப்படாதிருந் தால் அவன் நம்மைப் பயமுறுத்திப் பணம் வசூல் செய்ய முடியும். ஆனுல் இப்பொழுது அவனது ஆசையில் மண் விழுந்தது. நீங்கள் ஒரு விதத்தில் எனக்கு உபகாரந் தான் செய்திருக்கிறீர்கள். இல்லாவிட்டால் எனக்கு இரண்டாயிரம் ரூபாய் நஷ்டமாயிருக்கும் " என்ருன்.

மணிசங்கர் வெட்கத்தில் மூழ்கினுர். " நான் இந்த விஷயத்தைப் பகிரங்கப் படுத்தவில்லையே " என்று சொல்லலாமெனத் தோன்றியது. ஆனுல், உடனே, " தன் மூலமாகத்தானே அது வெளிப்பட்டிருக்கிறது " என்பது நினைவிற்கு வந்தது. அவர் தம் மனைவியிடம் சொல்லாதிருந்தால், விஷயம் யாருக்குத் தெரியப் போகிறது ? ஆகவே அவர் தலை குனிந்து உட்கார்ந்தார்.

சந்திரநாத் மறுபடியும், " இந்தக் கிராமம் என், னுடையது. இருந்தும் ஒரு தூர்த்தன் என்ன துணி வோடு என்னை அவமானப்படுத்துவதற்காக வருகிருனே, தெரியவில்லை. ஆனுல் சித்தப்பா, நான் போய்விட்டால் நீங்கள் சுகம் அடைவீர்களா ?" என்று கேட்டான்.

மணிசங்கர் நாக்கைக் கடித்துக்கொண்டு, " ராம் ராம் ! நீ இப்படியெல்லாம் கன்னு பின்னுவென்று சொல்லாதே, அப்பா " என்ருர்.

" இனி இப்படிச் சொல்லவேண்டிய அவசியமிருக் காது. நீங்கள் எனது வணக்கத்திற்கு உரியவர். நான் ஏதாவது தப்பிதம் செய்திருந்தால் நீங்கள் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். என்னிடமுள்ள திரவியத்தை எல்லாம் தாங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். நான் எங்கு வசிக்கிறேனே அந்த இடத்திற்கு மாதம் கொஞ்சம் அனுப் பித்து வையுங்கள், அது போதும் " என்ருன் சந்திரநாத்.

இப்படிச் சொன்னபோது சந்திரநாத்தின் தொண்டை அடைத்துக்கொண்டது. பொங்கி வந்த அழுகையை மிகக் கஷ்டத்துடன் அடக்கிக் கொண்டான். மணிசங்கர் எழுந்து நின்று சந்திரநாத்தின் வலது கரத்தைப் பலமாக பிடித்து அழுத்தியபடி தாமும் அழலானுர். " மகனே சந்திரநாத், எனது காலஞ் சென்ற தமையன் வம்சத்தில் நீ ஒருவன்தான் இருக்கிருய். நான் உன்னிடம் பிச்சை கேட்கிறேன். இனியும் நீ இந்தக் கிழவனை அவமானப் படுத்தாதே " என்று சொன்னுர்.

" சித்தப்பா, நான் உங்களை அவமானம் செய்ய வில்லை. ஆனுல், இவ்வளவு பெரிய துர்ப்பாக்கியத்திற் கப்புறம் ஊரைவிட்டுப் போவதைத் தவிர எனக்கு! வேறு ஒரு வழியும் தோன்றவில்லை."

மணிசங்கர் ஆச்சரியமடைந்த குரலில், " ஏன், ஊரை விட்டு நீ ஏன் போகவேணும் ? நாட்டுப் பெண்ணை விட்டு விட்டுப் பேசாமல் நீ ஒரு பிராயச்சித்தம் செய்து கொள். பிறகு விவாகம் செய்துகொண்டு குடும்பத்தை நடத்து " என்றுர்.

சந்திரநாத் நடுங்கினுன். " சித்தப்பா, நான் எவ் விதமும் அவளைக் கைவிட முடியாது."

" இல்லை, நீ அவளை விட்டுவிடத்தான் வேண்டும் சந்திரநாத். அவளை எவ்விதமும் வீட்டில் வைத்துக் கொண்டிருக்க முடியாது."

" ஆனுல் எவ்வித ருஜுவும் கிடைக்காதபோதே, நீங்கள் எப்படி அவளை விடும்படி உத்தரவு கொடுக் கிறீர்கள் ?"

மணிசங்கர் கொஞ்ச நேரம் ஏதோ யோசித்தார். பிறகு, " இந்த விஷயமாக அதிகம் நிரூபிக்க வேண்டிய

அவசியமே இல்லை. நீ அவளை விட்டு விடத்தான் வேண்டும். அப்பொழுது எல்லாப் பூசலும் ஒழிந்துவிடும்."

சந்திரநாத் பதில் சொல்லாமல் வீடு திரும்பி வந்து அறைக் கதவைத் தாளிட்டுக் கட்டிலில் படுத்துக் கொண்டான்.

"சரயூவை விட வேண்டியிருக்கும். அவள் விபசாரியின் மகள்."

இந்த வார்த்தையைச் சந்திரநாத் திருப்பித் திருப்பித் தன் மனதில் சொல்லிப் பார்த்துக்கொண்டான். இருந்தும் அதை அவனுடைய மனம் ஒப்புக்கொள்ளவில்லை.

சரயூவை மறப்பது முடியாத காரியம் என்று அவனுக்குப் பட்டது. அவன் உயிரற்றவன் போலப் படுத்திருந்தான்; கடைசியில் அவனுக்குத் தூக்கம் வந்து விட்டது.

வேலைக்காரன் விளக்கைக் கொண்டு வந்து மூடிய கதவைத் தட்டியபோது, சந்திரநாத், 'சட்புட்' என்று எழுந்து உட்கார்ந்து, கதவைத் திறந்து அறையில் உலாவத் தொடங்கினான்!

"இந்த விஷயம் உண்மைதானா? இதைச் சரயூ கூட அறிவாளா" என்று அவனுக்குப் பலமான சந்தேகம் உண்டாயிற்று.

"எனது சரயூ தெரிந்தே என்னை இப்படிக் கெடுப்பாளா?" சந்திரநாத் அவசரமாகத் தனது அறையை விட்டுச் சரயூவின் படுக்கை அறைக்குள் நுழைந்தான்.

விளக்கு ஏற்றிவிட்டு, சரயூ உட்கார்ந்தாள். கணவன் வருவதைக் கண்டதும் அவள் மரியாதையாக எழுந்து நின்றாள். திடீரென, "நீ எல்லாம் கேள்விப்பட்டாயா?" என்று கேட்டான்.

சரயூ தலையைக் குனிந்து கொண்டு, "ஆம்" என்றாள்.

"எல்லாம் உண்மைதானா ?"

"ஆம், உண்மைதான்."

சந்திரநாத் கட்டிலின்மேல் உட்கார்ந்து கொண்டு, "இத்தனை நாளாக ஏன் சொல்லவில்லை ?" என்று கேட்டான்.

"அம்மா தடுத்தாள், நீங்களும் எப்பொழுதும் கேட்கவில்லை."

"நான் உனது தாயாருக்கு உபகாரம் செய்தேன், அதற்கு நீங்கள் இந்தக் கைமாறு செய்திருக்கிறீர்கள் !"

சரயூ பேசாமல் தலை குனிந்து நின்றாள்.

சந்திரநாத் மறுபடியும் பேச ஆரம்பித்தான். "நீ ஏன் இவ்வளவு பயந்துகொண்டிருந்தாய் என்பது இப்பொழுது தெரிகிறது. இதனால்தான் உன் தாயாரும் இங்கே வர இஷ்டப்படவில்லை போலும் ?"

சரயூ தலை குனிந்துகொண்டு, "ஆம்" என்றாள். ஒரு கணத்தில் சந்திரநாத்திற்குப் பழைய விஷயங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தன. அவன் திடீரென கசிந்துருகி, "சரயூ, எனக்கு எல்லா விஷயங்களையும் ஒளிக்காமல் சொல்ல முடியுமா ?" என்றான்.

"உம், சொல்லுகிறேன். எனது மாமா வீடு நவத்வீபத்திற்கு அருகிலிருக்கிறது. ராகால் பட்டாச்சார்யா வீடு என் மாமா வீட்டிற்குப் பக்கத்திலிருந்தது. பால்யத்திலேயே அம்மா அவனை நேசித்தாள். ஒரு தடவை இருவருக்கும் விவாகப் பேச்சுக்கூட எழுந்தது. ஆனால் அவனுடைய குலம் ஒரு மாதிரி. இதனால் விவாகம் நடக்க முடியவில்லை. எனது தந்தை வீடு ஹாலீஷகரில் இருந்தது.

நான் மூன்று வயதுக் குழந்தையாயிருந்தபோதே அவருக்கு மரணம் சம்பவித்துவிட்டது. அம்மா என்னை எடுத்துக்கொண்டு மறுபடியும் நவத்வீபத்திற்கே வந்தாள். அதற்கப்புறம் எனக்கு ஐந்தாறு வருஷமிருக்கும்போது அம்மா என்னைக் கூட்டிக்கொண்டு......"

"அதற்கப்புறம் ?"

"கொஞ்ச நாள் வரையிலும் நாங்கள் மதுரையில் வசித்தோம். பிருந்தாவனத்தில் வசித்தோம். பிறகு காசிக்கு வந்தோம். அந்தச் சமயத்தில்தான் ராகால் சாராயம் குடிக்க ஆரம்பித்தான். அம்மாவிடம் சில நகைகளிருந்தன. அதற்காகத் தினம் சண்டை ஏற்படத் தொடங்கியது. கடைசியாக ஒரு நாள் இரவு அவன் எல்லா நகைகளையும் திருடிக்கொண்டு ஓடிவிட்டான். அந்த வேளையில் அம்மாவிடம் ஒரு பைசாகூட மிஞ்சியிருக்கவில்லை. நாங்கள் ஏழெட்டு நாள் பிச்சை எடுத்து எப்படியோ ஜீவித்தோம். அதற்கப்புறம் நடந்ததெல்லாம் நீங்கள் அறிந்ததே."

சந்திரநாத்துக்குத் தலையிலே நெருப்புப் பிடித்தது போலிருந்தது. அவன் சரயூவின் குனிந்த முகத்தைக் குரூரமாகப் பார்த்துக்கொண்டு, "ராம் ராம், நீ இம்மாதிரியானவளா சரயூ! எல்லாம் தெரிந்துதான் நீ என்னை அதலபாதாளத்தில் தள்ளிவிட்டாயா ? நீ இவ்வளவு பெரிய பாபிஷ்டியாய் இருப்பாய் என்று நான் கனவிலும் நினைத்ததில்லை !" என்ருன்.

சரயூவின் கண்களிலிருந்து மள மளவென்று நீர் வழிந்தோடிற்று. அவள் தலை குனிந்தபடியே நின்று கொண்டிருந்தாள். ஆனல், சரயூ அழுவதைச் சந்திரநாத்தால் சகிக்க முடியவில்லை. அவன் இன்னும் அதிகக்

கோபத்துடன், "சரி, இதற்கு இப்பொழுது என்ன உபாயம் ?" என்று கேட்டான்.

சரயூ கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மெதுவாக, " அதை நீங்களே சொல்லுங்கள் " என்ருள்.

" சரி, என் அருகில் வா."

சரயூ அருகில் சென்ருள். சந்திரநாத் பலமாக அவளுடைய கையை இறுக்கிப் பிடித்துக்கொண்டு, "நான் உன்னை விட்டுவிட வேண்டுமென்று ஜனங்கள் சொல்கிருர்கள். ஆனுலும், எனக்குத் துணிவு உண்டாகவில்லை. எனக்கு உன் பேரில் நம்பிக்கையுமில்லை—நான் எல்லா நம்பிக்கையையும் இழந்துவிட்டேனே " என்ருன்.

பேசிக்கொண்டிருந்தபோதே சரயூவின் பரிதாபமான வெளுத்த முகத்திலே ஒரு விதமான சிவப்பு படர்ந்தது. அவளுடைய கண்ணீர் நிறைந்த மங்கிய கண்கள் க்ஷணத்தில் பிரகாசித்தன. அவள், " உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இல்லையா ?" என்று கேட்டாள்.

" இல்லை, துளிக்கூட இல்லை. நீ எல்லாம் செய்வாய்."

சரயூ தனது கணவன் முகத்தருகே அவளது முகத்தைக் கொண்டுபோய், திடமான குரலில், " நான் உங்களுக்கு என்ன வேண்டும் என்பது உங்களுக்குத் தெரிந்ததே. ' எனது முகத்தை நன்ருகப் பார் ' என்று நீங்கள் ஒரு தடவை சொன்னீர்கள். ஒரு தடவை எனது முகத்தை உற்றுப் பாருங்கள் என்று நான் இப்பொழுது சொல்லுகிறேன். நான் ஒரு வழி சொல்லுகிறேன், கேட்பீர்களா ?" என்று கேட்டாள்.

"ஊம், கேட்கிறேன், சொல்லு. என்ன வழி ?"

“நான் விஷத்தைத் தின்றுவிட்டால் சரியாகி விடாதா ?”

சந்திரநாத் சரயூ எங்கும் ஓடிப் போகாவண்ணம் பிடியைப் பலமாகக் இறுக்கிக்கொண்டான்.

“ஆம், அது நல்ல வேலைதான். நீ விஷத்தைத் தின்ன முடியுமா ?”

“ஊம், தின்பேன்.”

“ரொம்ப எச்சரிக்கையுடன், யாருக்கும் தெரியாமல்......?”

“அப்படியே ஆகட்டும்.”

“இன்றைக்கே ?”

“நல்லது, இன்றைக்கே, சரி” என்றாள் சரயூ. கணவன் எழுந்து போக விரும்பியதைக் கண்டதும் சரயூ அவனுடைய இரு கால்களையும் பிடித்துக்கொண்டு, “என்னை ஆசீர்வாதம்கூடச் செய்யவில்லையே ?” என்றாள். சந்திரநாத் மேலே பார்த்துக்கொண்டு, “இப்பொழுது இல்லை. எப்பொழுது நீ போவாயோ, எப்பொழுது உனது சவம் எரிந்து சாம்பலாகுமோ, அப்போது ஆசீர்வாதம் செய்கிறேன்” என்றான்.

சரயூ காலை விட்டு, “நல்லது, அப்பொழுதே செய்யுங்கள்” என்றாள்.

சந்திரநாத் போகத் தொடங்கியதும், அவள் மறுபடியும் எழுந்து கதவின் பக்கம் முதுகை வைத்து வழியைத் தடுத்துக்கொண்டு, “நான் விஷம் தின்பதால் உங்களுக்கு ஒரு சங்கடமும் வராதே ?” என்றாள்.

“கொஞ்சம்கூட வராது.”

“யாரும் எவ்விதச் சந்தேகமும் கொள்ளமாட்டார்களே ?”

"ஜனங்கள் அவசியம் சந்தேகம் கொள்வார்கள்; ஆனால், பணம் கொடுத்து அவர்களின் வாயை அடைத்து விடுவேன்!"

"நான் எனது படுக்கைக்கு அடியிலே ஒரு கடிதம் எழுதி வைத்துப் போவேன்; அதை எல்லா ஜனங்களுக்கும் காண்பிக்க வேண்டும்."

சந்திரநாத் அவள் அருகில் சென்று, சரயூவின் சிரசின் மேல் கையை வைத்துக்கொண்டு, "அம்மாதிரியே செய்யவேண்டும். கடிதம் நன்றாக எழுதி அதற்கடியில் உனது பெயரைத் தெளிவான எழுத்துக்களில் எழுத வேண்டும். நான்தான் உன்னைக் கொன்றேன் என்று யாரும் நினைக்கமாட்டார்கள். இன்னும் ஒரு விஷய மிருக்கிறது. நீ உள்ளுக்குள் கதவையும் ஜன்னலையும் மிக நன்றாகத் தாளிட்டுக் கொள்ளவேண்டும். ஒரு துளி சப்தம் கூட வெளியில் வரக்கூடாது. அப்போது என்னைப் பற்றிப் புகார் இருக்காது."

சரயூ கதவை விட்டு விலகிக்கொண்டாள். தரையிலே சிரம் வைத்து மறுபடி ஒரு தடவை கணவனை நமஸ்கரித்தாள். அவனுடைய பாததூளியைத் தனது நெற்றியிலிட்டுக்கொண்டு, "சரி, நீங்கள் போகலாம்" என்றாள். இதைச் சொல்லியதும் அவள் மனதில் என்ன சந்தேகம் உதித்ததோ தெரியவில்லை. அவனது கையைப் பிடித்துக் கொண்டு, "இல்லை, இன்னும் கொஞ்சம் இருங்கள்" என்றாள். பிறகு தீபத்தை அருகில் கொண்டுவந்து கணவன் முகத்தை நன்றாகப் பார்த்தாள். பார்த்ததும் அவள் திடுக்கிட்டுப் போனாள். சந்திரநாத்தின் இரு கண்களிலும் அமானுஷிகமான ஒரு தீவிர ஜோதி—பைத்தியத்தின் பார்வை போலத் தக தகவெனப் பிரகாசித்தது.

சந்திரநாத், " சரயூ, என் கண்களிலே என்ன பார்க்கிருய் ?" என்ருன்.

சரயூ சிறிதுநேரம் பேசாமல் இருந்துவிட்டு, "ஒன்றும் இல்லை, நீங்கள் போங்கள் " என்ருள்.

சந்திரநாத் மெள்ள மெள்ள வெளியே கிளம்பினுன். அவன் போகும்போது முனகிக்கொண்டே போனுன்.

" இதுவே சரி ! இதுவே சரி ! இன்றே !"

## பத்தாம் அத்தியாயம்

அன்று இரவு சரயூ தனது அறைக்குத் திரும்பி வந்ததும் அழலானுள். " நான் எப்படி விஷத்தைத் தின்பேன் ? நான் ஒருத்தியாக இருந்தாலும் பரவாயில்லை. ஆனுல், நான் இப்பொழுது ஒண்டியல்லவே! ஒரு குழந்தைக்குத் தாயாராகப் போகிறேனே ! சிசு ஹத்தி எப்படிச் செய்யலாம் ? பாபமல்லவோ ?" என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டாள். அவளால் தன்னை மாய்த்துக் கொள்ள முடியவில்லை. ஆனுலும், அவளது இன்ப வாழ்க்கைக்கு முடிவு கிட்டிவிட்டது என்ற விஷயத்தில் மட்டும் துளிக்கூட அவளுக்குச் சந்தேகம் இருக்கவில்லை.

பாதி ராத்திரியில் சந்திரநாத் திடீரென்று தன் மனைவியின் அறைக்குள் நுழைந்து, அவளை மார்போடு அணைத்துக்கொண்டு, " வேண்டாம், சரயூ ! நீ ஏதாவது அசட்டுப் பிசட்டென்று செய்துவிடாதே ; செய்யவும் கூடாது " என்று ஓயாமல் சொல்லத் தொடங்கினுன்.

ஆனுல், இதைவிட அதிகமான ஆறுதல் வேறு ஒன்றையும் அவனுல் அவளுக்கு அளிக்க முடியவில்லை.

ஒரு நாள் சரயூ அவள் கணவன் கையைப் பிடித்துக் கொண்டு, "எனது தலையில் என்ன எழுதியிருக்கிறதோ, அதை அனுபவிப்பேன். இதற்காக நீங்கள் சிறிதும் துக்க மடையாதீர்கள். என்னைப்போன்ற துரதிர்ஷ்டசாலியைத் தங்கள் வீட்டிற்குக் கொண்டுவந்து, நீங்கள் அநேக கஷ்டத்தை அனுபவித்திருக்கிறீர்கள். ஆகையால் இன் னும் அதிகக் கஷ்டத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. எனக்கு விடை கொடுத்துவிட்டு, நீங்கள் மறு படியும் குடும்பஸ்தராக வேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள்.

சந்திரநாத் தலை குனிந்தபடியே பேசாமலிருந்தான். நல்லதோ அல்லது கெட்டதோ, ஒரு பதிலும் அவனுக்குத் தென்படவில்லை. ஆனால், "இப்பொழுது சரயூ வாயாடி யாக இருக்கிறாள்" என்று அவன் எண்ணினான்.

அடுத்த நாள் அதிகாலையில், ஹரிகாலி ஒரு சிறு துண்டுக் காகிதத்தைக் கொண்டுவந்து, தனது கணவ னிடம் கொடுத்து அவரை ஏதோ எழுதும்படி சொல்லிக் கொண்டிருந்தாள். விரஜகிஷோர், "எதற்காக இப்படி எழுதவேண்டும்?" என்று கேட்டார்.

"உங்களுக்கு கொஞ்சமாவது புத்தியிருந்தால் இப்படிக் கேட்கமாட்டீர்கள்! முதலிலேயே ஒரு தடவை என் பேச்சைக் கேட்காமற் போனீர்கள்! ஆகையால்தான் இவ்வளவும் நடந்தது" என்று ஹரிகாலி எரிந்து விழுந்தாள்.

ஹரிகாலி சொன்னதையெல்லாம் விரஜகிஷோர் ஒரு புத்திசாலிப் பையன்போல எழுதினார்! எழுதி முடிந்ததும், ஹரிகாலி அவர் கையிலிருந்த காகிதத்தை வாங்கி ஆதியி லிருந்து அந்தம் வரையிலும் படித்தாள். பிறகு தலையை அசைத்துக்கொண்டு, "சரியாக எழுதியிருக்கிறது"

என்றாள். புத்திசாலியான விரஜகிஷோர் பதிற் சொல்லாமல் பேசாமலிருந்தார். மூன்று மணி சுமாருக்கு அவள் காகிதத்தை எடுத்துக்கொண்டு சரயூவிடம் சென்றாள். "இந்தா அம்மா, இந்தக் காகிதத்தில் உனது கையெழுத்தைப் போடு" என்றாள்.

கடிதத்தைக் கையில் வாங்கிக்கொண்டு சரயூ ஹரிகாலியிடம், "எதற்கு ?" என்று கேட்டாள்.

"நான் சொல்வதைச் செய்யேன் !"

"நான் எதற்காகக் கையெழுத்துப் போடவேண்டும் என்று கேட்கக்கூடாதா ?"

ஹரிகாலி முகத்தைப் பெரிதாக்கிக் கொண்டு, "சரயூ, இதெல்லாம் உன்னுடைய நன்மைக்காகத்தான். நீ இங்கிருந்து போய்விட்டால், அப்புறம் நீ எங்கே இருக்கிறாய் என்று நாங்கள் தேடப் போவதில்லை. ஆனாலும், நீ எங்கேயிருந்தபோதிலும் உன் சாப்பாட்டிற்கு மாதா மாதம் ஐந்து ரூபாய் கிடைத்துக்கொண்டிருக்கும். இது என்ன, ஏதாவது தப்பான விஷயமா ?" என்று கேட்டாள்.

சரயூவுக்கு நல்லது கெட்டது தெரியும். இந்த 'நலன்' விரும்பும் இருதயத்தில் 'நலன்' எது வரையில் நளிந்து கொண்டிருந்தது என்பதும் அவளுக்குத் தெரியும் !

சரயூ ஒருமுறை ஹரிகாலியின் முகத்தைப் பார்த்தாள். எதை ஹரிகாலி தனது அந்தக்கரணத்தில் வெறுத்தாளோ, அது அந்தப் பார்வைதான். இன்றுகூட ஹரிகாலி அந்தப் பார்வையை மன்னிக்க முடியவில்லை. அவள் கீழே குனிந்துகொண்டு, "சரயூ !" என்றாள்.

"உம், மாமி ! எழுதிக் கொடுக்கிறேன்."

சரயூ பேனாவை எடுத்து அந்தக் காகிதத்தில் வெகு தெளிவாகத் தன் கையெழுத்தைப் போட்டுக் கொடுத்தாள்.

இன்று ஆவணி இரண்டாம் நாள். இன்றுதான் சரயூ போகும் நாள். அதிகாலையிலிருந்தே மழை பலமாகப் பெய்து கொண்டிருந்தது. "இன்றுகூடப் போகாமல் தடைபட்டுவிட்டால் என்ன பண்ணுகிறது?" என்று ஹரிகாலிக்கு ரொம்பக் கவலையாயிருந்தது.

நாள் பூராவும் சரயூ வீட்டுச் சாமான்களையெல்லாம் சரியாக அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். அவள் விலையுயர்ந்த சேலைகளையெல்லாம் அலமாரியில் பத்திரப் படுத்தி, நகைகளையெல்லாம் பெட்டியில் வைத்துப் பூட்டினாள். பிறகு கணவனை அழைத்துவர ஆள் அனுப்பி விட்டு அவள் தரையில் படுத்துக்கொண்டு விம்மிவிம்மி அழத் தொடங்கினாள். வீட்டை விட்டுப் போக வேண்டிய சமயம் நெருங்க நெருங்க, அவளுடைய துக்கம் அதிகமாகி, பொறுக்க முடியாததாகிவிட்டது. "எவ்விதம் இந்த ஏழு நாளையும் கழித்தேனோ அவ்விதம் இன்னும் ஒரு நாளைக் கழிக்க முடியாது போலிருக்கிறதே! கடைசி தினமாகிய இன்று எங்கே என் தைரியம் நழுவிவிடுமோ?" என்று அவள் பயந்தாள். சந்திரநாத் வந்ததும் சரயூ கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

"வாருங்கள், இன்றுதான் எனது கடைசி நாள்" என்றாள்.

அப்பொழுதுகூட அவளுடைய கண்ணிமை நனைந்திருந்தது. சந்திரநாத் வேறு பக்கம் திரும்பிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். சரயூ அருகில் சென்று, "இந்தச் சாவிகளை வாங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் இரண்டாம் கல்யாணம் செய்து கொள்ளாத வரையிலும் இந்தச் சாவிகளை வேறு யாரிடமும் கொடுக்க வேண்டாம்" என்றாள். சந்திரநாத் அடைபட்ட குரலில், "எங்கேயாவது வை" என்றான்.

சந்திரநாத்தின் முகத்தைச் சரயூ தன் பக்கம் இழுத்துத் திருப்பிச் சிரித்துக்கொண்டே, "என்ன, உங்களுக்கு அழுகை வரும்போலிருக்கிறதே!" என்ருள்.

மிக்க கசப்பான வார்த்தையாகச் சொல்லுகிருள் என்று சந்திரநாத்திற்குப் பட்டது. சரயூ உடனே அவனுடைய கண்களிலிருந்து கண்ணீரைத் துடைத்துவிட்டு மரியாதை யுடன், "நினைத்துப் பாருங்கள்; நான் இன்று வரையிலும் எப்பொழுதுமே உங்களிடம் ஒரு பரிகாசமும் செய்ததில்லை. ஆகையால் இன்று போகும்போது இந்தத் 'துளியுண்டு' பரிகாசம் செய்தேன். கோபங் கொள்ளாதீர்கள்" என்ருள்.

ஆபரணமற்ற சரயூவின் கைகளில் நாலைந்து கண்ணுடி வளையல்களைத் தவிர வேருென்றுமில்லாததைச் சந்திரநாத் பார்த்தான். சரயூவின் அந்த உருவம் அவனுடைய கண்களைச் சூலம்போல் துளைத்தது. ஆனுல், அவனுல் என்ன செய்ய முடியும்? சரயூ கழுத்தோடு முந்தானையைச் சுற்றிக்கொண்டு, அவனை நமஸ்கரித் தாள். அவனுடைய பாத தூளியை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டாள். "நான் போய் விடுவதைக் குறித்து நீங்கள் வீணுகத் துக்கப்பட வேண்டாம். நீங்கள் ஒரு குற்றமும் அறியாதவர்கள் என்பது எனக்குத் தெரியும்" என்ருள்.

சந்திரநாத் இது வரையிலும் பொறுத்துப் பார்த்தான். ஆனுல், அதற்குமேல் அவனுல் பொறுக்க முடியவில்லை. அவன் அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டான். சாயங் காலத்திற்கு முன்பே வண்டி போகிறது. ஸ்டேஷன் போக வேண்டும். மழை பெய்து கொண்டிருக்கிறது. வீட்டில் நெடு நாளாக வேலை பார்க்கும் கிழக் குமாஸ்தா இரண்டு மூன்று போர்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு

வண்டியோட்டிக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்தான். அந்தச் சமயத்தில் அவனுக்குச் சீதா பிராட்டியாரின் கதை நினைவிற்கு வந்தது. ஆகையால் அவன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடியது. அவன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மனதிற்குள்ளாகவே, “ ஹே ஆண்டவனே ! நான் வேலைக்காரன். ஆகையால் தான் எனக்கு இந்தத் தண்டனை கிடைத்திருக்கிறது !” என்று சொல்லிக்கொண்டான்.

சரயூ போகும்போது ஹரிகாலியின் மனோபாவத்தை அறிந்துகொண்டு அவளைக் கூப்பிட்டு நமஸ்கரித்தாள். அவளுடைய பாத தூளியை நெற்றியில் இட்டுக்கொண்டு, “ மாமி, இதோ எனது பெட்டி ; பார்த்துக்கொள்ளுங்கள் ” என்றாள்.

ஹரிகாலி கொஞ்சம் வியாகூலமடைந்து, “ இல்லை, இல்லை. இருக்கட்டும் ” என்றாள்.

சரயூ பெட்டியைத் திறந்து ஹரிகாலிக்குக் காண்பித்தாள். பெட்டியில் இரண்டொரு ஜோடி சாதாரணச் சேலை, இரண்டு மூன்று புஸ்தகங்கள், காகிதத்தால் சுற்றப்பட்ட இரண்டு படங்கள், இன்னும் இரண்டொரு சாமான்கள்— இவைதானிருந்தன. அவற்றை அவள் கள்ளப் பார்வையோடு பார்த்தாள்.

“ போதும், இதுதான் ” என்றாள் சரயூ.

ஹரிகாலி மெதுவாக அங்கிருந்து நழுவிவிட்டாள்.

சந்தியா நேரத்திற்கு முந்தியே சரயூ வண்டியில் போய் உட்கார்ந்துகொண்டாள். வண்டிக்காரன் வண்டியை ஓட்டினான். வண்டி வெளிக் கதவைத் தாண்டியதும் வேகமாகப் போகத் தொடங்கியது. அடுத்த மாடியில், ஜன்னலைத் திறந்து மணிசங்கர் இவை எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தார்.

# பதினொன்றாம் அத்தியாயம்

மணிசங்கருக்கு இரா முழுதும் தூக்கம் வரவில்லை. கட கடவென்று வண்டி போவதுபோல் காதில் ஏதோ ஒரு சப்தம் ஒலித்துக்கொண்டிருந்தது. விடியற்காலமானதும் அவர் படுக்கையைவிட்டு எழுந்து வெளியே வந்தார். வாசற் கதவண்டை யாரோ அறிமுகமில்லாத ஒரு மனிதன் தூங்கி வழிந்துகொண்டு உட்கார்ந்திருந்ததைக் கண்டார். இவர் அவன் பக்கமாகச் சென்றதும் அவன் எழுந்து நின்று, "நான் ஒரு வழிப்போக்கன்" என்று தெரிவித்துக் கொண்டான். மணிசங்கர் அங்கிருந்து நகர ஆரம்பித்த போது அவன், "மணிசங்கரின் வீடு இதுதானா?" என்று விசாரித்தான்.

"ஆம்" என்று பதில் அளித்தார் மணிசங்கர்.

"அவரைப் பார்க்க எப்பொழுது சௌகரியப்படும்?"

"என் பெயர்தான் மணிசங்கர்."

உடனே அவன் அவரை நமஸ்கரித்து, "தங்களைப் பார்க்கணும் என்றுதான் வந்தேன்" என்று தெரிவித் தான்.

மணிசங்கர் அவனை உச்சந் தலையிலிருந்து உள்ளங் கால் வரை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார்.

"நீ என்ன, காசியிலிருந்து வருகிறாயா?" என்று கேட்டார்.

"ஆம்."

ஹரிதயால் அனுப்பினாரா?"

"ஆம்."

"பணத்திற்காக வந்திருக்கிறாயா?"

" ஆம்."

இதைக் கேட்டு மணிசங்கர் சிரித்தார். " நான் பணம் கொடுப்பேன் என்று நினைத்துக்கொண்டாயா ?" என்று கேட்டார்.

இதற்கு அந்த மனிதன் தலையை அசைத்து, " அப்படி இல்லை, ஐயா! நான் பணம் அடைவதற்கு வேண்டிய சௌகரியத்தைத் தாங்கள் செய்து கொடுப்பீர்கள் என்று ஹரிதயால்ஜி சொன்னார் " என்று பதில் அளித்தான்.

மணிசங்கர் புருவங்களை நெறித்துக்கொண்டு, " சரி, செய்து கொடுக்கிறேன், உள்ளே வா " என்று அவனை வீட்டுக்குள்ளே அழைத்துக்கொண்டு சென்றார்.

இரண்டு பேரும் ஓர் அறைக்குள் சென்று, கதவைத் தாளிட்டுக்கொண்டு உட்கார்ந்தார்கள்.

" அப்படியானால் அந்த விஷயம் முழுக்க முழுக்க உண்மைதானா !" என்று மணிசங்கர் விசாரித்தார்.

" சந்தேகமென்ன ? முழுவதும் உண்மைதான்."

இப்படிச் சொல்லிவிட்டு அந்த மனிதன் அநேக கடிதங்களை வெளியில் எடுத்தான். மணிசங்கர் எல்லாக் கடிதங்களையும் முதலிலிருந்து கடைசிவரை படித்து முடித்தார்.

" ஆம், இதனால் நாட்டுப் பெண்ணுக்கு எப்படித் தோஷம் ஏற்படும் ?" என்று கேட்டார்.

" நாட்டுப் பெண் மேல் ஒரு தோஷமும் இல்லை. இருந்தாலும் தாயாரின் தோஷம் பெண்ணையும் சாருமல்லவா ?"

" ஆனால், அவள் ஒரு குற்றமும் செய்யவில்லையே! வீணாக ஏன் அவள் மீது தோஷத்தைச் சுமத்துகிறாய் ?"

" என்ன பண்ணலாம் ? எனக்கு வேறு உபாயம் தோன்றவில்லையே! பணத்துக்காக எல்லாம்தான் செய்ய வேண்டியிருக்கிறது."

மணிசங்கர் கொஞ்ச நேரம் ஏதோ யோசித்தார். பிறகு, " பார், அப்பா! இந்த விஷயம் வெளியில் பரவுமானால் எனக்கும் கெட்ட பெயர் வந்து சேரும். சந்திரநாத் என்னுடைய சகோதரன் புத்திரனுக்கும் " என்றார்.

" நான் என்ன பண்ணுவேன் ? எனக்கு வேறு உபாயம் தோன்றவில்லையே !" என்றான் ராகால்தாஸ்.

" நல்லது ! நான் என் கையிலிருந்தே உனக்குப் பணம் கொடுக்கிறேன் என்று வைத்துக்கொள். அப்பொழுது ?"

" மிகவும் நல்லதாகப் போச்சு. நான் சந்திரநாத்திடம் போகவேண்டிய அவசியமே இல்லை !"

" ஆனால் இது நிச்சயம்தானே ? பணம் பெற்றுக் கொண்டதும், நீ கிராமத்தைவிட்டுப் போய்விட வேண்டும். இந்தச் சமாசாரத்தைப் பற்றி யாரிடமும் மூச்சப் பரியக் கூடாது. தெரியுமா ?"

" நான் இதைப்பற்றி வாயைத் திறக்கவேமாட்டேன்."

" சரி, உனக்கு எத்தனை ரூபாய் வேண்டும் ?"

" குறைந்தது இரண்டாயிரம்."

மணிசங்கர் எழுந்து சென்று, தமது கணக்குப் பிள்ளை லக்ஷ்மிநாராயணனிடம் ஏதோ காதோடு சொன்னார். பிறகு, அவர் திரும்பி வந்து, தம் பெட்டியைத் திறந்து, இரண்டு ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை எடுத்து ராகால்தாஸ் கையில் வைத்தார். " இங்கிருந்து இருபது

மைலுக்கு அப்பால் சர்க்கார் கஜானு இருக்கிறது. நீ அங்குபோய் நோட்டுக்குச் சில்லறை மாற்றிக்கொள். வேறு எங்கும் உனக்குச் சில்லறை கிடைக்காது. வாங்கிக் கொண்டு திரும்பவும் இங்கே வந்தாயோ, உயிருடன் திரும்பமாட்டாய். ஜாக்கிரதை, முன்கூட்டியே சொல்லி வைக்கிறேன் " என்ருர்.

ராகால்தாஸ் பணத்தைப் பெற்றுக் கொண்டு, மத்தியானம் மூன்று மணிக்கு நகர் வந்தடைந்தான். அன்று கச்சேரி மூடிவிட்டதால், அடுத்த நாள் கஜானு அதிகாரியிடம் சென்று, தன் இரு நோட்டுகளேயும் நீட்டி, " இவற்றிற்கு ரூபாய் வேண்டும் " என்று கேட்டான்.

கஜானு அதிகாரி இரண்டு நோட்டுகளேயும் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, " உட்கார் " என்று சொன்ஞர். பிறகு அவர் வெளியே சென்று ஒரு போலீஸ் இன்ஸ் பெக்டரைத் தம்முடன் அழைத்துக்கொண்டு திரும்பி வந்தார். ராகால்தாஸைப் பார்த்து, " இந்த நோட்டுகள் திருடப்பட்டவை. நேற்றுக் காலே பிச்சை வாங்கும் சாக்காக எவனே ஒருவன் வந்து நோட்டுகளேத் திருடிக்கொண்டு போய்விட்டான் என்று மணிசங்கர் பாபுவின் ஆள் சொல்கிருன் " என்று சொன்ஞர்.

" மணிசங்கரேதான் இந்த நோட்டுகளேக் கொடுத் தார் " என்ருன் ராகால்தாஸ்.

" நல்லது ! இவற்றை நியாய ஸ்தலத்தில் சொல்லிக் கொள் " என்ருர் கஜானு அதிகாரி.

கடைசியில் விஷயம் நியாய ஸ்தலத்துக்கு வந்த போது, " நோட்டுகள் யாருடையவையோ, அவரைக் கேட்டால் எல்லாம் விளங்கும் " என்று தெரிவித்தான் ராகால்தாஸ். ஆனல், மணிசங்கர் அந்த மனிதனேத் தாம் அதற்குமுன் பார்த்ததே கிடையாதென்றும், நோட்டுகளேத்

தாம் யாரிடமும் கொடுக்கவில்லையென்றும் பிரமாணம் செய்தார்.

தன்னைத் தப்புவித்துக் கொள்வதற்காக ராகால் என்னென்னமோ சொல்லிப் பார்த்தான். ஆனால், மணி சங்கரின் வக்கீல் அவன் வாதத்தைத் தவிடு பொடியாக்கி விட்டார். ராகால் தாஸுக்கு இரண்டு வருஷம் தண்டனை கிடைத்தது.

## பன்னிரண்டாம் அத்தியாயம்

ஹரிதயாலின் வீட்டில் இப்பொழுது பிராமண ஸ்திரீ இல்லை. அவள் சென்ற இடமே தெரியவில்லை. அவருடைய வீட்டுக்குச் சரயூ வந்து இறங்கிய போது வீட்டில் யாரும் இல்லை. அவளுடன் வந்த குமாஸ்தா அழுதுகொண்டே, " சரி, அம்மா ! நான் போகலாமா ?" என்று கேட்டான்.

சரயூ அவனை நமஸ்கரித்து, தலை குனிந்து ஒன்றும் பேசாமல் நின்றாள். குமாஸ்தா அழுதுகொண்டே அவ் விடத்தைவிட்டு அகன்றான்.

அஸ்தமன சமயத்துக்கு ஹரிதயால் வீடு திரும்பி வந்தார். தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த சரயூவைப் பார்த்து, " யார் ?" என்று கேட்டார்

சரயூ எழுந்து நின்று நமஸ்கரித்தாள். போர்வையை விலக்கி முகத்தைத் திறந்து காட்டி " நான்தான் " என்றாள்.

" சரயூவா !" என்று ஆச்சரியத்தால் கூவினார் ஹரிதயால்.

அவள் கழுத்தில் நகை ஒன்றுமில்லாதிருந்ததை அவர் கவனித்தார். அவள் உடுத்திக் கொண்டிருந்த புடவையும், போர்த்திக் கொண்டிருந்த போர்வையும் மிகவும் சாதாரணமாயிருந்தன. கூட ஒரு வேலைக் காரனையோ, வேலைக்காரியையோ காணும். பக்கத்தில் ஒரு சின்னப் பெட்டி மாத்திரம் இருந்தது. இதையெல்லாம் பார்த்ததும் ஹரிதயாலுக்கு எல்லா விஷயமும் விளங்கி விட்டது. ஆகவே, அவர் பரிகாசமாக, "நான் நினைத்த படியே நடந்துவிட்டதா? அவர் உன்னைத் துரத்தி விட்டாரா?" என்று கேட்டார்.

சரயூ ஒன்றும் பதில் பேசவில்லை.

ஹரிதயால் மிகவும் கடுமையான குரலில், "நீ இங்கு இருப்பது என்பது நடக்காத காரியம். ஒரு தடவை உங்களுக்கு உபகாரம் பண்ணி நான் நல்ல பாடம் கற்றுக் கொண்டுவிட்டேன். போதும்! இனிமேல் திரும்பவும் இடம் கொடுக்க முடியாது" என்றார்.

சரயூ தலை குனிந்து, "அம்மா எங்கே?" என்று கேட்டாள்.

"என்னைச் சங்கடத்திலாழ்த்திவிட்டு அவள் ஓடிப் போய் விட்டாள். அவள் சுபாவம் எப்படியோ, அப்படியே செய்துவிட்டாள்."

ஹரிதயாலின் உள்ளத்தில் கோபம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. ஆகவே அவர் திடீரென்று, "அவள் எங்கிருக்கிறாள் என்று எனக்குத் தெரியாது. ஒருவேளை எங்கேயாவது 'குஷி' பண்ணிக் கொண்டிருப்பாள்" என்று ஏளனஞ் செய்தார்.

சரயூ ஒன்றும் பதில் சொல்லாமல் அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

ஹரிதயால் திரும்பவும் சொல்ல ஆரம்பித்தார்: "நான் உனக்கு என் வீட்டில் இடம் கொடுத்து, என் ஜாதியைத் தொலைத்துக் கொள்ள விரும்பவில்லை. உன்னை மிகவும் ஆதரவாக இங்கிருந்து அழைத்துக்கொண்டு சென்றுரே, அவரால் உனக்கு ஒரு குடிசை கூடவா கட்டிக் கொடுக்க முடியாமல் போய்விட்டது ? இதற்காகவா இங்கே அனுப்பினுர் ? நீ இங்கே இருக்கக்கூடாது, போய்விடு."

அவர் இப்படிச் சொன்னதும், சரயூ அழ ஆரம்பித்தாள். "தாத்தா ! என் அம்மாவும் இல்லை. நான் எங்கே செல்வேன் ?"

ஆனுல் ஹரிதயாலின் நெஞ்சில் துளிக்கூட இரக்கம் இல்லை. ஆகவே, "காசி போன்ற பட்டணத்தில் உனக்கு இடம் கிடைக்காமல் போகாது. உன் சௌகரியம்போல் ஏதாவது ஓர் இடம் தேடிக்கொள்" என்று சொல்லி விட்டார்.

எப்பொழுது தன்னுடைய புருஷனே தனக்கு வீட்டில் இடம் கொடுக்கவில்லையோ, ஹரிதயால் எப்படி இடம் கொடுப்பார் ? அல்லது, எதற்காகக் கொடுக்க வேண்டும் ? இந்த விஷயம் சரயூவுக்கு நன்ருகத் தெரியும். ஆகவே அவள் ஹரிதயாலின் மீது கோபம் கொள்ளவில்லை. ஆனுல் இப்பொழுது என்ன பண்ணுவது ? நிற்க இடமில்லையே !

சரயூவின் மனம் மிகவும் கஷ்டப்பட ஆரம்பித்தது. கண்களிலிருந்து கண்ணீர் பல பலவென்று வழிந்தது. இந்தச் சிறு வயதுக்குள் அவளுடைய சுகம், ஆசை எல்லாம் முடிந்துவிட்டது. தாயார் இல்லை, தகப்பனுர் இல்லை, கணவரும் கைவிட்டுவிட்டார் ! நிற்க நிழல் இல்லை. களங்கம், லஜ்ஜை, யௌவனம் இவைதான் மிஞ்சி

இருந்தன. "இன்னும் எத்தனை நாள் இந்த உலகில் நான் ஜீவித்திருக்க வேண்டுமோ ?" என்று சிந்தித்தாள். சிறு வயதில் அவள் எத்தனையோ கஷ்டங்களையும் துக்கங்களையும் பார்த்திருக்கிருள். ஆனாலும் இன்றைய தினத்தைப் போல் இத்தனை அவமானத்தையும் கஷ்டத்தையும் அவள் அடையவில்லை.

"ஏன் இன்னும் இங்கேயே உட்கார்ந்துகொண்டிருக்கிருய் ?" என்று ஹரிதயால் கூச்சல் போட்டார். சரயூ மிகவும் கலக்கமடைந்தாள்.

"நான் எங்கே செல்வேன் ?"

"எனக்கு என்ன தெரியும் ?"

"தாத்தா ! இன்று ராத்திரி மாத்திரம்......" என்று சரயூ நாக்குழற ஆரம்பித்தாள். அதற்குள் ஹரிதயால், "அதெல்லாம் முடியாது. ஒரு க்ஷணங்கூட நான் உன்னை இங்கே இருக்க விடமாட்டேன்" என்று கூறிவிட்டார்.

சரயூ எழுந்து நின்ருள். அவளுக்கு இப்பொழுது கொஞ்சம் தைரியம் பிறந்திருந்தது. எவ்வளவு குற்றம் செய்த பிறகும், யாரிடம் அடைக்கலம் புகலாமோ, அவரிடமே அவள் ஒன்றும் கேட்கவில்லை. பின் அயலார்களிடம் போய்க் கேட்பானேன் ? "வேறு ஒரு வழியும் பிறக்காவிட்டாலும், காசியிலுள்ள கங்கா நதி வறண்டு போய் விடவில்லையே ! சமூகத்தைக் கண்டு கங்கை பயப்படுவதில்லை. அவளுடைய ஜாதி போய் விடுமே என்கிற கிலியுமில்லை. ஒரு துர்ப்பாக்யவதியை அவள் மிகவும் சந்தோஷமாகவே தன் மடியில் ஏற்றுக்கொள்வாள். எனக்கு வேறு எங்கும் இடம் கிடைக்காவிட்டாலும் அங்கு நிச்சயமாக இடம் கிடைக்கும்" என்று சரயூ தன் மனதுக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

அங்கிருந்து போய்விட வேண்டுமென்றுதான் சரயூ பார்த்தாள். ஆனல், கால் ஓர் அடிகூட எடுத்து வைக்க மறுக்கவே, திரும்பவும் கீழே உட்கார்ந்துவிட்டாள்.

இம்மாதிரியான சங்கடத்தில் தாம் இதுவரை அகப் பட்டுக் கொண்டதில்லை என்று ஹரிதயால் நினைத்தார். அவருடைய தொண்டை பேச முடியாமல் வறண்டு கிடந்தது. இப்படியே விட்டுவிட்டால், பின்னல் சமாளிக்க முடியாது என்று தீர்மானித்துக் கூச்சல் போட ஆரம்பித் தார். "ஏது, மரியாதையாகச் சொன்னல் கேட்க மாட் டாய் போலிருக்கிறது ? போகப் போகிருயா, இல்லையா ?"

இந்தச் சமயத்தில் வெளியிலிருந்து யாரோ ஹரி தயாலைக் கூப்பிடுவது கேட்டது. "ஒரு வேளை கைலாஸ் சித்தப்பா வந்துவிட்டாரோ?" என்று ஹரிதயால் கொஞ்சம் திடுக்கிட்டார். இதற்குள் கைலாஸ் சந்திரரே உள்ளே நுழைந்தார். ஒரு கையில் ஒரு சதுரங்க மூட்டையும், இன் னெரு கையில் ஹுக்காவும் விளங்கின. அவர் வெகு நேரம் வெளியே நின்று ஹரிதயாலின் ஆர்ப்பாட்டங்களைக் கவனித்துக்கொண்டிருந்தார். ஆகவே அவர் உள்ளே நுழைந்ததும், எப்பொழுதும்போல் சதுரங்க மூட்டையும் ஹுக்காவும் காணப்பட்டனவேயொழிய, வழக்கமாகக் காணப்படும் புன்சிரிப்பைக் காணேம். அவர் நேரே சரயூ விடம் சென்று, "ஏன் அம்மா சரயூ ! நீ எப்பொழுது வந்தாய் ?" என்று கேட்டார்.

கைலாஸை அடையாளம் கண்டு கொண்டு சரயூ நமஸ்கரித்தாள்.

கைலாஸ் அவளை ஆசீர்வதித்துவிட்டு, "வா அம்மா, போகலாம். நான் இருக்கும் இடத்திற்கு வராமல் நீ இங்கு எதற்காக வந்தாய் ?" என்று கேட்டார்.

இப்படிச் சொல்லிவிட்டுக் கைலாஸ் சந்திரர் ஹூக்கா வைக் கையில் பிடித்து, சரயூவின் பெட்டியைக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு, " வா அம்மா இருட்டுகிறது " என்று அழைத்தார்.

அவர் அவளை அழைத்த விதம் நேரே அவளை அழைத்துக்கொண்டு போவதற்காகவே அவர் அங்கு வந்ததுபோல் காணப்பட்டது. சரயூவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவள் பேசாமல் அங்கேயே உட்கார்ந் திருந்தாள்.

கைலாஸ் திரும்பவும் பேச ஆரம்பித்தார். " ஏன் அம்மா, சரயூ ! இந்தக் கிழவன் வீட்டுக்கு வந்து இருப் பதில் உனக்கு என்ன அம்மா, வெட்கம் ! என் வீட்டில் உன்னை யாரும் நிந்தனையாகப் பேசமாட்டார்கள். நாம் இருவரும், தாத்தாவும் பேத்தியும் சந்தோஷமாக வசிக்கலாம். வா அம்மா, தாமசப்படுத்தாதே."

அப்பொழுதும் சரயூ உட்கார்ந்துகொண்டே இருந் தாள். ஹரிதயால், "சித்தப்பா! இது என்ன சமாசாரம்!" என்று உரத்த சப்தம் போட்டுக் கேட்டார்.

" ஒன்றும் இல்லை " என்று கைலாஸ் சொல்லிவிட்டு, சரயூவுக்கு வெகு சமீபமாக வந்தார். மிகவும் உருக்கமான குரலில், " வா, அம்மா ! எழுந்திரு. இங்கே உட்கார்ந்து கொண்டு, ஏன் இந்த வார்த்தைகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறாய் ?" என்று சொன்னார்.

சரயூ எழுந்து நின்றாள். இதைப் பார்த்ததும் ஹரி தயால், " என்ன, சித்தப்பா ! இவளை உம்முடைய வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகப் போகிறீரா ?" என்று கேட்டார்.

" இல்லை. இவளை நடுச் சந்தியில் விட்டுப் போகப் போகிறேன் " என்று கைலாஸ் பதில் அளித்தார்.

இந்தப் பரிகாச வார்த்தையைக் கேட்டதும் ஹரிதயாலுக்குக் கோபம் வந்தது. " ஆனால் சித்தப்பா, நீர் செய்வது சரியல்ல. இதனால், பின்னால் என்ன நேரிடும் என்று யோசித்துப் பாரும் " என்று சொன்னார்.

கைலாஸ்சந்திரர் ஹரிதயாலுக்கு ஒன்றும் பதில் அளிக்காமல் சரயூவிடம், " வா அம்மா, சீக்கிரம் போகலாம். இல்லாவிடில் இவன் இன்னும் என்ன வார்த்தைகள் சொல்லுவானோ ?" என்றார்.

சரயூ கதவைத் தாண்டி வெளியே சென்றாள். கைலாஸ் சந்திரர் அவர் கக்கத்தில் பெட்டியை இடுக்கிக் கொண்டு பின்னால் வந்தார்.

ஹரிதயால் பின்னாலிருந்தே கேட்டார். " ஏன் சித்தப்பா ! கடைசியில் ஜாதியை விட்டுவிடப் போகிறீரா?"

கைலாஸ் திரும்பிப் பாராமலே, " நீ வேணுமானால் அதை எடுத்துக்கோ, அப்பா " என்று பதில் அளித்தார்.

" அப்படியானால் நம்முடைய உறவு விட்டுப் போய் விட்டது : இனிமேல் இருவருக்கும் அன்ன பான சம்பந்தம் கிடையாது, தெரிந்ததா ?"

கைலாஸ் சந்திரர் திரும்பி நின்று, "நான் எப்பொழுதாவது யார் வீட்டுக்காவது அழைக்கப்படாமல் நுழைந்திருக்கிறேனா ?" என்று கேட்டார்.

" இல்லை. இருந்தாலும் சொல்லி வைக்கிறேன்."

இத்தனை நாளாகக் காசியில் வசித்த கைலாஸுக்கு இன்றுதான் முதல் தடவையாகக் கோபம் வந்தது. " ஹரிதயால் ! என்ன, என்னைக் காசிப்பண்டா என்று நினைத்துக்கொண்டாயா ? அல்லது எஜமானனுக்குச் சந்தோஷமூட்டி என் நிர்வாகத்தை நடத்துகிறேன் என்று நினைத்துக்கொண்டாயா ? என்னைக் கண்டு ஏன் நீ பயப்

படுகிறாய்? நான் இதுவரை எனக்கு எது நல்லது என்று பட்டதோ அப்படி நடந்துகொண்டு வந்திருக்கிறேன். இனிமேலும் அப்படித்தான் நடக்கப் போகிறேன். இதைப் பற்றி நீ கவலைப்பட வேண்டிய அவசியமில்லை" என்றார்.

ஹரிதயால் சற்று நாணமடைந்து, "நான் உங்கள் நன்மைக்காகத்தான்......" என்று ஆரம்பித்தார்.

"இல்லை, அப்பா, இருக்கட்டும். எப்பொழுது இத்தனை வருஷங்களை உன் ஆலோசனையின் உதவி யின்றியே கழித்துவிட்டேனே, இன்னும் பாக்கி உள்ள மூன்று நான்கு வருஷங்களையும் அப்படியே கழித்து விடுகிறேன். நீ வீட்டுக்குப் போ."

ஹரிதயால் திரும்பிச் சென்றார்.

தம்முடைய வீட்டையடைந்ததும் கைலாஸ் சந்திரர் பெட்டியைக் கீழே வைத்துவிட்டு, "அம்மா! இந்த வீடு முழுவதும் உன்னுடையது. இதைத் தவிர நான் வேறு என்ன சொல்லக்கூடும்? இந்த வீட்டுக் காரியங்களை யெல்லாம் நீயே பார்த்துக்கொள். இந்தக் கிழவனையும் கொஞ்சம் கவனித்துக் கொள்" என்றார்.

சரயூ தன் கண்களிலிருந்து வழிந்துகொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

அவளுக்குக் கடைசியில் அடைக்கலம் கிடைத்து விட்டது!

## பதின்மூன்றும் அத்தியாயம்

சரயூ சென்றதிலிருந்து சந்திரநாத்திற்கு வாழ்க்கை யிலேயே வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. ராத்திரி முழுவதும் தூங்காமல் விழித்துக்கொண்டே படுத்திருப்பான். விடியற்

காலம் மதுரமான காற்று மேலே பட்டதும் அவனுக்குக் கொஞ்சம் தூக்கம் வரும். பிறகு சூரியன் வெப்பக் கிரணங்கள் மேலே பட்டதும் விழித்துக் கொள்வான். ஆனால் தூக்கக் கலக்கம் மாத்திரம் இருந்துகொண்டே இருக்கும். இருந்தாலும், படுக்கையை விட்டு, வெளியே வந்துவிடுவான். நாள் முழுவதும் ஒரு வேலையின்றி, உற்சாகமின்றிக் கழியும்.

"இந்த மாசத்திலேயே மறு விவாகம் செய்து முடிக்க வேண்டும்" என்று ஹரிகாலி வற்புறுத்தி வந்தாள். இதற்குச் சந்திரநாத் பதிலே கூறுவதில்லை. அவன் இப்படிப் பதில் கூறாமல் இருந்தது சம்மதம் என்று அர்த்தமா, அல்லது சம்மதமில்லை என்று அர்த்தமா என்று ஹரிகாலி தன் புருஷனுடன் எத்தனையோ வாதப் பிரதி வாதங்கள் செய்தாள். மணிசங்கரிடம் கேட்டாலோ சந்திர நாத்தைக் கேட்காமல் இது விஷயமாக என்ன நிச்சயத்தைக் கூறுகிறது என்று சொல்லிவிடுவார்.

ஐப்பசி மாதம் துர்க்கா பூஜை. சந்திரநாத் வீட்டின் தாழ்வாரத்திலிருந்து வரப்போகும் ஆனந்தோற்சவத்தை ஜனங்களுக்குத் தெரியப்படுத்துவதுபோல் ஷஹனாயி வாத்திய ஒலி கேட்டது. சந்திரநாத்திற்குத் தூக்கம் கலைந்துவிட்டது. அந்த வாத்தியத்திலிருந்து வந்த ஒவ்வொரு ஸ்வரத்தையும் கேட்டுக்கொண்டே படுக்கையில் படுத்திருந்தான். ஆனால் ஒரு ஸ்வரமாவது அவனுக்குச் சந்தோஷத்தை அளிக்கவில்லை. அவன் ஒரு வேலைக் காரனைக் கூப்பிட்டு, "என் சாமான்களையெல்லாம் மூட்டை யாகக் கட்டு. நான் அலகாபாத்திற்குப் போகப் போகி றேன்" என்று சொன்னான்.

இந்தச் சமாசாரத்தைக் கேள்விப்பட்டதும் ஹரிகாலி ஓடியடித்துக்கொண்டு வந்தாள். விரஜகிஷோரும் வந்து

புத்தி சொல்ல ஆரம்பித்தார். கடைசியில் மணிசங்கரே வந்து, "சஷ்டியும் அதுவுமாய் எங்கும் புறப்பட்டுச் செல்ல வேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார். ஆனல் சந்திரநாத் அவர்கள் சொன்னதைக் கேட்கவில்லை.

மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு ஹரிபாலா வந்து சேர்ந்தாள். சரயூ போனதிலிருந்து அவள் அன்றுவரை அங்கே வரவேயில்லை.

சந்திரநாத் அவளைப் பார்த்து, "பாட்டி! திடீரென்று ஏது இங்கே வந்தது!" என்று கேட்டான்.

ஹரிபாலா அவனுடைய கேள்விக்குப் பதில் கூருமல், "எங்கேயாவது வெளியூருக்குப் போவதற்குத் தயார் செய்து கொண்டிருக்கிருயா?" என்று கேட்டாள்.

"ஆம்."

"மேற்கே போகப் போகிருயா?"

"ஆம்."

ஹரிபாலா கொஞ்ச நேரம் ஏதோ யோசனை செய்து விட்டு, "இன்னும் எங்கேயாவது போவாயா?" என்று கேட்டாள். சந்திரநாத் ஹரிபாலாவின் எண்ணத்தைப் புரிந்துகொண்டு, "இல்லை" என்று பதில் அளித்தான். பிறகு ஏதோ யோசனையில் ஆழ்ந்தவனுய் மேலும் கீழும் உலாவ ஆரம்பித்தான்.

ஏதோ சில விஷயங்களைச் சொல்வதற்காக ஹரிபாலா வந்தாள். ஆனல் அவற்றைச் சொல்வதற்கு வேண்டிய தைரியம் ஏற்படவில்லை, லஜ்ஜையாயிருந்தது. சிறிது நேரம் சும்மா இருந்த பிறகு கொஞ்சம் தைரியத்தை வர வழைத்துக்கொண்டு கேட்டாள். "ஏன் அப்பா! அவளுக்கு ஒரு வழியும் நீ ஏற்பாடு பண்ணவில்லையா?"

அவள் வந்ததிலிருந்து ஹரிபாலா, சந்திரநாத் ஆகிய இருவருடைய மனதிலும் சரயூவின் ஞாபகம்தான் இருந்தது. அவளைப் பற்றித்தான் இருவரும் யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே ஹரிபாலா இந்தக் கேள்வியைக் கேட்டதும் இருவர் கண்களிலும் கண்ணீர் வழிந்தோடிற்று. சந்திரநாத் ஒரு விதமாகத் தன்னைச் சமாளித்துக்கொண்டு, இன்னொரு பக்கம் பார்த்துக்கொண்டு, "நான் என்ன வழி செய்கிறது ?" என்று கேட்டான்.

"காசியில் இவள் எங்கு இருக்கிறாள் ?"

"தாயாரிடம் இருக்கிறாள் என்று தோன்றுகிறது."

"இருக்கிறாள். ஆனால்......"

"ஆனால் என்றால் ?"

ஹரிபாலா கொஞ்ச நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு மெதுவான குரலில், "அப்பா, நீ கோபித்துக் கொள்ளக் கூடாது" என்றாள்.

சந்திரநாத் ஒன்றும் பேசாமல் அவளைப் பார்த்தபடியே இருந்தான்.

"அப்பா! அவளுக்கு ஏதாவது பணம் அனுப்பும்படி ஏற்பாடு பண்ணு. இன்றைக்கு அவள் ஒருத்திதான். ஆனால் இன்னும் நான்கு நாள் போனால்......"

சந்திரநாத் அவள் கருத்தைத் தெரிந்துகொண்டே தெரியாததுபோல், "நான்கு நாளைக்குப் பிறகு என்ன ?" என்று கேட்டான்.

தன் கண்களிலிருந்து முத்து முத்தாக உதிர்ந்து கொண்டிருந்த கண்ணீரை ஹரிபாலா துடைத்துக் கொண்டே, "அவள் வயிற்றில் இருக்கிறது தெய்வ கடாட்சம் இருந்து பிழைத்து இருந்தால், அப்பொழுது..."

சந்திரநாத்தின் உடல் நடுங்கிற்று. " பாட்டி ! இன்றைக்குச் சஷ்டியல்லவா ?" என்று கேட்டான்.

" ஆம், அப்பா !"

" அப்படியானால் இன்று......"

" எங்கேயும் போகக்கூடாது, அப்பா !"

" அதுதான் நானும் யோசித்தேன்."

" ரொம்ப நல்லது. இன்னும் நாலைந்து தினங்கள் இங்கேயே இரு. பூஜை முடிந்ததும், உனக்கு எங்கு இஷ்டமோ, அங்கே போகலாம் " என்றாள்.

சந்திரநாத், " சரி " என்றான்.

விஜயதசமி ஆன பிறகு ஒரு நாள் சந்திரநாத் தன்னுடைய குமாஸ்தாவைக் கூப்பிட்டு, " ஆமாம் ! அவளைக் காசியில் விட்டுவிட்டு வந்தீரே, ஹரிதயாலைக் கண்டு பேசவில்லையா ?" என்று கேட்டான். குமாஸ்தா, " அவரைப் பார்க்கவேயில்லையே " என்று பதில் அளித்தான்.

" பார்க்கவே இல்லையா ? பின் யாரிடம் விட்டு வந்தீர் ? அவளுடைய தாயாரையாவது பார்த்தீரா, இல்லையா ?"

" இல்லையே! அந்தச் சமயம் வீட்டில் யாரும் இல்லை."

" ஒருவரும் இல்லையா ? வீட்டில் யாராவது குடியிருக்கிறார்களா என்று விசாரித்தீரா, அதுவும் இல்லையா ? ஹரிதயால் வேறு வீடு மாற்றியிருந்தால் ?"

" இல்லை, அதை விசாரித்தேன். அவர் அந்த வீட்டில் தான் குடியிருக்கிறார்."

சந்திரநாத் கொஞ்ச நேரம் பேசாமல் நின்றான். பிறகு, " இது வரையில் எத்தனை ரூபாய் அனுப்பியிருக்கிறீர் ?" என்று கேட்டான்.

" நான் இதுவரை ஒன்றும் அனுப்பவில்லை " என்று குமாஸ்தா பதில் அளித்தான்.

இதைக் கேட்டதும் சந்திரநாத்திற்கு ஆச்சரியமும் கோபமும் உண்டாயிற்று.

" ஏன் ஒன்றும் அனுப்பவில்லை ?"

" மாதம் ஐந்து ரூபாய் அனுப்பினால் போதும் என்று மாமா சொன்னார்."

" ஏன் மாதம் ஐந்து ரூபாய் ? மாமாவுடைய பணமா, என்ன ? இன்றையிலிருந்து காசி விலாசத்துக்கு ஐந்நூறு ரூபாய் அனுப்பும்."

" தங்கள் சித்தம்" என்று சொல்லி, குமஸ்தா அங்கிருந்து சென்றுவிட்டான்.

ஹரிகாலி இந்த விஷயத்தைக் கேட்டதும், " அவனுக்குப் பயித்தியம்தான் பிடித்துவிட்டது " என்று விழுந்து விழுந்து சிரித்தாள்.

"ஆமாம், எத்தனை ரூபாய் அனுப்பச் சொன்னான்?"

" ஐந்நூறு ரூபாய்."

ஹரிகாலி திரும்பவும் விழுந்து விழுந்து சிரித்தாள் "சந்திரநாத்திற்குக் கோபம் வந்தால் தலைகால் தெரியாது. நான் மாதம் ஐந்து ரூபாய் அனுப்பவேண்டும் என்று சொன்னது அவனுக்குக் கோபம். அதனால்தான் ஐந்நூறு ரூபாய் அனுப்பு என்று சொல்லியிருக்கிறான். ஏன் ஐயா ! அவளுக்கு ஒரு தம்படிகூட அவன் அனுப்ப விரும்பவில்லையென்பது தங்களுக்குத் தெரியவில்லையா ?" என்று கேட்டாள்.

குமாஸ்தா யோசித்துப் பார்த்தான். ஹரிகாலி சொன்னது சரியென்றுதான் அவனுக்குப் பட்டது.

ஆகவே, "தாங்கள் எப்படிச் சொல்லுகிறீர்களோ, அப்படிக் கேட்கிறேன்" என்று பதில் அளித்தான்.

"சரி, அவளுக்கு மாதம் ஐந்து ரூபாய் கணக்காக அனுப்பிக்கொண்டிரும். சந்திரநாத் கொடுக்காவிட்டால் நான் கொடுக்கிறேன்" என்ருள்.

"சரி, அப்படியே" என்ருன் குமாஸ்தா.

சந்திரநாத் வீட்டில் இல்லை; அலகாபாத்துக்குப் போய் விட்டான். அவனுக்குக் கடிதம் எழுதிக் கேட்கலாம் என்று குமாஸ்தா நினைத்தான். ஆனல், அசம்பாவிதமான இக் காரியத்தைக் குறித்து எழுதிக் கேட்டுத் தன் மதி யீனத்தை வெளிப்படுத்திக் கொள்வானேன் என்று பேசாமல் இருந்துவிட்டான்.

## பதினன்காம் அத்தியாயம்

மேலே சொன்ன விஷங்கள் நடந்து இரண்டு வருஷங்களாயின. இந்த இரண்டு வருஷங்களில் கைலாஸ் சந்திரரின் வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதல் உண்டாகியிருந்தது. என்றைக்கு அவருடைய கமலசரண் கண்களை மூடிஞனே, அன்றைக்கே இந்த விசாலமான உலகத்தின் கண்ணும் மூடிவிட்டது. ஆனல், சரயூவின் அந்தச் சின்னஞ்சிறு சிசு, மறந்துபோன சம்சார வாழ்க் கையில் அவரைத் திரும்பவும் ஆழ்த்திவிட்டது. அநேக தினங்களுக்குப் பிறகு அன்றுதான் அவருடைய கண்களில் கண்ணீர் வழிந்தது. கண்ணைத் துடைத்துக்கொண்டு, அவர், "நம்முடைய வீட்டுக்கு விஸ்வேஸ்வரர் வந்திருக் கிருர்" என்ருர்.

இதுவரையில் அவன் மிகவும் சின்னவனுய் இருந்தான். யாராவது 'விசு' என்று கூப்பிட்டால் பதில் சொல்லத் தெரியாமல் பார்த்துக்கொண்டேயிருப்பான். சரயூவின் மடியிலாவது படுக்கையிலாவது கிடப்பான். ஆனுல், என்றையிலிருந்து அவன் வாசற்படியைத் தாண்டி வெளியே நடந்துவரக் கற்றுக்கொண்டு விட்டானே, என்றையிலிருந்து அவனுக்குப் பாலைவிடத் தண்ணீர் ருசியாய் இருக்கிறது என்று தோன்றிற்ரே, என்றையிலிருந்து எல்லாப் பாத்திரங்களுக்குள்ளும் தலையிட்டு, வயிறு வெடிக்கத் தண்ணீர் குடிக்கத் தலைப்பட்டானே, என்றையிலிருந்து தன்னுடைய அழகிய முகத்திலும் வயிற்றிலும் மையைப் பூசிக் கொள்வதிலும் குப்பையைக் கொட்டிக் கொள்வதிலும் ஆனந்தம் இருக்கிறது என்று கண்டு கொண்டானே, அன்றையிலிருந்து அவன் சரயூவின் மடியைவிட்டு, கைலாஸ் சந்திரர் மடியில் ஸ்திரமாக வந்து உட்கார்ந்துகொண்டான்.

பொழுது விடிய வேண்டியதுதான். உடனே கைலாஸ் 'விசு' என்று குரல் கொடுப்பார். விசு தலையைத் தூக்கி! "தாத்தா" என்பான். "வா, போய், ஷம்பு மிஸ்ரரோடு ஒரு ஆட்டம் ஆடிவிட்டு வருவோம்" என்பார் கைலாஸ். உடனே விசு சதுரங்க மூட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு, "வா, போகலாம்" என்று தன் மழலைச் சொற்களில் கூறுவான். உடனே தன் இரு சிறு கைகளையும் நீட்டி, தாத்தாவின் கழுத்தைக் கட்டிக்கொள்வான். கைலாஸ் சந்திரருக்கு இது மிகவும் ஆனந்தமாயிருக்கும். அவர் சரயூவைக் கூப்பிட்டு, "நம்முடைய விசு பெரிய கில்லாடி ஆகப் போகிருன்" என்பார். சரயூ உதட்டைக் கடித்துக்கொண்டே சிரிப்பாள். பிறகு விசு கையில் சதுரங்க மூட்டையை எடுத்துக்கொண்டு கைலாஸ் சந்திரரின் இடுப்பில் ஏறி உட்கார்ந்துகொண்டு, சதுரங்கம் ஆட

வெளியே போவான். வழியில் யாராவது சிரித்துக் கொண்டே, "என்ன சித்தப்பா! இந்த முதிர்ந்த வயதில் இன்னும் இரண்டு கை முளைத்திருக்கிறுப் போலிருக் கிறதே" என்று கேட்டால் கைலாஸ் சந்திரர், "ஆமாம் அப்பா! இந்த இரண்டு கைகளும் தள்ளாடிப் போய் விட்டன; அதுதான், நான் சம்சார விருக்ஷத்திலிருந்து கீழே விழாமல் இருக்கும் பொருட்டு, புதுசாக இரண்டு கைகள் உண்டாகியிருக்கின்றன" என்று பதில் அளிப் பார். இப்படிச் சொல்லிவிட்டு, "அப்பா, கிழவனைப் பேச்சில் யாரும் ஜயிக்க முடியாது, தெரிந்ததா?" என்று சிரிப்பார்.

சம்பு மிஸ்ரர் வீட்டில் எல்லாரும் உட்கார்ந்து சதுரங்கம் விளையாடும் இடத்தில் ஸ்ரீமான் விஸ்வேஸ்வருக் கென்று ஒரு தனி இடம் இருக்கும். அவன் தாத்தாவின் மடியில் உட்கார்ந்துகொண்டு ஆட்டத்தை மிகவும் கம்பீர மாகப் பார்த்துக் கொண்டிருப்பான். அவன் உட்கார்ந் திருப்பதைப் பார்த்தால் அவனுக்குக்கூட ஆடத் தெரி யுமோ என்று தோன்றும்.

தாத்தா ஒவ்வொருகாயாய் வெட்ட வெட்ட விஸ்வேஸ் வர் பார்த்துக்கொண்டேயிருந்து, அவற்றை எடுத்துத் தன் சட்டைக்குள் ஒளித்து வைத்துக் கொள்வான். ஆனால், எல்லாக் காய்களையும்விடச் சிகப்பு மந்திரியின் மீதுதான் அவன் முழு திருஷ்டியும் இருக்கும். அது வெட்டுப்பட்டுத் தன் கைக்கு வருமட்டும் அதையே பார்த்துக் கொண்டிருப் பான். நடுவில் நடுவில், "தாத்தா! அது!" என்று சுட்டிக் காட்டுவான். ஆட்ட சுவாரஸ்யத்தில், "பொறு அப்பா" என்பார் தாத்தா.

சில சமயங்களில் விசு அந்தண்டை இந்தண்டை சென்றுனுல் தாத்தாவின் மனது பாதி சதுரங்கத்திலும்,

பாதி விசுவின் மீதும் இருக்கும். இதனுல் இவர் ஒன்றிரண்டு காய்களை வெட்டக் கொடுத்து விடுவதும் உண்டு. அப்பொழுது அவர் விசுவை நோக்கி, "ஓடிவாடா, கண்ணே! நாம் தோற்றுக் கொண்டிருக்கிருேம்" என்பார். பையன் ஓடி வந்ததும், தாத்தாவுக்கு உற்சாகம் கிளம்பி விடும். கடைசியாக ஆட்டம் முடிந்ததும், விசு சிகப்பு மந்திரியைக் கையில் ஏந்தி, தாத்தா இடுப்பில் ஏறிக் கொண்டு வீடு செல்வான்.

கைலாஸ் சந்தரரின் வாழ்க்கை புது விதமாகக் கழிய ஆரம்பித்தது. இப்பொழுதெல்லாம் முன்னைப் போல் பொழுது விடிந்ததும் சம்பு மிஸ்ரரைப் பார்க்கப் போவதில்லை. பன்னிரண்டு மணி சமயத்துக்கு கங்கா பாண்டேயோடு ஆடுவாரே, அதுவும் நின்று போய்விட்டது. சாயங்காலத்தில் முகுந்த் கோஷின் வீட்டில் சதுரங்கம் ஆடுவதற்காக ஒரு ஜமா கூடுமே, அதுவும் கிடையாது. முகுந்த் கோஷ் கைலாஸ் சந்திரரைக் கூப்பிட்டுக் கூப்பிட்டு அலுத்துவிட்டார். இப்பொழுதெல்லாம் இருட்டினதும், கைலாஸ், விளக்கு வெளிச்சத்தில் உட்கார்ந்துகொண்டு, தம்முடைய புது சிஷ்யனுக்குச் சதுரங்கம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருப்பார்.

"விசு! குதிரை இரண்டரைக் கட்டம் தாண்டும்" என்பார் கைலாஸ்.

"குருதையா ?" என்று கேட்பான் விசு.

"ஆமாம், குதிரை !"

"குருதே போகுமா ?"

"ஊம், போகும். இரண்டரைக் கட்டம் போகும்."

"அப்படியானுல் வண்டியும் போகும்" என்பான் விசு.

“இல்லேடா கண்ணு! இந்தக் குதிரை வண்டி இழுக்காது. வண்டி இழுப்பது வேறு குதிரை” என்பார் தாத்தா.

இந்தச் சமயத்தில் சரயூ அங்கிருந்தால், முந்தானையால் வாயைப் பொத்திக்கொண்டு நகைப்பாள்.

விசு தன் சிறு விரலால் ‘அது’ என்று சுட்டிக் காண்பிப்பான். இதற்கு, “அந்தச் சிகப்பு மந்திரி எனக்கு வேண்டும்” என்று அர்த்தம். எல்லாக் காய்களையும் விட்டு, இந்தச் சிகப்பு மந்திரியின் மீது விசுவுக்கு ஏன் இத்தனை மோகம் என்பது தாத்தாவுக்குப் புரியவில்லை.

கைலாஸ் வேறு ஏதாவது காய்களைக் கொடுத்துச் சமாதானப்படுத்திப் பார்ப்பார். ஆனால், அவனை ஏமாற்ற முடியாது என்று பட்டதும், சிகப்பு மந்திரியைக் கையில் கொடுத்து, “தொலைக்கக்கூடாது, தெரிந்ததா?” என்பார்.

“ஏன்?”

“மந்திரி இல்லாமல் ஆட்டம் ஆட முடியாது.”

“ஆட முடியாது?”

“ஆட முடியாது.”

இம்மாதிரியாகத்தானே கிழவரின் நாட்கள் இன்பமாகச் சென்றுகொண்டு வந்தன.

ஒரு நாள் போலாநாத்தின் வீட்டில் கதை நடந்துகொண்டிருந்தது. கைலாஸ் விசுவை இடுப்பில் தூக்கிக் கொண்டு கதைக்குச் சென்றிருந்தார். பரத சக்ரவர்த்தி எப்படி ஒரு மான் குட்டிக்கு அடைக்கலம் கொடுத்து வளர்த்துக்கொண்டு வந்தார் என்பதைப் பற்றிய கதை அது.

மான் குட்டியின் மேல் இருந்த மோகத்தினால் பரதர் தம்முடைய, நித்யகர்மம், பூஜை, புனஸ்காரம், ஈஸ்வர

ஆராதனை எல்லாவற்றையும் மறந்துவிட்டார். மான் குட்டி பெரிதானதும், ஒருநாள் காட்டுக்கு ஓடிப் போய் விட்டது. மான் திரும்பி வராமற் போகவே பரதர், " ஓடி வா, ஓடி வா, ஓடி வா " என்று கூப்பிட ஆரம்பித்தார். வனத்தைச் சேர்ந்த பிராணி வனத்துக்கே போய்விட்டது. பரதரின் கூப்பாட்டுக்கு பதிலே இல்லை. பரதர் வனம் முழுவதும் " ஓடி வா, ஓடி வா, ஓடி வா " என்று கத்திக் கொண்டே அலைந்தார். ஆனால், பதில் கிடைக்கவில்லை. பரதர் அன்ன பானாதிகளை மறந்து மான் ஞாபகமாகவே இருந்தார். இறக்கும் பொழுதுகூட அவருக்கு அந்த மான் ஞாபகம்தான். " ஓடி வா, ஓடி வா, ஓடி வா !" என்று கத்தினார்.

இந்தக் கதையை, கதை சொல்லுகிறவர் மிகவும் உருக்கமாகச் சொல்லிக்கொண்டு வந்தார். ஆகவே, இந்தச் சமயத்தில் கைலாஸ் விசுவைத் தம் மார்புறத் தழுவிக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டார். அழுது கொண்டே, " ஓடி வா, ஓடி வா, ஓடி வா " என்று கூப்பிட்டார்.

கைலாஸரின் செய்கை யாருக்கும் ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை. ஏனெனில், அவரவர்களும் அவரவர்கள் இழந்த பொருளை நினைத்துக்கொண்டு அழ ஆரம்பித்து விட்டனர்.

கதை முடிந்ததும், கைலாஸ் கண்ணீரைத் துடைத்து விட்டு, விசுவை இடுப்பில் தூக்கிக்கொண்டு வீடு சென்றார். வீடு சென்றதும், விசுவை சரயூவின் முன் இறக்கிவிட்டு, " இந்தா அம்மா ! உன்னுடைய பொருளை நீயே வைத்துக் கொள் " என்றார்.

அழுது, அழுது கிழவருக்குக் கண்கள் சிவந்திருந் ததை சரயூ கண்டாள்.

## பதினைந்தாம் அத்தியாயம்

இந்த இரண்டு வருஷங்களாகச் சந்திரநாத் தன் வீட்டுப் பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை. எப்பொழுதாவது பணம் வேண்டுமென்றால் தன் குமாஸ்தாவுக்கு எழுது வான். அவன் குறிப்பிட்ட விலாசத்துக்குக் குமாஸ்தா பணம் அனுப்பிவிடுவான்.

ஹரிகாலி நடு நடுவே ஏதாவது வருத்தத்தைத் தெரி வித்துக் கடிதம் எழுதுவாள். விரஜகிஷோரும் வீட்டுக்குத் திரும்பி வரும்படி கடிதம் எழுதுவார். மணிசங்கரும் தம் முடைய தேக நிலை நாளுக்கு நாள் க்ஷீணித்துக் கொண் டிருப்பதாகவும், சந்திரநாத்தைப் பார்க்க விரும்புவதாகவும் இரண்டொரு கடிதங்கள் எழுதினார்.

சந்திரநாத் இவற்றையெல்லாம் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஆனால், ஹரிபாலா, "நீ ஒரு தடவை இங்கு வந்தால் தேவலை. நான் உன்னுடன் சில விஷ யங்கள் பேசவேண்டியிருக்கிறது" என்று எழுதியதும், மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு அவன் வண்டி ஏறினான்.

"ஹரிபாலாவுக்கு ஏதாவது கடிதம் வந்திருக்கலாம்; அதைப் பார்த்து, இழந்துவிட்ட என் சுக வாழ்க்கையின் ஞாபகம் துளி வரலாம்" என்று நினைத்தே சந்திரநாத் பறந்து ஓடி வந்தான்.

ஆனால், அப்படியொன்றும் இல்லை. ஹரிபாலாவைக் கண்டு பேசியதும், "சொல்லு, பாட்டி! இன்னும் என்ன விஷயம் சொல்ல வேண்டுமென்று நினைத்தாய்?" என்று கேட்டான்.

"அவ்வளவுதான், அப்பா! வேறு ஒன்றும் இல்லை."

சந்திரநாத் ஏமாற்றமடைந்தான்.

"இதற்குத்தானா என்னை இத்தனை கஷ்டப்படுத்தி வரவழைத்தாய்?"

"ஏன் அப்பா, வீட்டுக்கு வராமல் இப்படி இருப்பது உனக்கு அழகாகப்படுகிறதா? என்னமோ, அப்பா. நடந்தது நடந்துவிட்டது. நீ திரும்பவும் கிருகஸ்தனாகா விட்டால் எங்களுக்கெல்லாம் மிகவும் வருத்தமாயிருக்கும்."

"இதற்காக நான் என்ன பண்ணுவேன்?" என்றான் சந்திரநாத்.

ஆனால், மணிசங்கர் அவனை விடவில்லை. அவன் கையைப் பிடித்துக்கொண்டு, "அப்பா! நீ என்னை மன்னிக்க வேண்டும். அன்றையிலிருந்து என் மனம் என்ன பாடுபடுகிறது என்பது பகவானுக்குத்தான் தெரியும்" என்றார்.

சந்திரநாத் பதில் அளிக்கவில்லை.

மணிசங்கர் சொன்னார்: "நீ மறு விவாகம் செய்து திரும்பவும் சம்சார வாழ்க்கையை நடத்தவேண்டும். உன் மனதுக்குப் பிடித்தவளாய் ஒரு பெண்ணைப் பார்த்து வைத்திருக்கிறேன். உன் சம்மதத்தைக் கேட்டுக்கொண்டு நிச்சயம் செய்யலாம் என்று இருக்கிறேன். மனைவி இறந்து விட்டால் இன்னொரு மனைவியைக் கல்யாணம் செய்து கொள்வதில்லையா?"

"முதலில் அவள் இறந்துவிட்டாள் என்று செய்தி கிடைக்கட்டும், பின்னால் பார்த்துக் கொள்வோம்" என்றான் சந்திரநாத்.

"சிவ! சிவ! சிவ! இப்படியெல்லாம் சொல்லாதே, அப்பா."

சந்திரநாத் வாயை மூடிக்கொண்டான். மணிசங்கர் அழுதுகொண்டே, "சம்சார வாழ்க்கையிலிருந்து உன்னை விரட்டியவன் நான்தான். நான் இதைச் சாகுமட்டும் மறக்க முடியாது" என்றார்.

சந்திரநாத் ஏதோ யோசித்துவிட்டு, "பெண் எங்கே பார்த்திருக்கிறீர்கள் ?" என்று கேட்டான்.

"கல்கத்தாவில். நீதான் போய்ப் பார்த்துவிட்டு வாயேன்."

"சரி, நாளையே புறப்படுகிறேன்."

"அப்படியே செய், அப்பா! பெண் பிடித்திருந்தால் எனக்கும் கடிதம் போடு. நான் எல்லாரையும் அழைத்துக் கொண்டு கல்கத்தா வந்து சேருகிறேன்."

கொஞ்ச நேரங் கழித்து மணிசங்கர் திரும்பவும் பேச ஆரம்பித்தார். "அப்பா சந்திரநாத், நான் அதிக நாள் ஜீவித்திருக்க மாட்டேன் என்று தோன்றுகிறது. ஆகவே, நீ திரும்பவும் கிருகஸ்தன் ஆகி சௌக்கியமாய் இருந்தால் அதைப் பார்த்துவிட்டுச் சந்தோஷமாய் இறப்பேன்."

அடுத்த நாளே சந்திரநாத் கல்கத்தா போய்ச் சேர்ந்தான். மாமா விரஜகிஷோரும் கூடச் சென்றிருந்தார். பெண்ணைப் பார்த்து முடிந்ததும், விரஜகிஷோர், "பெண் பார்ப்பதற்கு லக்ஷ்மியைப் போல் இருக்கிறாள்" என்றார்.

சந்திரநாத் முகத்தைத் திருப்பிக் கொண்டான்; ஒரு பதிலும் கூறவில்லை.

இருவரும் ஸ்டேஷனுக்கு வந்து டிக்கட் வாங்கிக் கொண்டு வண்டியில் ஏறினார்கள். "பெண் பிடித்திருக் கிறதா ?" என்று கேட்டார் விரஜகிஷோர். சந்திரநாத் தலையை அசைத்துக்கொண்டே' "இல்லை" என்றான்.

விரஜகிஷோருக்குத் தூக்கி வாரிப் போட்டது. " பெண் எவ்வளவு அழகாயிருக்கிறது! பிடிக்கவில்லை என்கிருயே !"

ஊர் வந்ததும், விரஜகிஷோர் இறங்கிக் கொண்டார். சந்திரநாத் அலகாபாத்துக்கு டிக்கெட் வாங்கியிருந்தான்.

" இன்னும் எத்தனை நாளில் திரும்புவாய் ?" என்று கேட்டார் விரஜகிஷோர்.

" சித்தப்பாவுக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவித்து, சீக்கிரம் திரும்பி வர எனக்கு இஷ்டமில்லை என்று சொல்லி விடுங்கள்."

இதையெல்லாம் கேட்டதும் மணிசங்கர் தலையில் அடித்துக்கொண்டு வருத்தப் பட்டார். " என்ன நடக்கிறதோ, பார்ப்போம். எனக்கு உடம்பு கொஞ்சம் சரியானதும் நானே காசிக்குப் போய் நாட்டுப் பெண்ணை அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன். இந்தப் பாழும் சமூகத்துக்குப் பயந்து நான் பாவத்தைக் கட்டிக் கொள்ள முடியாது" என்று தீர்மானித்தார்.

ஹரிகாலி இதைக் கேட்டதும் பல்லைக் கடித்து, " கிழவனுக்கு மூளை குழம்பிப் போய்விட்டது" என்று நினைத்துக் கொண்டாள். குமாஸ்தாவைக் கூப்பிட்டு, " சந்திரநாத் என்ன சொன்னுன் ?" என்று கேட்டாள்.

" இது வரையில் காசிக்கு எவ்வளவு பணம் அனுப்பி இருக்கிறீர் என்று கேட்டார், அவ்வளவுதான்."

" பூ ! இதுதானு கேட்டான் ? வேறு ஒன்றும் கேட்க வில்லையா ?" என்று ஹரிகாலி முகத்தைச் சுளுக்கிக் கொண்டு அப்பால் சென்ருள்.

# பதினாறும் அத்தியாயம்

சந்திரநாத் அலகாபாத்துக்கு டிக்கெட் வாங்கியிருந்தபோதிலும், வழியில் தன் தீர்மானத்தை மாற்றிக் கொண்டு, காசிக்குச் சென்றான்.

அவனுடன்கூட இருந்த இரண்டு வேலைக்காரர்கள் ஒரு வண்டி பேசி அதில் அவன் படுக்கை, மூட்டை முதலியவற்றை வைத்தனர். ஆனால், சாமான்களை எடுத்துக்கொண்டு டாக் பங்களாவில் போய்க் காத்திருக்கும் படி சொல்லிவிட்டு, சந்திரநாத் வேறு பாதையில் நடக்க ஆரம்பித்தான்.

அந்தப் பாதையில் நடந்து செல்லச் செல்ல, அவன் துக்கம் அதிகரித்தது. முகம் வெளுத்தது. அவன் ஒவ்வொரு அடி எடுத்து வைத்தபோது, அது அவன் மார்பின் மீது வைத்ததுபோல் அவனுக்குப் பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக ஹரிதயாலின் வீடு சமீபித்துக் கொண்டிருந்தது. அந்த வழியெல்லாம் அவனுக்கு நன்றாகத் தெரியும். அதோ தெருவின் திருப்பத்தில் இருந்த சின்னக் கடை முன்பு இருந்த மாதிரியே இன்றும் விளங்கிற்று. அந்தக் கடைக்காரன் முன்னைப் போலவே தொந்தியைத் தள்ளிக் கொண்டு, கடையில் உட்கார்ந்து பட்சணம் சுட்டுக் கொண்டிருந்தான். அவன் சந்திரநாத்தைப் பார்த்தான். ஆனால், சந்திரநாத் முகம்மதியன் போல் ஆடை அணிந்திருந்ததால், "இவன் எங்கே பட்சணம் வாங்கப் போகிறான் ?" என்று திரும்பவும் அவன் தன் காரியத்தைக் கவனிக்கத் தலைப்பட்டான்.

சந்திரநாத் மேலே நடந்து சென்றான். தெருவின் திருப்பத்தையடைந்ததும் அவன் கால் மேலே அடி எடுத்து வைக்க மறுத்தது. அந்தத் தெருவில் பெயருக்குக்

கூடக் காற்று இல்லை. மூச்சு விடுவதே மிகவும் கஷ்டமாகப் பட்டது. இரண்டு மூன்று அடி எடுத்து வைத்ததும், திரும்பவும் நின்றான். "இந்த வழி இப்படியே வளர்ந்து கொண்டே போகக்கூடாதா ?" என்று நினைத்தான். வழி முடிந்ததும் என்ன இருக்குமோ, யார் கண்டார்கள் ?

கடைசியாக ஹரிதயாலின் வீட்டுக்கு முன்னால் வந்து சேர்ந்தான். வெகு நேரம் பேசாமல் அங்கேயே நின்றான். கூப்பிட வேண்டும் என்று நினைத்தான். ஆனால், நா எழவில்லை. கடியாரத்தை எடுத்துப் பார்த்தான். மணி ஒன்பது அடித்துவிட்டது. கொஞ்சம் தைரியப்படுத்திக்கொண்டு, "ஹரிதயால்ஜி !" என்று கூப்பிட்டான். பதில் இல்லை. திரும்பவும், "ஹரிதயால்ஜி!" என்று கூப்பிட்டான்.

யாரோ ஒரு ஸ்திரீயின் குரல் வீட்டுக்குள்ளிருந்து கேட்டது.

"அவர் வீட்டில் இல்லை !"

இப்படிப் பதில் சொன்னவள் அங்கு வேலை செய்து கொண்டிருந்த வங்காள ஸ்திரீ. வாசலுக்கு வந்த அவள் சந்திரநாத்தின் முகம்மதிய ஆடையைப் பார்த்ததும் கதவு மறைவில் ஒளிந்து கொண்டாள். சந்திரநாத் அவளோடு தாய்ப் பாஷையிலேயே பேச ஆரம்பித்ததும் அவள் பதில் சொல்லலானாள்.

"அவர் வீட்டில் இல்லை."

"திரும்பி வர எவ்வளவு நாழியாகலாம் ?"

"மத்தியானம் பன்னிரண்டு மணியாகலாம்."

சந்திரநாத் வீட்டுக்குள்ளே நுழைந்தான். சந்தோஷம், வெட்கம், சந்தேகம் இம்மூன்று உணர்ச்சிகளும்

சேர்ந்தார்ப்போல் அவனைப் பிடித்துக்கொண்டன. சரயூ உள்ளே இருப்பாள் என்று அவன் நினைத்தான். ஆனால் உள்ளே ஒருவரையும் காணோம்.

"வீட்டில் வேறு ஒருவரும் இல்லையா ?" என்று கேட்டான்.

"இல்லை."

"அவர்கள் எல்லாம் எங்கே ?"

"யார் எல்லாம் ?"

"ஒரு ஸ்திரீ..."

"என்னைத் தவிர வேறு யாரும் இங்கே கிடையாது."

"ஒரு சின்னப் பையன் இருக்கவில்லை ?"

"இல்லை. இங்கு வேறு யாரும் இல்லை."

சந்திரநாத் அங்கிருந்த ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு, "பின் அவர்கள் எல்லாம் எங்கே ?" என்று கேட்டான்,

அவளுக்கு விஷயம் ஒன்றுமே புரியவில்லை. "இங்கே என்னையும் பண்டாவையும் தவிர வேறு யாரும் கிடையாது. ஒரு மாத காலமாகச் சிராத்தாதிகள் முதலிய காரியங்களுக்காகக்கூட இங்கு யாரும் வருவதில்லை" என்றாள்.

சந்திரநாத் அப்படியே ஸ்தம்பித்துப் போய்த் தரையைப் பார்த்தவாறே இருந்தான். அந்தச் சமயம் அவன் மனம் என்ன பாடுபட்டது என்பது பகவானுக்குத்தான் தெரியும். வெகு நேரங் கழித்து அவன் கேட்டான்.

"நீ இங்கு எவ்வளவு காலமாக இருக்கிறாய் ?"

"சுமார் ஒன்றரை வருஷம் இருக்கும்."

"அப்படியிருந்தும் நீ யாரையும் பார்க்கவில்லையா ? ஒரு சிகப்பான ஸ்திரீ......அவள் இடுப்பில் ஓர் ஆண் குழந்தையோ, பெண் குழந்தையோ இருக்கும்......

அல்லது, அவள் மாத்திரமே இருக்கலாம். நீ ஒருவரையும் பார்க்கவில்லையா ?"

" இல்லையே !"

" அவர்களைப் பற்றி யாரும் பேசிக்கொண்டது கூட இல்லையா ?" .

" இல்லையே !"

இதற்கு மேல் சந்திரநாத் அவளை ஒன்றும் கேட்காமல் ஹரிதயாலின் வருகைக்காகக் காத்திருக்கத் தீர்மானித்தான். சரயூ இந்த உலகத்தில் இல்லை என்று அவனுக்குப் பட்டது. இருந்தாலும், " இந்த சமாசாரத்தைக் காதால் கேட்டுவிட்டுப் போவோம் " என்று அங்கேயே உட்கார்ந்திருந்தான். அப்பொழுது ஒவ்வொரு நிமிஷமும் அவனுக்கு ஒரு யுகமாகப் பட்டது.

ஹரிதயால் பன்னிரண்டு மணிக்கு வீட்டுக்குத் திரும்பி வந்தார். சந்திரநாத்தைக் கண்டதும் சற்று வியப்படைந்தார்.

இருந்தாலும், " சந்திர பாபு ! தாங்களா ? வாருங்கள்! எப்பொழுது வந்தீர்கள் ?" என்று கேட்டார்.

" வந்து ரொம்ப நேரமாகிறது. அவர்கள் எல்லாம் எங்கே ?"

" அவர்களா !...ஓ ! அவர்கள் வந்து..."

சந்திரநாத்தின் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. அவன் எழுந்து நின்று, "அவள் எப்பொழுது இறந்தாள்?" என்று கேட்டான்.

" யார் எப்பொழுது இறந்தாள் ?"

" சரயூ எப்பொழுது இறந்தாள் ?" என்று அவன் சற்றும் பலமாகவே கேட்டான்.

ஹரிதயாலுக்கு இப்பொழுதுதான் விஷயம் புலப் பட்டது.

“ அவள் இறக்கவில்லை. சௌக்கியமாக இருக்கிருள்.”

“ எங்கே இருக்கிருள் ?”

“ கைலாஸ் சித்தப்பா வீட்டில்.”

“ அவர் எங்கே வசிக்கிருர் ?”

“ இந்தத் தெருக் கோடியில் ஒரு பலா மரம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இருக்கிறது அவர் வீடு.”

சந்திரநாத் தலையைப் பிடித்துக்கொண்டு அங்கேயே உட்கார்ந்தான். வெகு நேரம் பேசாமல் இருந்த பிறகு, “ அவள் ஏன் இங்கு இல்லை ?” என்று கேட்டான்.

ஹரிதயால் யோசித்தார். “ நாம் தப்பான காரியம் ஒன்றும் செய்துவிடவில்லை. வெட்கப்படுவானேன் ?” என்று எண்ணித் தைரியமாகப் பேச ஆரம்பித்தார்.

“ தங்கள் வீட்டில் தாங்கள் யாருக்கு இடம் கொடுக்க வில்லையோ, அவர்களுக்கு என் வீட்டில் நான் எப்படி இடம் கொடுக்க முடியும் ? எனக்கும் நாலு பேரால் காரியம் ஆகவேண்டி யிருக்கிறதல்லவா ?”

ஹரிதயால்கூறியது சரிதானென்று சந்திரநாத்திற்குப் பட்டது. கொஞ்சம் யோசித்து, “ அவள், சித்தப்பா கைலாஸரின் வீட்டுக்கு எப்படிப் போய்ச் சேர்ந்தாள் ?” என்று கேட்டான்.

“ அவரே வந்து அழைத்துக் கொண்டு சென்ருர்.”

“ யார் அவர் ?”

“ அவர் காசியில் வசிக்கும் ஓர் ஏழைப் பிராமணர்.”

“ சரயூவுக்கு முன்னமேயே அவரைத் தெரியுமா ?”

“ மிக நன்ருகத் தெரியும்.”

" அவருக்கு என்ன வயதிருக்கும் ?"

ஹரிதயால் மனதிற்குள்ளேயே சிரித்துக்கொண்டு, " அறுபது என்று எனக்குத் தோன்றுகிறது. அவர் சரயூவைத் தம் சொந்தப் பெண் போல் பாவித்து வருகிறார் " என்றார்.

" அங்கே இன்னும் யார் இருக்கிறார்கள் ?"

" ஒரு வேலைக்காரி, சரயூ, விசு."

" விசு யார் ?"

" சரயூவின் பிள்ளை."

சந்திரநாத் எழுந்து நின்று, " சரி, நான் போகிறேன் " என்றான். ஹரிதயால் அவனைத் தடுக்கவில்லை. அவன் வெளியே வந்ததும், தெருக் கோடிக்குச் சென்று அங்கிருந்த ஒரு மனிதனை, " கைலாஸ் சித்தப்பா எந்த வீட்டில் வசிக்கிறார், தெரியுமா ?" என்று கேட்டான்.

அந்த மனிதன் ஒரு வீட்டைத் தன் விரலால் சுட்டிக் காட்டினான்.

சந்திரநாத் ஓடிச் சென்று, அவ் வீட்டுக்குள்ளே நுழைந்தான். அங்கே யாரையும் காணவில்லை. தாழ்வாரத்தில் அழகாகவும் கொழு கொழு என்றும், காணப்பட்ட ஒரு பாலகன் ஒரு செம்பில் ஜலத்தை எடுத்து மிகவும் சந்தோஷத்துடன் தன் மேல் ஊற்றிக்கொண்டிருந்தான். சந்திரநாத் அக் குழந்தையை வாரி எடுத்து அணைத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தான். பையன் ஆச்சரியமாவது, பயமாவது ஒன்றும் அடையவில்லை. தனக்குத் தெரியாதவர்கள் இடுப்பில் ஏறி உட்கார்ந்து கொள்வது அவனுக்கு அன்றுதான் புதுசு என்று படவில்லை. அந்தப் பாலகன் தன் சிறு விரலைச் சந்திரநாத்தின் மூக்கின்மீது வைத்துக்கொண்டு, " நீ யார் ?" என்று கேட்டான்.

சந்திரநாத் மிகுந்த வாஞ்சையுடன் அவனை முத்த மிட்டு, " நான்தான் அப்பா " என்ருன்.

" அப்பாவா ?"

" ஆம், அப்பா. நீ யார் ?"

" நான் விசு."

சந்திரநாத் தன்னுடைய கடியாரத்தையும் சங்கிலி யையும் கழட்டி அவன் கழுத்தில் அணிவித்தான். தன் ஜேபியிலிருந்து பேஞக் கத்தி, பென்ஸில், மணி-பாக்ஸ் என்ன கிடைத்ததோ அதையெல்லாம் எடுத்துக் குழந்தை யின் கையில் கொடுத்தான்.

அந்தச் சாமான்களைக் கண்டதும் விசு புளகாங்கித மடைந்து, " அப்பா !" என்று கூப்பிட்டான்.

சந்திரநாத் தன்னுடைய முகத்தைக் குழந்தையின் முகத்துடன் வைத்து, " கண்ணே !" என்ருன்.

இந்தச் சமயத்தில் வேலைக்காரி ஜன்னல் பின்ஞ லிருந்து , யாரோ ஒரு துரை விசுவைத் தூக்கிக்கொண்டு அங்கும் இங்கும் உலாவுவதைக் கண்டாள். அவள் உடனே மூச்சையடக்கிக்கொண்டு சமையலறைக்கு ஓடிஞள் அங்கு கைலாஸ் சந்திரரைக் காணும். வெகு நாளைக்குப் பிறகு அன்றுதான் விச்வேச்வரநாதரைத் தரிசிப்பதற் காகச் சென்றிருந்தார். சரயூவும் தரிசனம் செய்துவிட்டு அப்பொழுதுதான் திரும்பி வந்து, சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

வேலைக்காரி அங்கே சென்று, உடல் குலுங்க, " அம்மா " என்று கூப்பிட்டாள்.

" என்னடீ ?"

" யாரோ துரை வந்திருக்கிருர். அவர் விசுவைத் தூக்கிக்கொண்டு சுற்றுகிருர் !"

சரயூ வியப்படைந்து, "யாரு ?" என்று சொல்லி எழுந்து நின்றாள். அங்கிருந்தே யார் என்று பார்க்க முயன்றாள் ; தெரியவில்லை.

வேலைக்காரி அவள் முந்தானையைப் பிடித்திழுத்து, "நீங்கள் அங்கே போகக்கூடாது. துரை இங்கே வரட்டும்" என்றாள்.

அவள் சொன்னதைக் கேட்காமல் சரயூ வெளியே சென்று பார்த்தாள். யாரோ ஒரு துரை விசுவுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டாள். தைரியத்தை வர வழைத்துக் கொண்டு ஜன்னலண்டை சென்றாள். யாருடைய நிழலைப் பார்த்ததுமே அடையாளம் கண்டு கொள்வாளோ, அவரை நேரில் பார்த்ததும் அடையாளம் கண்டு கொள்ளாமலா இருப்பாள் ? அவர் தன் புருஷன் சந்திர நாத் என்று தெரிந்துகொண்டாள்.

சரயூ அவர் முன் சென்று நமஸ்கரித்து எழுந்து நின்றாள்.

"சரயூ !" என்றான் சந்திரநாத்.

## பதினேழாவது அத்தியாயம்

கணவனும், மனைவியும் பேச ஆரம்பித்தார்கள்.

"மிகவும் இளைத்துப்போய் விட்டாயே" என்றான் சந்திரநாத்.

சரயூ அவன் முகத்தை நோக்கிப் புன்முறுவல் பூத்தாள். "இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக் கிறது ?" என்று அவள் சொல்ல விரும்பியதுபோல் பட்டது.

சரயூ அவனுடைய ஜோடு, கோட்டு, ஷர்ட் எல்லா வற்றையும் ஒவ்வொன்ருகக் கழட்டிஞள். ஈரத் துணி கொண்டு அவன் காலைத் துடைத்து, விசிறியால் விசிற ஆரம்பித்தாள். அந்தக் காரியங்களை அவள் என்னவோ தினப்படி செய்வது போலவும், அதையே இன்னும் செய்வது'போலவுமே காணப்பட்டது. தான் இந்தவாழ்க்கை யில் யாரைத் திரும்பவும் காணப் போவதில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தாளோ, அவர் இன்று தாஞகவே அவளைத் தேடிக்கொண்டு வந்திருக்கிருர். இதைக் குறித்து எவ்வளவு ஆனந்தக் கண்ணீர் சிந்தவேண்டும் ! எத்தனை பெருமூச்சு எறிய வேண்டும் ! ஆனல், சரயூ அப்படி யொன்றும் செய்யவில்லை. அவள் நடந்து கொண்ட விதம், அவள் புருஷன் தினப்படி அங்கு வருவதுபோல வும், வழக்கம்போலவே அன்றும் வந்திருப்பதாகவுமே காணப்பட்டது.

ஆனல், சந்திரநாத்தின் நடத்தை வேறு விதமாக இருந்தது. தன்னையும் விசுவையும் தவிர வேறு யாரும் இல்லாதது போல், விசுவுடன் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தான்.

"போய் விளையாடு, கண்ணே !" என்ருள் சரயூ.

சந்திரநாத் விசுவைக் கட்டிலிலிருந்து கீழே இறக்கி விட்டான் அவன் தன் தாயார் சந்திரநாத்திற்கு நமஸ் காரம் செய்வதைப் பார்த்தானல்லவா ? அதைப் போலவே தானும் தலை வணங்கி நமஸ்காரம் செய்துவிட்டு அப்பால் ஓடிஞன்.

சந்திரநாத் தன் கைகளை விரித்து, அவனைப் பிடிக்கப் பார்த்தான். ஆனல், அதற்குள் அவன் ஓடிப் போய் விட்டான்.

சந்திரநாத்தின் மார்பில் கையை வைத்து, "உங்களுக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே! வியாதியாய்ப் படுத்திருந்தீர்களா, என்ன!" என்று சரயூ கேட்டாள்.

"இல்லை."

"பின் மனக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தீர்களா ?"

"உனக்கு என்ன தெரியும் ?" என்றான் சந்திரநாத்.

சரயூ இதற்குப் பதில் சொல்லாமல் பேச்சை மாற்றினாள்.

"நாழியாகிறது. வாருங்கள், ஸ்நானம் செய்யலாம்."

"வீட்டுக்குச் சொந்தக்காரர் எங்கே ?" என்று சந்திரநாத் கேட்டான்.

"அவர் இன்று பூஜை பண்ணுவதற்காக விசுவநாதர் ஆலயத்திற்குப் போயிருக்கிறார். சாயந்திரம் திரும்பி வருவார் என்று தோன்றுகிறது."

"நீ அவரை என்ன சொல்லிக் கூப்பிடுகிறாய் ?"

"எப்பொழுதும் 'தாத்தா' என்றுதான் கூப்பிடுவேன். அப்படியேதான் இப்பொழுதும் அழைக்கிறேன்."

சந்திரநாத் வேறு ஒரு கேள்வியும் கேட்கவில்லை.

சரயூ கேட்டாள்: "கூட இன்னும் யாரை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள் ?"

"வேலைக்காரன் ஹரியையும், மதுவையும் அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். அவர்கள் டாக் பங்களாவில் இருக்கிறார்கள்."

"ஒருவேளை அவர்களை இங்கே கூட்டிக்கொண்டு வருவதற்குத் தைரியம் இல்லை போலும்."

சந்திரநாத் இதற்குப் பதில் அளிக்கவில்லை.

சந்திரநாத் சாப்பிட உட்கார்ந்ததும், தன் முன் உள்ள பூரித் தட்டைக்கண்டு ஆச்சரியமடைந்தான். வெறுப்புடன் அதை அப்பால் நகர்த்தி வைத்துவிட்டு, " நீ என்னுடன் விளையாடுகிருயா, என்ன ?" என்று கேட்டான்.

" ஏன், சாப்பிடப் போவதில்லையா ?" என்று சரயூ கேட்டாள்.

சந்திரநாத் சரயூவின் முகத்தையே கொஞ்ச நேரம் பார்த்துவிட்டு, " நான் எப்பொழுதாவது மத்தியான வேளைக்குப் பூரி சாப்பிடுவது உண்டா ?" என்று கேட்டான்.

சரயூ மிகவும் துக்கமடைந்து, பதில் பேசாமல் இருந்தாள்.

" இன்றைக்குத்தான் முதல் முதலில் நீ எனக்குப் பரிமாறுகிருயா, என்ன ? நான் வழக்கமாக என்ன சாப்பிடுவேன் என்பதை நீ மறக்கவில்லை என்று நினைக்கிறேன் " என்ருன் சந்திரநாத்.

சரயூவின் கண்களிலிருந்து கண்ணீர் பலபலவென்று பொழிந்தது.

" சாதம் சாப்பிடுகிறீர்களா ? ஆனல்—"

" ஆனல் என்ன ? சாதம் ஆறிப் போய்விட்டதா ?"

" ஆறிப் போகவில்லை. நான் இங்கும் சாதம் சமைக்கிறேன்."

" வீட்டிலும்தான் சாதம் சமைத்துக்கொண்டிருந்தாய் !"

" ஆனல், நான் சமைத்த சாதத்தை நீங்கள் சாப்பிடுவீர்களா ?" என்று சரயூ நாக்குழறக் கேட்டாள்.

சந்திரநாத் தலையைக் குனிந்துகொண்டான். சரயூ தள்ளி வைக்கப்பட்டிருக்கிறாள். அவள் கையால் சாப்பிடக் கூடாது என்னும் ஞாபகம் அவனுக்கு இதுவரை வரவில்லை. சந்திரநாத் நெடுநேரம் பேசாமல் இருந்தான். பிறகு, மிகவும் மெதுவான குரலில், "என்ன சரயூ! இந்த மத்தியான வேளையில் என் கண்களில் கண்ணீரைப் பார்க்காவிட்டால் உனக்குத் திருப்தி ஏற்படாது போலிருக் கிறது!" என்றான்.

சரயூ தடாலென்று எழுந்து நின்று, "சரி, இதோ போய் கொண்டு வருகிறேன்" என்று சென்றாள்.

உள்ளே சென்று வெகு நேரம் அழுதாள். பிறகு கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ஜலத்தால் முகத்தைக் கழுவிக்கொண்டாள். ஆனால், கண்களிலிருந்து வந்து கொண்டிருந்த கண்ணீரை அடக்க முடியவில்லை. தாலத்தை எடுத்து வந்து புருஷன் முன் வைத்தாள். வெகு நாளைக்கு முன்னர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு எப்படிப் பரிமாறினாளோ, அதைப் போலவே இன்றும் செய்தாள். சந்திரநாத் சாப்பிட்டு முடிந்ததும் எச்சில் தாலத்தைக் கையில் எடுத்துக்கொண்டு இன்னொரு தடவை அழுவதற்காகச் சமையலறைக்குள் சென்றாள்.

மணி இரண்டாகிவிட்டது. சந்திரநாத்தின் மடியில் விசு சுகமாகப் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கிறான். அந்தச் சமயத்தில் சரயூ அங்கு வந்தாள்.

"வேலையெல்லாம் முடிந்துவிட்டதா?" என்று கேட்டான் சந்திரநாத்.

"வேலை ஒன்றும் இல்லை......ஆமாம். ஏன் இன்னும் தாத்தா வரவில்லை?"

இதற்குப் பிறகு சரயூ வீட்டு விஷயங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்தாள். ஊரில் உள்ள வீட்டின் ஒவ்வோர் அறை, ஒவ்வோர் சாமான், மாமா, மாமி, வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், குமாஸ்தாஜி, தோழி ஹரிபாலா இன்னும் அக்கம் பக்கத்தார் எல்லோரையும்பற்றி விசாரித்தாள். இந்த விஷயங்களைப்பற்றித் தெரிந்து கொள்வதால் அவளுக்கு என்ன லாபம், அல்லது இவற்றை எடுத்துச் சொல்வதில் சந்திரநாத்திற்கு எவ்வளவு கஷ்டமும் லஜ்ஜையும் உண்டாகும் என்ற அம்சத்தை இருவரும் யோசித்துப் பார்க்கவில்லை. சரயூ மிகவும் ஆனந்தமாகக் கேள்வி கேட்கிறாள். அதற்குச் சந்திரநாத் மிகவும் உற்சாகத்துடன் பதில் அளிக்கிறான். அவர்கள் இருவரும் பேசிக்கொண்டது, ஏதோ இரண்டு பேரும் மிகவும் ஆப்த நண்பர்கள் போலவும், வெகுநாள் பிரிந்து இருந்த பிறகு இன்றுதான் சந்தித்தது போலவும் காணப்பட்டது.

இருந்தாப் போலிருந்து சரயூ கேட்டாள். "நீங்கள் எங்கே கல்யாணம் செய்து கொண்டீர்கள் ?"

"மேற்கே" என்று பதில் அளித்தான் சந்திரநாத்.

"பெண் எப்படி இருக்கிறாள் ?"

"உன்னைப் போல் இருக்கிறாள்."

சரயூவின் மனம் ஏதோ சங்கடப்பட்டது போல் தோன்றியது. அடுத்த நிமிஷமே நிலை கொள்ளாமல் சரயூ மூர்ச்சையாய்க் கீழே விழுந்தாள். முகம் திடீரென்று வெளுத்தது.

சந்திரநாத் பயந்து போய், கட்டிலிலிருந்து கீழே இறங்கி, அவள் கையைப் பிடித்துத் தூக்க முயன்றான். ஆனால், சரயூ பிரக்ஞையற்றுக் கிடந்தாள். சந்திரநாத் அவள் பக்கத்தில் சென்று உட்கார்ந்து, அவள் தலையைத்

தன் மடியில் வைத்துக் கொண்டு, "சரயூ! சரயூ!" என்று புலம்பலானுன்.

சரயூ கண்ணைத் திறந்து, ஒரு கண நேரம் தன் புருஷனைப் பார்த்தாள். பிறகு திரும்பவும் கண்ணை மூடிக் கொண்டாள். அவள் உதடுகள் சிறிது அசைந்தன. மிகவும் மெதுவான குரலில் என்னமோ சொன்னுள். ஆனுல், என்ன சொன்னுள் என்பது தெரியவில்லை.

சந்திரநாத் மிகவும் பயந்து போய், தண்ணீர் கொண்டு வரும்படி கத்தினுன். வேலைக்கார ஸ்திரீ பக்கத்தில் இருந்தாள். அவள் ஓடிப் போய்த் தண்ணீர் கொணர்ந்தாள். ஆனுல், அவள் துளிக்கூடக் கலவரப் படவேயில்லை. "பாபுஜி! இன்னும் கொஞ்ச நாழியில் சரியாகப் போய்விடும். அம்மாவுக்கு அடிக்கடி இம்மாதிரி மயக்கம் வருவது உண்டு" என்ருள்.

சரயூவின் முகத்தின் மீது ஜலத்தைத் தெளித்து, விசிறியினுல் விசிறினுர்கள். விசு வந்து அவள் தலை மயிரைப் பிடித்து, "அம்மா" என்று கூப்பிட்டபோது தான் சரயூவுக்குப் பிரக்ஞை வந்தது. மிகவும் லஜ்ஜை யுடன், தலை 'முட்டாக்கை'ச் சரிப்படுத்திக்கொண்டு, எழுந்து உட்கார்ந்தாள். வேலைக்காரி தன் வேலையைப் பார்க்கச் சென்ருள்.

சந்திரநாத்தினுடைய முகம் பயத்தால் கலவர மடைந்திருந்தது. அதைப் பார்த்துச் சரயூ சிரித்தாள். மிகவும் மதுரமான குரலில், சிரித்துக் கொண்டே, "என்ன, பயந்து போய் விட்டீர்களா?" என்று கேட்டாள்.

சந்திரநாத்தின் கண்களினின்றும் கண்ணீர் பல பலவென்று பொழிந்தது. கண்ணீரைக் கையால் துடைத்து விட்டுக் கொண்டு, "காரியம் முடிந்து போய் விட்டதென்று நான் பயந்து போய்விட்டேன்" என்ருன்.

“ என்னுடைய தலை தங்களுடைய மடியில் இருந்தது. இந்த அபாக்யவதிக்கு அந்தப் பாக்யம் கிட்டிற்று” என்று சரயூ தன் மனதில் நினைத்துக்கொண்டாள். பிறகு வெளிப் படையாக, “ இந்த மாதிரி எனக்கு அடிக்கடி வருகிறது ” என்றாள்.

“ அதுதான் நான் பார்க்கிறேனே. முன்னெல்லாம் கிடையாது. இப்பொழுது ஏற்பட்டிருக்கிறாப்போல் இருக்கிறது” என்றான் சந்திரநாத்.

இப்படிச் சொல்லிவிட்டுச் சந்திரநாத் வெகு நேரம் பேசாமல் இருந்தான். பிறகு தன்னுடைய ஜேபியிலிருந்து துருப் பிடித்திருந்த ஒரு சாவிக் கொத்தை எடுத்து அதைச் சரயூவின் முந்தானையில் கட்டினான்.

“ இந்தா, உன்னுடைய சாவிக் கொத்து. என்னிடம் ஒப்புவித்து விட்டு போயிருந்தாய் ; அதை இன்று உன்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டேன். நீயே பார், இந்தச் சாவிகளை நான் எப்பொழுதாவது உபயோகப் படுத்தி யிருக்கிறேனா என்று. ”

தன்னுடைய சாவிக் கொத்து துருப் பிடித்து, அழுக் கடைந்திருந்ததைச் சரயூ கண்டாள்.

“ ஏன் இதை அவளிடம் கொடுக்கவில்லை?” என்று கேட்டாள்.

சந்திரநாத்தின் முகத்தில் புன்முறுவல் தோன்றிற்று. “ அவளுக்குத்தான் கொடுத்திருக்கிறேன், சரயூ!” என்றான்

சரயூவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கொஞ்ச நேரம் தன் புருஷன் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

“ நான் புதிய நாட்டுப் பெண்ணைப் பற்றிச் சொல் கிறேன். உங்களுக்கு இன்னொரு மனைவி இருக்கிறாளே, ஏன் அவளிடம் கொடுக்கவில்லை என்று கேட்டேன்.”

சந்திரநாத்தினுல் தன்னைச் சமாளிக்க முடியவில்லை. அவன் தன் இரு கைகளையும் விரித்து, சரயூவின் முகத்தைப் பற்றி, அவளை மார்போடு அணைத்துக் கொண்டான். "அவளுக்கேதான் கொடுத்திருக்கிறேன், சரயூ! எனக்கு இரண்டு மனைவிகள் இல்லை. ஒரே ஒரு மனைவிதான். அவள் ஒருபொழுதும் பழைய மனைவி யாவதில்லை. எப்பொழுதும் புதிய மனைவிதான். காசி விசுவநாதருடைய பிரசாதம்போல் எண்ணி நான் முன்பு அவளைக் காசியினின்றும் கூட்டிக்கொண்டு போனபோது அவள் எவ்வளவு புதுசாக இருந்தாளோ, அதேமாதிரிதான் இன்றும் இருக்கிருள். இன்றும் விசுவநாதருடைய பாதார விந்தங்களிலிருந்து எடுத்துக் கொண்டு போகத்தான் வந்திருக்கிறேன்" என்றுன்.

சாயந்திரம் விளக்கேற்றியதும், சரயூ விசுவை இடுப்பில் தூக்கிக்கொண்டு சந்திரநாத்திடம் வந்தாள். "தாத்தாவைப் பார்க்காமல் நீங்கள் எப்படிப் போவீர்கள்? இன்று ராத்திரி நீங்கள் இங்குதான் இருக்க வேண்டி யிருக்கும்" என்றுள்.

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது."

வெகுநேரமாக சரயூ ஒன்று சொல்ல விரும்பினுள். ஆனுல், லஜ்ஜையாயிருந்தது. அதோடு சமயமும் கிடைக்கவில்லை. "உங்களிடம் எதற்காக வெட்கம்... .." என்று ஆரம்பித்தாள்.

சந்திரநாத் சரயூவின் முகத்தைப் பார்த்துக்கொண்டே பேசாமல் நின்றுன்.

"உங்களுக்கு ஒரு கடிதம் எழுதலாம் என்று நான் நினைத்தேன்" என்றுள் சரயூ.

"ஏன் எழுதவில்லை? நான் வேண்டாமென்று சொல்லவில்லையே!"

சரயூ கொஞ்ச நேரம் ஏதோ யோசித்து, "எங்கே கோபித்துக் கொள்ளப் போகிறீர்களோ என்று பயமாயிருந்தது. சரி, நீங்கள் எப்பொழுது வருவீர்கள் ?"

" நீ எப்பொழுது சொல்கிருயோ, அப்பொழுது."

முதலில், சந்திரநாத் திரும்பவும் வருவான், தான் சொல்ல வேண்டியதை அப்பொழுது சொல்லிக் கொள்ளலாம் என்று சரயூ நினைத்தாள். பிறகு மனுஷ சரீரம் நிச்சயமில்லை. அவன் திரும்பி வருவதற்குள் தான் போனாலும் போய்விடலாம் என்று நினைத்து, இப்பொழுதே சொல்ல நிச்சயித்தாள்.

" உங்களிடத்தில் எனக்கு வெட்கம் இல்லை " என்று திரும்பவும் ஆரம்பித்தாள்.

" அதைத்தான் முன்னமேயே ஒரு தடவை சொன்னுயே !"

சரயூ கொஞ்ச நேரம் பேசாமல் இருந்துவிட்டு, "எனக்கு உயிரை வைத்துக் கொண்டிருக்க இச்சையில்லை. இம்மாதிரி வாழ்வது எனக்குப் பிடிக்கவில்லை" என்ருள்.

சரயூவின் முகம் வெளுத்துக் காணப்பட்டது. சந்திரநாத் பயந்துபோய், "உனக்கு உடம்புக்கு ஏதாவது வியாதியா, என்ன ?" என்று கேட்டான்.

சரயூ மெள்ள சிரித்துக் கொண்டே, "நான் என்னத்தைக் கண்டேன் ? அடிக்கடி மார்வலி உண்டாகிறது " என்ருள்.

"இந்த மயக்கம் ?"

" அது ஒன்றும் இல்லை."

"எது நடக்க வேண்டுமோ, அது நடந்துவிட்டது. இனிமேல் நான் என் உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் கொடுத்து உன்னைக் காப்பாற்றுவேன்" என்று சந்திரநாத் மனத்துக்குள் நினைத்துக் கொண்டான்.

" நான் உங்களிடம் ஒரு பிச்சை கேட்கிறேன், கொடுப்பீர்களா ?" என்று சரயூ ஆரம்பித்தாள்.

" நான் எனக்காக ஒன்றும் கேட்கவில்லை. எப்பொழுது நான் இறந்துவிட்ட செய்தியைக் கேள்விப்படுகிறீர்களோ, அப்பொழுது...... " — இந்தச் சமயத்தில் சரயூ விசுவை சந்திரநாத்தின் பாதத்தில் உட்கார வைத்து, "அப்பொழுது இங்கு ஒரு தடவை வந்து குழந்தையை அழைத்துக் கொண்டு போக வேண்டும் " என்ருள்.

சந்திரநாத் மிகுந்த வாஞ்சையுடன் விசுவைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு முத்தமிட்டான்.

அப்பொழுது, " அப்பா, விசு !" என்று கைலாஸ் சந்திரரின் குரல் கேட்டது.

" தாத்தா " என்று கத்திக் கொண்டே விசு தகப்பனுரின் இடுப்பிலிருந்து கீழே இறங்கினுன்.

சரயூ எழுந்து நின்று, " அவர் வந்துவிட்டார் " என்ருள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் கைலாஸ் சந்திரர் விசுவை இடுப்பில் தூக்கிக்கொண்டு தாழ்வாரத்திற்கு வந்து நின்ருர். சந்திரநாத்தும் அங்கே வந்தான். இதற்கு முன் கைலாஸ் சந்திரர், சந்திரநாத்தைப் பார்த்ததில்லை. பையன் இரண்டு பேருக்கும் பரிச்சயம் செய்து வைத்தான். சந்திரநாத்தைச் சுட்டிக் காட்டி, " அப்பா" என்று சொன்னுன்.

சந்திரநாத் கைலாஸ் சந்திரரை நமஸ்கரித்தான். கைலாஸ் சந்திரர் கையைத் தூக்கி அவனை ஆசீர்வதித்து, " உட்கார் அப்பா, உட்கார் " என்ருர்.

# பதினெட்டாம் அத்தியாயம்

“ நாளைக்கு இவர்களை என்னுடன் அழைத்துச் செல்லலாம் என்று பார்க்கிறேன்” என்று எப்பொழுது சந்திரநாத் கைலாஸ் சந்திரரிடம் சொன்னானோ, அப்பொழுது அவருக்குத் தம்முடைய இருதயத்தில் சேர்ந்தாப்போல் நூறு பீரங்கிகள் வெடித்தது போல் பட்டது. அவர் என்ன பதில் அளித்தார் என்பது அவர் காதுக்கே எட்டவில்லை. ஆனால், சந்திரநாத்திற்கு மட்டும் கேட்டது. யாரோ வெகு தூரத்திலிருந்து அழுகைக் குரலில், “இனிமேல் இதைவிட வேறு என்ன வேண்டும்?” என்று சொன்னது போல் காதில் விழுந்தது.

இது விஷயம் சரயூவுக்கும் துக்கமளித்தது. அவளுடைய இரு கண்களிலிருந்தும் கண்ணீர் வழியத் தொடங்கிற்று. அவள் தன் புருஷனுடைய பாதத்தில் தலை வைத்து நமஸ்கரித்து, “தங்களுடைய பாத தூளியை இங்கு விட்டுச் செல்லுங்கள். இந்தத் துர்ப்பாக்யவதி இங்கேயே இருக்கட்டும். கூட அழைத்துச் செல்ல வேண்டாம்” என்றாள்.

“ ஏன் ?” என்று கேட்டான் சந்திரநாத்.

சரயூவினால் ஒரு பதிலும் அளிக்க முடியவில்லை; அழுதாள். அவளுடைய கண்ணீர் மல்கிய கண்களுக்கு முன்னால் கைலாஸ் சந்திரரின் பரிதாபமான முகம் தாண்டவமாடியது.

சந்திரநாத் கொஞ்ச நேரம் பேசாமல் இருந்தான். பிறகு, “ நான் உன்னுடைய கணவன். நான் உன்னை அழைத்துக் கொண்டு போகவேண்டுமென்று விரும்பினால், உனக்கு இஷ்டமில்லாவிட்டாலும், நீ மறுக்க முடியாது. விசுவை விட்டு என்னால் இருக்க முடியாது” என்றான். தான் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்று சரயூ அறிந்தாள்.

அடுத்த நாள் பொழுது விடிந்ததும், தினசரி வழக்கப்படி, கைலாஸ் சந்திரர் விசுவைத் தன் இடுப்பில் தூக்கிக் கொண்டு, சதுரங்க மூட்டையைக் கையிலேந்தி, சம்பு மிஸ்ரர் வீட்டையடைந்தார். சம்பு மிஸ்ரரைக் கூவி யழைத்து, "மிசிர்ஜி! இன்று எனக்கு மிகவும் சந்தோஷ கரமான நாளாகும். இன்று விசு அவனுடைய வீட்டுக்குத் திரும்பிப் போகப் போகிருன். இப்பொழுது விசு பெரிய வனுகப் போய்விட்டான் அல்லவா? அதனுல் சின்ன வீட்டில் அவனை வைத்திருக்க நான் பிரியப்படவில்லை" என்ருர்.

இதைக் கேட்ட மிசிர்ஜிக்கு மிக்க மகிழ்ச்சி உண்டா யிற்று.

கைலாஸ் சந்திரர் சதுரங்க அட்டையைக் கீழே பரப்பி, அதன் மீது காய்களை அடுக்கினுர். "வாரும், கொஞ்சம் என் எதிரே உட்காரும். இன்றைக்கு உம்மை இரண்டு ஆட்டம் தோற்கடிக்கப் போகிறேன்" என்ருர்.

ஆனுல், ஆட்டம் ஆரம்பித்ததும், கைலாஸ் சந்திரரின் காய்கள் ஒவ்வொன்ருக வெட்டுப்பட ஆரம்பித்தன. யானையை நகர்த்துவதற்குப் பதில் ஒட்டகத்தை நகர்த்தினுர். ஒட்டகத்தை நகர்த்துவதற்குப் பதில் யானையை நகர்த்தினுர். அவருடைய ஆட்டம் ஒரே குழப்பமாயிருந்தது. மிசிர்ஜி கூட, "உம்முடைய மனம் இங்கில்லை. அதுதான் உம் ஆட்டம் தப்பாகப் போய்க் கொண்டிருக்கிறது" என்று சொன்னுர்.

கைலாஸ் சந்திரர் முதல் ஆட்டம் தோற்றுப்போன பிறகு இரண்டாவது ஆட்டமும் தோற்ருர். கடைசியில் ஆட்டம் முடிந்ததும், சதுரங்கக் காய்களை மூட்டை கட்டினுர். ஆனுல், சிவப்பு மந்திரியை மூட்டையில் சேர்க்க

வில்லே. அதை விசுவின் கையில் கொடுத்து, "இந்தாப்பா. இதை நீயே வைத்துக்கொள். இதை நான் உனக்குக் கொடுக்கிறேன்" என்று கூறினார். பிறகு தாம் வழியில் சந்தித்த எல்லாரிடமும் இந்தச் சுப சமாசாரத்தைத் தெரிவித்தார்.

கைலாஸ் சந்திரர் இன்று எல்லாக் காரியங்களிலும் மிகுந்த உற்சாகத்தைக் காட்டினார். ஆனால், சதுரங்க ஆட்டத்தில் 'இருந்தது போல் எல்லாக் காரியங்களிலும் மறதி தென்பட்டது. நேரம் ஆக ஆக, அவருடைய மறதி அதிகமாகிக் கொண்டு வந்தது. இதைப் பார்த்து, சரயூ தன் கண்களிலிருந்து வந்த கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டாள். கிழவருடைய முகத்தில் காணப்பட்ட உற்சாகக் குறி மட்டும் குறையவில்லே சரயூ அவரைத் தனியாகக் கூப்பிட்டு, அவர் பாதங்களில் விழுந்து நமஸ் கரித்து அழுதபோதும்கூட, அவர் தம் அழுகையை அடக்கி, சிரித்துக்கொண்டே அவளே ஆசீர்வதித்தார். "இல்லே, அம்மா. நீ அழக்கூடாது. இந்தக் கிழவனுடைய ஆசீர்வாதத்தால் நீ மகராஜியாய் இருப்பாய். நீ திரும்பவும் காசி வந்தால், இந்தக் குடிசையை மறந்து, வேறு எங்கும் போய்விடாதே" என்றார்.

சரயூ இன்னும் அதிகமாக அழ ஆரம்பித்தாள். கவனிப்பாரற்று, பிச்சைக்காரியைப்போல் அவள் காசிக்கு வந்த அந்தத் தினம் ஞாபகத்துக்கு வந்தது.

"என்னைப் பிரிந்து தாங்கள் எப்படி இருக்கப் போகிறீர்களோ!" என்று வருத்தப்பட்டாள் சரயூ.

ஆனால், கைலாஸ் சந்திரர், "அம்மா! நான் இன்னும் எத்தனை நாள் இருக்கப் போகிறேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். பிறகு

தம் மனதிற்குள்ளாகவே, "சீக்கிரமே நமக்கு அழைப்பு வரப் போகிறது" என்று சொல்லிக்கொண்டார்

சரயூ கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, "எங்களுக்குத் தயை, தாக்ஷண்யம் ஒன்றும் கிடையாது" என்று ஆரம்பித்தாள்.

"சிவ, சிவ! அப்படி யெல்லாம் சொல்லாதே அம்மா! உன்னை எனக்கு நன்ருகத் தெரியும்" என்ருர் கிழவர்.

ராத்திரி பத்து மணிக்கு எல்லாரும் ஸ்டேஷனுக்குச் சென்ருர்கள். வண்டி வரும் நேரம் மெள்ள மெள்ள நெருங்கிக் கொண்டிருந்தது.

விசு தூங்கிவிட்டான். அப்பொழுதுகூட அந்தச் சிகப்பு மந்திரியை அவன் மார்போடு தழுவிக் கொண்டிருந்தான். கிழவர் அவனை ஆட்டியும் அசக்கியும் எழுப்பினுர். தூங்கி எழுந்ததும் விசு அழ ஆரம்பித்தான். ஆனுல், கிழவர் தம் முகத்தை விசுவின் முகத்துக்குப் பக்கமாகக் கொண்டு போய், "அப்பா விசு!" என்றதும், அவன் சிரித்துவிட்டு, "தாத்தா" என்ருன்.

"அடே என் கண்ணே! நீ எங்கே போகப் போகிருய்?" என்ருர் கிழவர்.

"நான் போய் வரேன்" என்ருன் விசு பிறகு தன் கையிலுள்ள சிகப்பு மந்திரியைக் காண்பித்து, "மந்திரி!" என்ருன்.

"ஆமாண்டா, கண்ணே! மந்திரியை எங்கேயும் தொலைத்து விடக்கூடாது" என்ருர் கைலாஸ் சந்திரர்.

யானைத் தந்தத்திஞல் செய்யப்பட்டிருந்த அந்தச் சிகப்பு மந்திரியைத் தொலைத்துவிடக்கூடாது என்று கைலாஸ் சந்திரர் விசுவை அனேக தடவை எச்சரித்தார். விசுவும் தலையை அசைத்து, "இல்லே, தாத்தா" என்ருன்.

வண்டி வந்ததும், கைலாஸ் சந்திரரின் பாத தூளியைச் சரயூ தன் நெற்றியில் இட்டுக்கொண்டு வண்டியில் ஏறினாள். கிழவரின் கடைசி ஆசீர்வாதம் நடுங்கிக் கொண்டிருந்த உதடுகளிலிருந்து வெளி வரவில்லை ; உள்ளேயே தங்கிவிட்டது.

வண்டி புறப்படுவதற்கு இன்னும் அதிக நாழியில்லை என்று தெரிந்ததும், கிழவர் விசுவைச் சந்திரநாத்திடம் விட்டு, " கண்ணே விசு !" என்று அழைத்தார்.

" தாத்தா !"

" மந்திரி !"

விசு மந்திரியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, " மந்திரி !" என்றான்.

" தொலைக்கக் கூடாது ? "

" இல்லே, தாத்தா ! "

கிழவரின் வறண்ட கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

வண்டி புறப்பட ஆரம்பித்ததும், ஜன்னலில் முகத்தை வைத்து, " சரி அம்மா, நான் வருகிறேன் " என்று சரயூவிடம் சொல்லிவிட்டுத் திரும்பவும் ஒரு தடவை, " கண்ணே விசு " என்று உரக்கக் கூப்பிட்டார்.

ஆனால், வண்டியும் ஜனங்களும் போட்ட இரைச்சலில் அது விசுவின் காதில் விழவில்லை. வண்டியின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்த மட்டும், அவர் நின்ற இடத்தி லிருந்து ஓர் அடி கூட எடுத்து வைக்காமல் நின்றார். பிறகு, மெள்ள மெள்ள வீடு திரும்பினார்.

# பத்தொன்பதாம் அத்தியாயம்

சந்திரநாத்திற்கு இருந்த கொஞ்சம் நஞ்சம் பயமும் சித்தப்பா மணிசங்கரைப் பார்த்துப் பேசியதும் போய் விட்டது. "அப்பா! பாபத்துக்கல்லவா பிராயச்சித்தம்? யார் பாவம் செய்யவில்லையோ அவர்கள் பிராயச்சித்தம் செய்ய வேண்டிய அவசியம் என்ன? நாட்டுப்பெண் ஒரு பாவமும் அறியாதவள். ஆகவே, பிராயச்சித்தம், பிராயச் சித்தம் என்று சொல்லி, அவளை அவமானப்படுத்தாதே" என்றார் மணி சங்கர்.

மணி சங்கரின் வாயிலிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகள் புறப்பட்டது சந்திரநாத்திற்கு வியப்பை யளித்தது. மணி சங்கர் திரும்பவும் பேசலுற்றார்.

"நானும் எத்தனையோ வருஷங்களாகப் பார்த்துக் கொண்டே வருகிறேன். எல்லாம் வீட்டுக்கு வீடு வாசற் படியாய்த்தான் இருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு தோஷம், ஒரு குற்றம், ஓர் அவமானம் இருந்து கொண்டு தானிருக்கிறது. மனுஷ்யர்களுடைய நீண்ட வாழ்க்கையில் எவ்வளவோ நடக்கவேண்டியிருக்கிறது. இந்த நீண்ட வழியில் ஓர் இடத்தில் சேறு, மற்றோர் இடத்தில் வழுக்கல், ஒரு புறம் மேடு, இன்னொரு இடத்தில் பள்ளம் இப்படி இருக்கிறது. இதனால்தான் அவ்வளவு ஜனங்கள் வழுக்கி விழுந்து விடுகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களைப் பற்றி ஒன்றும் சொல்வதில்லை, பிறரைப் பற்றிப் பேச ஆரம்பித்து விடுகிறார்கள். தங்களுடைய குற்றங்களை மறைப்பதற்காகப் பிறருடைய தோஷம், குற்றங்களைப் பற்றி இரைந்து பேசுகிறார்கள். அந்தச் சத்தத்தில் தங்களுடைய குற்றங்கள் மறைந்து போய்விடும் என்று நினைக்கிறார்கள்."

சந்திரநாத் ஒன்றும் பேசாமல் அவர் சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டே வந்தான். கொஞ்ச நேரம் பேசாமல் இருந்துவிட்டு, மணி சங்கர் திரும்பவும் பேச ஆரம்பித்தார்.

" இன்னொரு புதிய விஷயமும் தெரிந்து கொண்டேன். நாம் எப்படியாவது நினைத்துக்கொள்ளலாம்—அன்னியரை நம் சொந்த மனிதர் என்று கருதலாம், அல்லது நம் சொந்த மனிதர்களை அன்னியர் என்று கருதலாம். ஆனால், நமக்குச் சொந்தமானவர்களைப் பிறர் அசலார் என்று கூற முடியுமா ? இத்தனை நாள் குருடனாய் இருந்தேன். இன்று தான் விசு என் கண்களைத் திறந்து வைத்தான். அவன் செய்த புண்யத்தினால் எல்லாம் பரிசுத்தமாகிவிட்டது. இன்று துவாதசி. கிராமவாசிகள் எல்லாரையும் பௌர்ணமியன்று இங்கே வந்து சாப்பிடும்படி அழைத்திருக்கிறேன். முந்தி அண்ணா இருந்தார். எல்லாக் காரியங்களையும் அவரே கவனித்துக்கொண்டார். என்னாலேயோ ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகையால் விசுவுக்குத் திரும்பவும் அன்னப் பிராசனம் செய்து வைக்கலாம் என்று நினைக்கிறேன்."

சந்திரநாத் கொஞ்சம் யோசித்து, " ஆனால் சமூகம் ?" என்று கேட்டான்.

மணிசங்கர் சிரித்துக்கொண்டே, " நீயும் நானும்தான் சமூகம். யாரிடம் பணம் இருக்கிறதோ, அவன்தான் சமூகத் தலைவன். நான் இஷ்டப்பட்டால் உன்னை ஜாதியிலிருந்து விலக்கலாம் ; நீ இஷ்டப்பட்டால் என்னை ஜாதியிலிருந்து விலக்கலாம். சமூகத்தைப் பற்றி நீ ஒன்றும் கவலைப்படாதே. அதோடு இதுவரை உன்னிடம் சொல்லாத ஒரு விஷயத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். உன்னிடம் சொல்வதால் ஒரு ஹானியும்

விளையப் போவதில்லை. ராகால் தாஸ் பட்டாசார்யாவைப் பற்றி ஞாபகம் இருக்கிறதா ?'' என்று கேட்டார்.

"இருக்கிறது. ஹரிதயால் எழுதிய கடிதத்திலிருந்து அவனைப் பற்றித் தெரிந்து கொண்டேன்."

"நம்முடைய குடும்பத்தில் ஏதாவது தோஷம் உண்டானால் அதை ருஜுப்படுத்துவதற்கு அவன் ஒருவன்தான் இருந்தான். ஆனால், அவனால் இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது. நான் அவனைச் சிறைக்கு அனுப்பினேன். அவன் சிறையிலிருந்து விடுதலையாகிச் சில நாட்கள் ஆகியும் அவன் எங்கே சென்றான் என்று தெரியவில்லை. ஆனால், இனிமேல் இந்த இடத்தின் பெயரைக் கூட அவன் ஸ்மரிக்கமாட்டான் என்பது நிச்சயம்."

பிறகு அவர் ராகால் தாஸைப் பற்றி முதலிலிருந்து கடைசிவரை சொன்னார். இதைக் கேட்டபோது சந்திர நாத்தின் கண்களில் கண்ணீர் மல்கியது.

அதற்குப் பிறகு, பௌர்ணமியன்று கிராம வாசிகளுக்குச் சாப்பாடு போடப்பட்டது. கிராம வாசிகள் யாரும், ஒன்றும் சொல்லவில்லை. மணிசங்கரின் நடத்தையைப் பார்த்து, முன்பு ஒரு காரணமுமின்றி அபவாதம் நேர்ந்திருக்கிறது என்று நினைத்தார்கள்.

ஹரிகாலி தனியாகச் சமைத்துச் சாப்பிட்டாள். இனிமேல் அவர்கள் இந்தக் கிராமத்தில் வசிக்க விரும்ப வில்லை. தங்கள் சொந்த வீடு திரும்ப எண்ணினார்கள். "பிராணன் போனாலும் சம்மதம், ஆனால் நான் என் ஜாதியை விட முடியாது" என்றாள் ஹரிகாலி.

அதைக் கேட்டுச் சந்திரநாத் அவர்களுக்கு மாதம் நூறு ரூபாய் அனுப்பச் சம்மதித்தான்.

உற்சவம் முடிந்து, நாட்டியம், பாட்டு எலலாம் முடிந்தபோது ராத்திரி ரொம்ப நாழியாகிவிட்டது. அப்பொழுது சந்திரநாத் தன்னுடைய அறைக்குத் திரும்பியதும் அங்கு ராஜ ராஜேஸ்வரி மாதிரி அலங்காரம் செய்து கொண்டு மடியில் விசு தூங்க, சரயூ கணவனுக்காக விழித்துக் கொண்டிருந்தாள்.

அன்று பௌர்ணமி!

"என்ன, அலங்காரம் பலமாயிருக்கே!" என்ருன் சந்திரநாத்.

சரயூ சிரித்துக்கொண்டே, "தோழி என்னை இன்று விடமாட்டேன் என்று சொல்லி அலங்காரம் செய்து விட்டாள்" என்ருள்.

## இருபதாம் அத்தியாயம்

அன்று ராத்திரி கைலாஸ் சந்திரர் மெள்ள மெள்ள அடிமேலடி வைத்து வீடு திரும்பினுர். துளசி மடத்தில் இன்னும் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. இருந்தும் ஒரே பயங்கர அந்தகாரமே தென்பட்டது. விளக்கினுடைய ஆயுளும் இதோ முடியப் போகிறது; அது அணையப் போகிறது. சரயூ ஏற்றி வைத்து விட்டுப்போன விளக்கு அது.

கைலாஸ்சந்திரர் வந்து கட்டிலில் படுத்தார். கண்ணைச் சற்று மூடத் தொடங்கினுர். ஆனல், அடிக்கடி அவரை யாரோ, "தாத்தா, தாத்தா" என்று கூப்பிடுவது போல் கேட்டது.

காலையில் கைலாஸ் சந்திரர் படுக்கைவிட்டு எழுந்து வெளியே வந்ததுமே, பழைய வழக்கப்படி, 'விசு!' என்று

கூப்பிட்டார். விசு இல்லே, போய் விட்டான் என்பது பின்னுல்தான் ஞாபகம் வந்தது.

கையில் சதுரங்க மூட்டையை எடுத்துக்கொண்டு சம்பு மிஸ்ரர் வீட்டுக்குச் சென்ருர். " மிசிர்ஜி, நம்ப விசு ஊருக்குப் போய்விட்டான் " என்ருர்.

விசுவை எல்லாருமே நேசித்தார்கள். ஆகவே சம்பு மிஸ்ரரும் வருத்தப்பட்டார். சதுரங்கம் கீழே பரப்பப்பட்டு, அதன்மீது காய்கள் வைக்கப்பட்டபோது, " சித்தப்பா, உம்முடைய சிகப்பு மந்திரி எங்கே ?" என்று சம்பு மிஸ்ரர் கேட்டார்.

கைலாஸ் சந்திரர் நீண்ட பெருமூச்சு விட்டு, " அதை விசு எடுத்துக்கொண்டு போய்விட்டான். அந்தச் சிகப்பு மந்திரியின்மீது அவனுக்கு ரொம்பப் பிரியம். சின்னப் பையனேல்லியோ, நான் என்ன சொல்லியும் கேட்க வில்லே " என்ருர்.

சிகப்பு மந்திரியைத் தாமே விசுவுக்குக் கொடுத்ததாகச் சொல்லிக்கொள்ள, கைலாஸ் சந்திரருக்கு வெட்கமா யிருந்தது.

" அப்படியாளுல் இன்னொரு காய் எடுப்போமா ?" என்று கேட்டார் சம்பு மிஸ்ரர்.

" ஊம், எடும்."

ஆட்டத்தில் கைலாஸ் சந்திரர் தோற்றுவிட்டார். சம்பு மிஸ்ரர் இதுவரை எத்தனையோ நாட்கள் அவருடன் சதுரங்கம் விளையாடியிருக்கிருர். ஆளுல், அவரை எப் பொழுதும் தோற்கடிக்க முடிந்ததில்லை. " சித்தப்பா ! உம்முடைய அறிவு அனைத்தையும் விசு எடுத்துக்கொண்டு போய்விட்டான் போலிருக்கிறது " என்ருர் சம்பு மிஸ்ரர்.

சித்தப்பா மெள்ளச் சிரித்தார். " வா, அப்பா ! இன்னொரு ஆட்டம் ஆடுவோம்."

" சரி."

ஆட்டத்தில் தம் ராஜாவைக் கட்ட விட்டுவிட்டு, கைலாஸ் சந்திரர், " விசு " என்று கூவினர்.

சம்பு மிஸ்ரர் சிரித்துக்கொண்டே, " உம்முடைய ராஜாதான் கட்டுப்பட்டுவிட்டார். விசு எங்கே இருக்கிருன் !" என்று கேட்டார்.

இரண்டு பேரும் சிரித்தார்கள்.

" இதோ பாரும் சித்தப்பா ! உம்முடைய ஆள் இரண்டு பேர் வெட்டுப்பட்டு விட்டார்கள்."

கைலாஸ் சந்திரர் பயந்து போய், " வாடா, என் கண்ணே, வாடா !" என்று அழைக்கலானர்.

யார் வரவையோ எதிர்பார்ப்பதுபோல் அவர் சற்று நேரம் உட்கார்ந்திருந்தார். ஒரு கோமளமான சிறு சரீரம் தன் முதுகின்மீது விழவேண்டும் என்று அவருக்கு இருந்தது. அவர் தாமதத்தைப் பார்த்து சம்பு மிஸ்ரர், " உம்முடைய காய்களை இனிமேல் காப்பாற்ற முடியாது " என்ருர். கைலாஸ் சந்திரர் திடுக்கிட்டார். " அடடே ! இரண்டு காய்கள் போய்விட்டனவே !" என்ருர்.

இதற்குப் பிறகு ஆட்டம் முடிந்தது. மிசிர்ஜீ கெலித்தார். இருந்தும் அவருக்குச் சந்தோஷம் உண்டாக வில்லை. சதுரங்கக் காய்களை அப்புறப்படுத்தி விட்டு, " நாளைக்கு ஆடுவோம். இன்று உமக்கு உடம்பு சரியா யில்லை. மனதும் ஆட்டத்தில் இல்லை " என்ருர்.

கைலாஸ் சந்திரர் வீடு திரும்பும்பொழுது மணி பன்னிரண்டாகிவிட்டது. " விசுதான் வீட்டில் இல்லை, பின் அவசரமாய்ப் போவானேன் ?" என்று நினைத்தார்.

வீட்டுக்கு வந்து பார்த்தார். வேலைக்காரப் பெண் சமையலறையில் தனியாக உட்கார்ந்து, சமையல் சாமான்

களைத் தயார் செய்து கொண்டிருந்தாள். இன்று, அவர் பரிமாறிக் கொள்ளவேண்டும். தனியாக தாம் மட்டும் உட்கார்ந்து சாப்பிடவேண்டும். இன்று இஷ்டப்படி சமைக்கலாம். ஒன்றும் அவசரம் கிடையாது ; யாரும் கேட்பார் இல்லை ; விசுவினுடைய குறும்புத்தனத்தைக் கண்டு பயப்படவேண்டிய அவசியமும் இல்லை. மிகவும் சுதந்திரமாக இருக்கலாம். ஆனால், கைலாஸ் சந்திரருக்கு இதெல்லாம் ஒன்றும் பிடிக்கவில்லை. சமையல் அறைக்குள் சென்று பார்த்தார். ஒரு பிடி அரிசி, இரண்டு மூன்று உருளைக் கிழங்கு, கொஞ்சம் பருப்பு—இவைதான் இருந்தன. அவருடைய கண்ணில் ஜலம் தளும்பிற்று. இரண்டு வருஷங்களுக்கு முந்தைய விஷயங்கள் ஞாபகத்துக்கு வந்தன. அப்பொழுதும், இன்றைக்குப் போலவே, தாமே சமைத்துச் சாப்பிடவேண்டியிருந்தது. இதே வேலைக்காரி சமையலுக்கு வேண்டிய சாமான்களைத் தயார்செய்து கொடுத்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது விசு வரவும் இல்லை போகவும் இல்லை.

பலாமரத்தின் அடியில் விசுவினுடைய விளையாட்டு வீடு இன்னும் இருந்தது. உடைந்துபோன இரண்டு பொம்மைகள், உடைந்துபோன ஒரு அரையணாப் புல்லாங்குழல் முதலியவை அங்கே கிடந்தன. சிறு பிள்ளைகளைப் போல் கைலாஸ் சந்திரர் அவற்றைப் பொறுக்கி எடுத்துத் தம் அறைக்குள் கொண்டுபோய் வைத்தார்.

கைலாஸ் சந்திரர் முன்போல் தினந்தோறும் பன்னிரண்டு மணிக்கு கங்கா பாண்டே வீட்டுக்குச் சதுரங்கம் விளையாடச் செல்ல ஆரம்பித்தார். சாயந்திரத்துக்கு மேல் முகுந்த் கோஷின் வீட்டில் முன்போல் கூட்டம் சேர ஆரம்பித்தது. ஆனால், முன் எவ்வளவு கெட்டிக்காரத்தனமாக ஆடினரோ, அது இப்பொழுது

இல்லை. முன் கையைப் பிடித்து இவர் யாருக்கு விளை யாடச் சொல்லிக் கொடுத்தாரோ அவர்கள் இப்பொழுது இவரிடம் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்ட ஆரம்பித்தனர்.

கைலாஸ் சந்திரருக்கு முந்தி சதுரங்கத்தில் இருந்த சாமர்த்தியம் இப்பொழுது காணோம்! அவருக்கு முன்பு இருந்த கர்வம் கூட மறைந்து இப்பொழுது லஜ்ஜை யாக மாறிவிட்டது.

வீட்டிலும் கொஞ்சம் கொஞ்சமாகக் குழப்பம் ஏற்பட ஆரம்பித்தது. வேலைக்காரி அவரைக் கடிந்து கொள்ள ஆரம்பித்தாள். இரண்டு மூன்று தடவை அவர் தம் கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கொள்வதைப் பார்த்து விட்டாள்! "பாபுஜி! வர வரத் தாங்கள் சாப்பிடுவதே கிடையாது. கொஞ்சம் கண்ணாடியை எடுத்து, ஒரு முறை தங்கள் முகத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்பாள்.

இதற்குக் கைலாஸ் சந்திரர் சிரித்துக்கொண்டே, "சமையல் கிமையல் எல்லாம் மறந்து போய்விட்டது. அடுப்பண்டை போவதற்கே முடிகிறதில்லை" என்பார்.

வேலைக்காரி வெகு நாளாக இங்கே இருப்பவளாத லால், அவரை எப்படியோ ஒரு பிடி அரிசி சமைக்கும்படி வற்புறுத்திவிடுவாள்.

இந்தப் பிரகாரம் ஒரு மாதம் கழிந்தது.

அதற்குப் பிறகு ஐந்தாறு நாட்கள் யாரும் கைலாஸ் சந்திரரைப் பார்க்கவில்லை. எல்லாருக்கும் முன்னால் சம்பு மிஸ்ரருக்கு இது விஷயம் மனதில் பட்டது. அவர் கைலாஸ் சந்திரரைப் பார்த்துப் போவதற்காக வந்தார். வந்து, "கைலாஸ் பாபு!" என்று கூப்பிட்டார்.

"பாபுஜிக்கு ஜ்வரம்" என்றாள் வேலைக்காரி.

மிசிர்ஜி வீட்டுக்குள் சென்று, கட்டில்பக்கத்தில் போய் உட்கார்ந்து, "என்ன பாபு! உங்களுக்கு ஜ்வரமா வந்திருக்கு ?" என்று கேட்டார்.

"ஆமாம், மிசிர்ஜி! எனக்கு அழைப்பு வந்துவிட்டது. அதுதான் மெள்ள மெள்ளச் சென்றுகொண்டிருக்கிறேன்" என்று பதில் அளித்தார் கைலாஸ் சந்திரர் சிரித்துக் கொண்டே.

"ராம்! ராம்! என்ன இப்படிச் சொல்லுகிறீர்? இன்னும் இரண்டு மூன்று நாட்களில் உடம்பு சொஸ்தமாகிவிடும்" என்றார் மிசிர்ஜி.

"இப்பொழுது என்ன சொஸ்தமாகிற வயசா? எல்லாம் போக வேண்டியதுதானே!"

"வைத்தியருக்குச் சொல்லி அனுப்பித்தீர்களா?"

கைலாஸ் சந்திரர் சிரித்துக்கொண்டே, "இந்த ஐம்பத்தெட்டாவது வயதில் வைத்தியர் வந்து என்ன செய்யப்போகிறார்?" என்று கேட்டார்.

"ஐம்பத்தெட்டாவது வயது ஒரு வயதா? இன்னும் ஐம்பத்தெட்டு வருஷம் ஜனங்கள் வசிக்கிறார்களே!"

கைலாஸ் சந்திரர் இதற்கு ஒருபதிலும் அளிக்கவில்லை. திடீரென்று, "மிசிர்ஜி, நம்ப விசு ஒரு கடிதம் எழுதியிருக்கிறான்" என்று சொல்லிவிட்டு, வேலைக்காரியைக் கூப்பிட்டு, "அம்மா! கொஞ்சம் ஜன்னலைத் திற! இந்தக் கடிதத்தை மிசிர்ஜிக்கு வாசித்துக் காண்பிக்கணும்" என்றார். பிறகு தலையணைக்கு அடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து, மிகவும் சிரமத்துடன் முதலிலிருந்து கடைசிவரை படித்து முடித்தார். ஹிந்துஸ்தானிக்காரரான மிசிர்ஜிக்கு அது சில இடங்களில் புரிந்தது, சில இடங்களில் புரியவில்லை.

ராத்திரி சம்பு மிஸ்ரர் வைத்தியரை அழைத்துக் கொண்டு வந்தார். வைத்தியர் வங்காளக்காரர் ; கைலாஸ் சந்திரரை வெகு காலமாக அறிந்தவர். வைத்தியர் கேட்ட இரண்டு மூன்று கேள்விகளுக்குப் பதில் அளித்துவிட்டு, கைலாஸ் சந்திரர், " வைத்தியரே ! நம்ப பையன் கடிதம் எழுதியிருக்கிருன். வாசிக்கிறேன், சற்றுக் கேளுங்கள் " என்று ஆரம்பித்தார்.

கைலாஸ் சந்திரரின் பையனைப் பற்றி வைத்தியருக்கு ஒன்றும் தெரியாது. ஆகவே, " யாருடைய கடிதம் ?" என்று கேட்டார்.

" நம்ப பையன் விசு ! (வேலைக்காரியைப் பார்த்து) அம்மா, கொஞ்சம் விளக்கை இப்படிக் கொண்டு வா !"

விளக்கு வெளிச்சத்தில் அவர் கடிதம் முழுவதையும் படித்து முடித்தார். வைத்தியர் தாம் வாசிப்பதைக் கவனிக்கிருரா, இல்லையா என்பதை அவர் துளிக்கூடக் கவனிக்கவில்லை. அது சரயூவினுல் எழுதப்பட்ட கடிதமாளுலும் கைலாஸ் சந்திரர் அதை விசுவின் கடிதமாகவே கருதினுர்.

மருந்து கொடுத்து விட்டு, வைத்தியர் சென்று விட்டார். பிறகு கைலாஸ் சந்திரர் சம்பு மிஸ்ரரைக் கூப்பிட்டு அவரிடம் விசுவின் ரூபம், குணம், புத்தி முதலியவற்றைப் பற்றிச் சிலாகித்துப் பேசிக்கொண்டிருந்தார்.

இரண்டு வாரங்கள் கழிந்தன. ஆயினும் கைலாஸ் சந்திரரின் ஜ்வரம் மட்டுப்படவில்லை. யாரோ ஒரு பையனைக் கூப்பிட்டு, விசுவிற்குப் பதில் எழுதச்சொன்னுர். அதில், " நான் இங்கு சௌக்கியமாய் இருக்கிறேன். கொஞ்ச நாளாக உடம்பு தள்ளவில்லை. இருந்தாலும்

கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை" என்று எழுதச் சொன்னார்.

கைலாஸ் சித்தப்பா இனிமேல் பிழைக்க மாட்டார் என்று தெரிந்ததும், ஹரிதயால் அவரைப் பார்ப்பதற்காக வந்தார். கொஞ்ச நேரம் பேசின பிறகு, கைலாஸ் தலையணைக்கு அடியிலிருந்து அக் கடிதத்தை எடுத்து, ஹரிதயாலிடம் கொடுத்து, "இதைக் கொஞ்சம் படியப்பா!" என்றார்.

கடிதம் மிகவும் அழுக்கடைந்திருந்தது. இரண்டு மூன்று இடங்களில் கிழிந்தும் இருந்தது. ஆகையால் முழுக்கப் படிக்க முடியவில்லை. ஹரிதயால் அதை முடிந்த மட்டும் வாசித்தார். "இது சரயூ எழுதியதல்லவா ?" என்று கேட்டார்.

"சரயூவின் கையெழுத்துத்தான், இருந்தாலும் விசு எழுதின கடிதம்தான் இது."

"ஆமாம், ஆனால் அவள் அல்லவா கையெழுத்திட்டிருக்கிறாள் ?"

ஹரிதயால் அளித்த இந்தப் பதில் கைலாஸ் சந்திரருக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை.

"அவளுடைய பெயர்தான் போட்டிருக்கு. அவளுடைய கடிதம்தான். சரயூதான் கடிதம் எழுதியிருக்கிறாள். ஆனால் எழுதக் கற்றுக்கொண்டதும், அவனே எனக்குக் கடிதம் எழுதுவான்" என்றார்.

ஹரிதயால் தலையை அசைத்தார்.

கைலாஸ் சந்திரர் மிகுந்த உற்சாகத்துடன் திரும்பவும் பேச ஆரம்பித்தார். "என்னப்பா, படித்தாயா? நம்ப விசு, ராத்திரி முழித்துக் கொண்டு, 'தாத்தா தாத்தா' என்று கத்திக்கொண்டு அழ ஆரம்பிக்கிறானும் அவன்

என்னை மறப்பானு, அப்பா !" கிழவரின் கண்களிலிருந்து இரண்டு துளி கண்ணீர் வந்து, தலையணையில் விழுந்தது.

வேலைக்காரி பக்கத்தில் இருந்தாள். அவள் ஹரிதயாலை ஜாடை செய்து வெளியில் கூட்டிக் கொண்டு போய், "பண்டாஜி, தாங்கள் போய்விடுங்கள். தாங்கள் இங்கு இருந்தால் நாள் முழுவதும் அவர் இப்படியே சொல்லிக்கொண்டிருப்பார்" என்ருள்.

இன்னும் நாலைந்து நாட்கள் சென்றன. அவர் உடல் நிலை மிகவும் க்ஷீணித்துவிட்டது! சம்பு மிஸ்ரர் இராப் பகலாகக் கூடவே இருக்கிருர். இன்று பகல் முழுவதும் அவருக்குப் பிரக்ஞை இல்லை. சாயந்திரம் கொஞ்சம் கொஞ்சம் ஞாபகம் வந்தது. இதற்குப் பிறகு கொஞ்ச நேரம் நினைவோடும், கொஞ்ச நேரம் நினைவில்லாமலும் இருந்தார். நடு ராத்திரியில், "கண்ணே விசு! அந்தச் சிகப்பு மந்திரியைக் கொடுத்து விடு. இல்லாவிடில் ஆட்டம் தோற்றுவிடும் போலிருக்கிறது" என்ருர்.

சம்பு மிஸ்ரர் பக்கத்தில் சென்று, "என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார்.

கைலாஸ் சந்திரர் ஒரு முறை மிசிர்ஜியின் முகத்தைப் பார்த்தார். பிறகு பயந்து போய்த் தலையணைக்கு அடியில் கையை விட்டார். அவர் ஏதோ ஒரு வஸ்துவை இழந்து விட்டது போலவும், அது இப்பொழுது மிகவும் அவசியம் போலவும், தேடிப் பார்த்தும் அது அகப்பட வில்லை போலவும் பட்டது. அவர் புரண்டு படுத்துக் கொண்டே, "கண்ணே விசு! சிகப்பு மந்திரியைக் கொடுத்து விடு. மந்திரியில்லாமல் நான் எத்தனை நாழி ஆட முடியும்?" என்ருர்.

இந்த உலகம் என்னும் சதுரங்க ஆட்டத்தில் கைலாஸ் சந்திரர், மந்திரி தொலைந்து போய்விட்டதுபோல வும், அவர் பகவானிடம் அந்த மந்திரியைக் கொடுத்து விடும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தது போலவும் இருந்தது. சம்பு மிஸ்ரர் அவர் பக்கத்தில் வந்து நின்ருர். வேலைக்காரி விளக்கைக் கொண்டு வந்து பார்த்தாள். முழி சொருகியிருந்தது. உதடுகள் மாத்திரம், மெள்ள, மெள்ள, " கண்ணே விசு ! மந்திரியில்லாமல் நான் எத்தனை நாழி விளையாட முடியும் ? கொடு அப்பா, மந்திரியைக் கொடு !" என்று சொல்லிக் கொண்டிருந்தது போல்பட்டது.

கைலாஸ் சந்திரர் பரலோகப் பிராப்தியடைந்தார் என்று ஹரிதயால் சந்திரநாத்திற்கு அடுத்த நாள் கடிதம் எழுதிவிட்டார் !

★

UNIVERSITY EXTENSION LIBRARY
14 AUG 1960
MADURAI